ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

(முந்திய "ஆநந்த குணபோதினி"யே இப்போழுது "அமிர்த குணபோதினி" என்று புதுப்பெயருடனும் புதுவிதமாக வெளிவருகின்றது.)

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.) [REGISTERED.

கமலம்-3. } சென்னை: விபவஷு புரட்டாசிமீ 1வ { இதழ்-30.
Vol. 3. } 1928-ம்ஷு செப்டம்பர்மீ 15வ { No. 30.

ஆநந்த தரிசனம்

"அம்பிகையை அநுதினமும் போற்று." எந்த நாளிலும் பரமேசுவரியை மறவாமல் தியானிப்பவர் நல்ல புத்தியும், வித்தையும் ஸம்பத்தும், ஞானமும் பெறுவர். முற்காலத்திலிருந்த மகா கவியான காளிதாஸன் பிரதி நித்யமும் அம்பிகையின் கோயிலுக்குச் சென்று தியானியாமலிரான். அதனால் அவனுடைய கியாதி எங்கும் பரவியது. ஜகன்மாதாவே ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி என்னும் மூன்று விதங்களாய் ஸர்வ ஜனங்களாலும் போற்றப்படுகின்றார். ஒவ்வொரு வருஷத்திலும் புரட்டாசி மாதத்தில் ஒன்பது தினங்கள் அம்பிகைக்குறிய தினங்கள். அதையே நவராத்திரி யென்கிறோம். விஜய தசமியையும் கூட்டித் தசரா பண்டிகை யென்று ஸகலரும கொண்டாடுகிறார்கள். வங்கதேசத்தில் இப்பண்டிகை வெகு விமரிசையாய் ஆசரிக்கப்படுகிறது. இந்த ஒன்பது நாட்களிலேனும், ஈசுவரியை சிரத்தையோடு தியானிப்பதும், அதற்காக வேறுவித கவலைகளின்றி யிருப்பதும் ஆவசியகம். நமது நேயர்களெல்லோரும் ஸர்வ ஸந்தோஷங்களையுமடைந்து, இப்பத்திரிகையும் நீடித்து வாழுமாறு நவராத்திரி காலத்தில் ஸதா பரமேசுவரியைத் தியானிப்போமாக.

***

"புன்னகை யொளிர்வதனம்" மனிதனுடைய மனம் ஸதா ஆநந்தமாயிருக்கவேண்டுமெனில், ஆரம்பத்தில் சிரிப்பைக் கற்றுக்கொள்ள வேண்டும். சிரிப்பானது உத்தமமான ஔஷதத்தைவிட உயர்ந்தது. எப்போதும்

சிரித்த முகத்தோடும் இனிய சொல்லோடும் பிறர் முன்னிலையில் வரவேண்டும். மனதுக்குத் துன்பத்தை தேடுவதில் கோபத்தைவிட மேலானதொன்றுமில்லை. ஹிருதயம் கெடாதபடி வித்தியா ரஸத்தால் சுத்திசெய்யவேண்டும். தேனில் போட்ட பழத்தைப்போல் மனிதனுடைய ஹிருதயம் கருணாரஸமா யிருக்கப் பிரயாஸைப்படுவது அவசியம். எவரையும் நோகப் பேசலாகாது. பிறரது கோபத்துக்கு உன் புன்னகையே பதிலாக இருக்க வேண்டும். உலகத்தில் உத்கிருஷ்டனென்று பெயரெடுத்து வாழ்பவனே ஸுகசாலி. மனோநிலையை மனிதன் பத்திரப்படுத்தவேண்டும். ஒரு சமயம் அறியாமல் கெட்ட நினைவு தோன்றினாலும், அதை உடனே பரிகரித்து ஈசுவர நாமத்தை ஜபிக்கவேண்டும்.

* * *

"பக்தி செய்தால் முக்தி எய்தும்." கடவுளின் நாமத்தை யுச்சரிப்பதே மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைக் கூட்டுவிக்கும். முற்காலத்திலிருந்த ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் தமது வைஷ்ணவ மதத்தைப்பற்றி எங்கும் பிரஸங்கம் செய்கிறதில்லை. யாரேனும் அவரிடம் மோக்ஷத்துக்குறிய மார்க்கம் என்னவென்று கேட்பின், ஸ்ரீ கிருஷ்ண ஸ்மரணை செய்வதுதான், அதைத் தவிர வேறு வழியில்லை யென்பார். இந்த உபதேசமொன்றையே உறுதியாக நம்பி ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவருக்கு சிஷ்யர்களாய் ஹரி ஸ்மரணையை விடாது செய்து ஸர்வ ஸந்தோஷங்களையும் அனுபவித்தனர். சைதன்யர் மந்திரவாதியல்ல தந்திரவாதியல்ல. அவருக்கு வைத்தியம் தெரியாது. எந்த வித்தையும் தனக்குத் தெரியுமென்று அவர் சொல்லிக்கொள்ளவுமில்லை. பக்தி யொன்றைமட்டும் கைவிடாது அனுஷ்டித்துவந்த மகிமையால் அவரைத் தரிசித்த அநேக நோயாளிகள் தங்கள் வியாதி தீர்ந்து ஸௌக்கியமடைந்தனர். பல ஜனங்கள் பிராதக்காலத்தில் சைதன்யரின் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து இஷ்ட ஸித்தியை யடைந்தனர். இவ்வளவு மகிமையும் பக்தர்களுக்கு உண்டாவதால், நாம் பிரதிதினமும் பகவந்நாம ஸ்மரணையைச் செய்துய்வோமாக.

* * *

"பார்க்குமிடமெல்லாம் பாமன்காணம்மானே" கபீர்தாஸ் என்னும் பக்தருக்கு தாம் காண்பதனைத்தும் பகவத் ஸ்வரூபமாகவே தோன்றியது. ஒரு தினம் ஆகாரத்தின் பொருட்டு வைத்திருந்த ரொட்டியை ஒரு நாய் கௌவிக்கொண்டு ஓடியதைக்கண்டு கையில் நெய்யை யெடுத்துக்கொண்டு அதன்பின்னே தொடர்ந்து, "ஸ்வாமி, தாங்கள் ரொட்டியை மட்டும் கொண்டுபோகிறீர்கள், அதற்குவேண்டிய நெய்யும் கொணர்ந்திருக்கிறேன்; தயைசெய்து ஏற்றுக்கொள்ளவேண்டும்"—என்றார். உடனே பகவான் கருணை கூர்ந்து ஆகா! உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் என் ஸ்வரூபமாகப் பாவிக்கும் உண்மையான இந்த பக்தனை இனி சோதிக்கலாகாதென்று தக்ஷணமே தம்முடைய திவ்ய தரிசனத்தைத் தந்தருளினர், பக்தி

உலக அநுபவங்களில் பழகிய ஒருவனை நல்ல மனத்தோடிருந்து மயக்க முடியுமேயன்றி, கபட சிந்தையுடன் எவ்வளவு நல்ல வார்த்தைகளைக் கொட்டினாலும் அவன் நெருங்கிச் சேரான். தூர இருந்து உறுமியே நிற்பான்

மார்க்கத்திலும் திவ்ய ஞானமுண்டாகுமென்பதற்குக் கபீர்தாஸின் காரியமே தகுந்த உதாரணமாகும். ஈசுவரன் எங்குமிருக்கின்ருர் என்ற ஞானமுண்டாலு லன்றி சிறந்த பக்தியுண்டாகாது.

***

"கண்டதுகற்கப் பண்டிதனுவான்" என்பதுபோல ஒவ்வொன்றையும் நெடுக ஆராய்ச்சி செய்யின் கடைசியில் உண்மை புலப்பட்டுவிடும். உலகத்தில் ஐசுவரியமானது மனிதனுக்கு ஸந்தோஷத்தைத் தருகிறது. அந்த ஐசுவரி யத்தைவிட மேலானவன் புத்திரன். ஏனெனில் புத்திரனுக்கு நேரும் வியாதி யைப் பரிகரிக்கவேண்டி ஐசுவரியத்தைச் செலவிடுகிரும். தீப்பற்றிய வீட்டில் புத்திரன் தன்னைத் தொடர்ந்து வருவானென்று நம்பி முன்னதா கத் தன் சரீரம் தப்பினுல் போதுமென்று ஓடுவதுண்டு. ஆகவே, புத்திரனை விட தன் சரீரமே பிரீதிகரம். அந்த சரீரத்தில் தூசிகள் படும்போது கண் களை மூடிக்கொள்ளுகிரும், ஆதலின் சரீரத்தைவிட இந்திரியங்களே மேம் பட்டவை. கண்ணைப் பறிகொடுத்தேனும் உயிர் தப்பவேண்டுமென்று நினைக்கிரும். இதனுல் இந்திரியங்களைவிட பிராணுதிகளே சிறந்தவையாகின் றன. பிராணன் போகும்போது அனைத்தையும் விட்டுவிடுகிரும். அப்போது மற்றவைபோல் நசிக்காமலிருப்பது ஆத்மா ஒன்றுதான். எனவே, ஆத்மா தான் ஸர்வ சிரேஷ்டம். ஆத்மானந்தம் பரமாத்மாவின் தியானமொன்றினுல் மட்டுமே ஸித்திக்கும்.

***

"ஞானி, அஞ்ஞானி" ஞானிக்கு உண்டாகும் ஆசையை வறுத்த விதைக்கும், அஞ்ஞானிக்கு ஜனிக்கும் ஆசையை வறுக்காத விதைக்கும் உவமையிடலாம். வறுத்த விதையானது மறுபடி முளைக்கும் சக்தி யைப் பெற்றிலது. அதுபோல் ஞானிக்குப் போகம் வரினும் அனுபவித்த பின்னர் அடங்கிப்போம். மறுபடியும் அதில் மனம் பிரவர்த்திக்காது. வறுக்காத விதை முளைக்கும் தன்மையுடையதுபோல் அஞ்ஞானிக்கு உண் டாகும் ஆசை அனுபவித்த மாத்திரத்தில் அடங்காமல் மேன்மேலும் பெருகும்.

ஜன்மாந்திரம் உண்டென்று நம்பாதவர்கள், புண்ய பாபங்களுக் குப் பயப்படமாட்டார்கள். போன ஜன்மத்தில் செய்த புண்யத்திற்கேற்ற நல்ல பலனையும், பாபத்துக்கேற்ற கெட்ட பலனையும் இந்த ஜன்மத்தில் அனுபவிக்கிருமென்று நினைப்போர் அடுத்த ஜன்மத்திலேனும் நல்ல சுகத்தை யடைய வெண்ணிப் புண்ய காரியங்களையே செய்யத் தொடங்கு வர். அதின்றி இனி மறு ஜன்மமில்லை யென்று தப்பிதமாய் நினைப்போர் இராக்கால முண்டாகாதென்று நம்பி இருளில் அவஸ்தைப்பட்டுத் திருடர் களிடம் பொருளைப் பறிகொடுத்தேங்கி நிற்கும் மூடர்களை யொப்பாவர்.

***

"நல்லவனும் கெட்டவனும்" ஒரு மனிதன் சிலருக்கு நல்லவனுகவும், சிலருக்கு பொல்லாதவனுகவும் தோன்றுகிருன். இது யாருடைய குற்றம்?

பொய்யான தடபுடல் விளம்பரக்காரன் மற்ருெரு பொருளுக்கு மீண்டும் விளம்பரம் செய்யவரான். மோசம்போன ஜனங்கள் அவனை மதிப்பதில்லை.

அவனது அறிவே இவ்விதம் செய்கிறது. நல்ல கண்ணாடியில் முகம் விகாரமின்றிக் காணப்படும். கெட்ட கண்ணாடியில் முகம் விகாரமாய்த் தோன்றும். துஷ்ட ஸ்வபாவமுள்ளவர்கட்கு நல்லவர் பொல்லாதவராய்க் காணப்படுவர்.

***

"மாம்ஸ பிண்டங்கள்" சில இடங்களில் ஊர்கோலம் வரும்போது இரண்டு பூதங்கள் புறப்படுவதுண்டு. இவற்றைத் தூரவிருந்து புதிதாய்ப் பார்ப்பவர்கள் பயப்படக்கூடும். அருகில் வந்தால் இந்தப் பூதங்களைத் தூக்கிக்கொண்டு கூத்தாடுவோர் சிறிய மனிதர்களென்று புலப்படும். பயமும் நீங்கும். இதைப்போல் அணுவிலும் அணுவாகிய ஜீவாத்மா சில வேளைகளில் பெரிய உடல்களைத் தூக்கிக்கொண்டு நல்லோர் பெரியோரைப் பயமுறுத்துகிறது. இவை மாம்ஸ பிண்டங்களென்று அறிந்தால் பயம் நீங்கிப்போம்.

***

"சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" ஆகாசத்தைப் பார்த்தால் அதி ஸமீபமாய் இருப்பதுபோல் காணப்படுகிறது. அதைக் கொஞ்சதூரம் சென்று பிடித்துவிடலாமா வென்று நாம் எத்தனை முறை ஆலோசித்திருக்கிறோம். ஆயினும் அதை எட்டிச் செல்லுந்தோறும் ஆகாசமும் உயர்ந்து போய்க்கொண்டேயிருக்கிறது. இதைப்போல் ஸாதுக்களின் பெருமையைக் குறைத்துவிடுவது துஷ்டர்களுக்கு சுலபமாய்த் தோன்றும். ஆனால் அவர்களை அவதூறு செய்யுந்தோறும் பெருமை விருத்தியாய்க்கொண்டே வரும். இதற்குக் கரும்பை உதாரணமாகக் கொள்ளலாம். கரும்பை ஆலையில் வைத்து நெருக்கினால் சாறுவடியும். அதன் ருசி அதிகமே. அந்த சாற்றைப் பிறகு காய்ச்சினால் பாகாகும். அப்போது இன்னும் ருசி அதிகப்படும். அந்தப் பாகை வெல்லக்கட்டியாக்கி சர்க்கரையாகத் தேய்த்தால் முன்னிலும் சுவை அதிகம். அந்த சர்க்கரையை மறுபடி காய்ச்சி கற்கண்டாகச் செய்தால் சொல்லரிய ருசி ஏற்படும். இதைப்போல் மந்தமதிகள் உத்தமர்களை அவதூறு செய்யுந்தோறும் அவர்களின் ஸத்குணம் பிரகாசப்படுமே யன்றி வேறில்லை.

***

"நல்லது இருக்கச் சேத்தையை நாடுவதேன்?" புலியோடு போர் செய்யும் மல்லர்களுளர். கரடியோடு மல்யுத்தம் செய்யும் வீரர்களுளர். இவர்கள் மேற்கண்ட மிருகங்களை வெல்வதனால் தங்களுக்கிருக்கும் சரீர பலமும் தைரியமும் பிரகாசமாகி கீர்த்தி பெருகுகின்றது. இவ்விதமின்றி நாய் நரிகளுடன் எதிர்ப்பின் அவர்கள் வீரர்களாவரோ? அதுபோல தனக்கிருக்கும் புத்தியை ஸத்விஷயத்தில் பயன்படுத்தி பகவானுடைய அநந்தமான கல்யாண குணங்களைச் சொல்லி அவருடைய ஸகஸ்ர நாமங்களை உச்சரிப்பதன்றோ மேன்மை. இவ்விதமின்றி எப்போதும் தெய்வ நிந்தனை, ஆசாரிய நிந்தனை, ஸ்திரீ நிந்தனை முதலிய பாபங்களைச் செய்யும் அதர்மிகளாகிய நராதமர்களை என்னவென்று வர்ணிப்போம்? இவர்கள் புத்தி படைத்துப் பயனென்ன?

நாஸ்திக வேதாந்திகள் எந்த விஷயத்திற்கும் தங்கள் அபிப்பிராயத்தைக் கொடுத்துப் புத்தி சொல்லவந்து விடுகின்றனர். வெகு தந்திரமான வேலை.

"கனியிருக்கக் காயை உண்பதேன்?" குற்றமில்லாத கடவுளினுடைய புஷ்பத்துக்குச் சமானமாகிய பாதங்களை நித்தியமும் பணிந்து, அழிவில்லாத சுகத்தை அடையாமல், அழிந்து போகிற—இப்பூலோக வாழ்வில் சுழன்று திரிதல், எத்தன்மை யென்றால் அழகிய பொன்னாற்செய்த சிம்மாசனத்திலேறி அரசால்வதைவிட்டு, கொலையுண்ணுங் கழுமரத்தில் ஏறுவதற்குச் சமானமா மென்க. இக்கருத்தை அடியில் வரும் பாடலில் நன்கு காணலாம்.

மாசறு கடவுள்பாத மலரிணைத் தினமும் போற்றிப்
பாசமில் சுகம் பெறுமற் பவஞ்சத்து டுழலல்பைம்போ
னாசனந் தன்னிலேறி யரசுசெய் தகையை நீத்துக்
காசனக் கழுவிலேறுங் கயமையே கடுக்குமாதோ

ஒப்பாரி அன்பின் ஓயாத அழுகை!

சென்னையி லிருக்கிறவர்கள் நடுவழியில் தஞ்சையிலிருக்கிற பிணியாளியைப் பார்க்காமலே மதுரைக்குப் போய்விடுகிறது. பிறகு நடுவில் இறங்கமுடிய வில்லையென்று வெகு உருக்கமாய் கடிதம் எழுதுகிறது. பின்பு தஞ்சைப்பிணியாளி போய்விட்டதாக ஒரு ரூபா தந்தி வந்தால், உடனே புறப்படாமல் அரையணா செலவில் கருமகிரியைக்கு வருவதாக எழுதுகிறது. அதற்குங்கூட வராமல் ஒரு மாதத்திற்குப் பிறகு துக்கம் விசாரிக்க வந்து கொஞ்சம் ஒப்பாரி அழுது விட்டு, ரயிலுக்கு வரும்படி கடிதம் எழுதியும் எவரும் வரவில்லையே என்று சலித்துக் கொள்ளுகிறது. இதற்குமட்டும் சலித்துக் கொள்ளத் தெரிகிறதே தவிர, தான் வரத்தவறியவைகளை மட்டும் நினைத்துப் பார்ப்பதில்லை. அன்பு நெஞ்சிலிருந்தால் நடுவழியில் தஞ்சையிலிருந்த பிணியாளியைப் பார்க்காமல் சென்னையிலிருந்தும் நேரே மதுரைக்குப் போய்விட மனம் வருமா?

எவ்வளவுக் கெவ்வளவு ஒரு நூலாசிரியர் ஒரு நூலை எழுதத் தாமதம் செய்கின்றாரோ, அவ்வளவுக் கவ்வளவு அவர் வெகு கஷ்டப்பட்டு யோசிப்பவராயிருந்து நேர்த்தியான முறையில் நூலைத் தயாராக்கப் பார்ப்பார்.

ஒரு நாட் பொழுது நல்லவிதமாய்ப் போவதற்கு வீட்டுக்காரன் எவ்வளவு பணமும் பாடும் செலவிட வேண்டியவனா யிருக்கிறான்? யோசி.

'செய்து செய்து செல்லரித்ததல்லால் செழுமை யுணர்கிலேன், நற்பெயருங் காண்கிலேன்'—என்று நோகிறார் ஒரு ஸம்சாரி.

அமிர்தகுணபோதினி

விபவஃ புரட்டாசிமீ 1௨

சக்தியை எவ்வாறு பிரயோகிப்பது?

ஆரம்பத்தில் ஒவ்வொருவனும் தன் சக்தியைத் தானே உணரல்வேண்டும். சக்தியைப் பெருக்கவேண்டும். சக்தியை விநியோகிப்பதில் அடக்கமான தன்மை வேண்டும். எத்துணை ஆக்கிரகம் மூட்டப்பட்ட காலத்தும் தன் சக்தியைத் தன் கைக்குள் நிறுத்தி பொறுமைப்படக் கற்க வேண்டும். சக்தியைத் தான் ஆண்டு செலுத்த வேண்டும். சக்தியைப் பிரயோகிப்பது ஒரு நன்மை பயத்தற்கென இருக்கவேண்டும். அனுவசியமாகத் தன் சக்தியை வீண் செய்யக்கூடாது. பிறருக்குத் துன்பம் விளைக்கும் வழியில் எந்நாளும் தன் சக்தியைப் பிரயோகிக்க வொண்ணாது. பாப மார்க்கத்தில் தன் சக்தியை ஒருபோதும் செல விடக்கூடாது. தர்மத்தை போஷணை செய்வதில் தன் சக்தியை உபயோகிக்கலாம். கற்பைக் காப்பதில் தன் சக்தியைப் பிரயோகிக்கலாம். ஒரு ஆபத்தான காலத்தில் தன் சக்தி அவ்வளவையும் செலவிட்டுவிடலாம். இன்னொரு உயிரைக் காக்கும் விஷயம் தன் சக்தியைக் கொடுக்கலாம். பிராணன் பிரிவதாயினும் ஒரு உத்தம விஷயத்தில் தன் சக்தியைத் தன்னால் இயன்றவரைக்கும் செலுத்தலாம். சக்தியை நெடுகச் சேர்த்துவைத்து ஒரு பிரதான விஷயத்தில் அதனைப் பயன்படுத்தப் பழகவேண்டும்.

சக்தி பெறாதவன் மனுஷ்யனல்ல. அவன் கட்டுக்கதை யொன்றில் தோன்றுதற்குக்கூடத் தகுதியற்றவன். ஆளும் சக்தி யில்லாதானுக்கு அழகிய இல்லாள் படைத்து என்ன பயன்? அதனால் நேர்வது துன்பமே. தனக்கென்று ஒரு ஜீவனார்த்த சக்தியைப் பெறாதவன் விவாகம் செய்துகொண்டு என்ன பயன்? நடிக்கும் சக்தி யற்றவனுக்கு நாடக அரங்கத்தில் என்ன வேலை? சக்தி கொள்ளாத ஒரு ஜன ஸமூகம் ஜீவித்தென்ன?—மாய்ந்தென்ன?

தனது ரகசிய நாயகன் வெளிவிருந்து வருகிறானென்றால், அவன்மீது அப்பெண்ணுக்குப் பிரீதி இருக்கும்வரை அவனை வரவேற்றுக்கொள்ளுதல் வெகு விமரிசையும் சிறப்புமாய் இருக்கும். பிரீதி தவறினோ——?

சக்தி எவருக்கும் இல்லாமற் போகவில்லை. எவ்வளவு பலஹீனனுக்கும் ஒரு புதிய சக்தி மறைந்திருக்கவே செய்யும். எத்துணை அங்கப்பழுதுள்ளவனாயினும் அவனுக்கும் ஒரு தனித்த சக்தியுண்டு. சக்தியில்லை யென்று சொல்லவேண்டாம். துணிவுடன் எழுந்திருக்கையில் அந்த சக்தி தனக்கிருப்பதை ஒவ்வொருவனும் உணர்வான். ஒருவகையான சக்தியில் பழுதுற்றாலும், இன்னொரு வகையான சக்தியில் அந்தப் பழுதற்ற சக்தியும்கூடி இரட்டித்துப் பெருகி நிற்கும். சக்தியே யில்லாதவர் எவரும் உலகில் இல்லை. ஆனால், **தன் சக்தியைத் தான் கண்டுகொள்ளாத அறியாமையே சக்தியை இழந்து தவிப்பதின் காரணமாம்.** ஒவ்வொருவனும் தன் சக்தியை யறிந்து அதைப் பயிலத் தொடங்கிவிட்டால் அவன் ஒரு வீரனாகிவிடுவான். தன் சக்தியைப் பாராட்டுபவன் தாராளமாய்க் கைவீசிச் செல்லுவான். சக்தியுள்ளவன் செய்யும் வணக்கத்தில்தான் அழகும் கம்பீரத்துவமும் ததும்பி நிற்கும். சக்தியை யுணராத பேதையோ ஒருவனின் காலில் வீழ்ந்து பணிவது அவனது அடிமைத்தன்மையான புத்தியையே குறிக்கும்.

தன் சக்தியை யறிந்தவன் எதிலும் துணிந்து நிற்பான். கடைசிவரைக்கும் சென்று முயன்றிடுவான். சக்திவந்தனான ஒருவன் ஒரு குதிரையின்மீது ஏறுகையிலேயே அவனது தீரத்துவம் தெரிந்துவிடும். தன்னை நன்கு நடத்திச் செலுத்தத் தகுந்தவனே தன்மீது ஏறிச் சவாரி செய்கிறானென்பதை அக்குதிரை அக்கணமே அறிந்துகொள்ளும். அவனுக்கு அது அஞ்சி நடக்கும். அவனது கட்டளைகளின்படி செல்லும். அது ஒருபோதும் அவனைப் பள்ளத்தில் தள்ள முயலாது. ஏன்? தன் சக்திக்கும் மேற்பட்டது அவனது சக்தி யென்பதை அது தெரிந்துகொண் டிருப்பதினால் தான். மேலும் சக்திவந்தனொருவன் தன்மீது சவாரிசெய்கிறானென்பதில் குதிரைக்கும் ஒரு திருப்தியான சந்தோஷம்.

சவாரி செய்யும் சக்தி தனக்கு இல்லை யென்பவனையும், தன் சக்தியில் சந்தேகிப்பவனையும் அச்சம் எனும் பேய் விழுங்கிவிடும். குதிரையும் அப்பேதையைக் கீழே வீழ்த்திவிடும். அவனும் தவறிச் சாய்ந்து மிதிபடுவான். சக்தியில்லாதவனை எந்த நங்கையும் விரும்பாள். சக்தியற்றவனைத் தெருத்திண்ணையிலே யிருத்தி எச்சிற் சோற்றைப் போடுவர். சக்தியுள்ளவனுக்கோ வீட்டுக்குள்ளே சாப்பாடு ; சக்தியற்றவனையோ உலகமே பரிஹஸிக்கும்.

ஒவ்வொரு வீட்டிலும் வீட்டுக்காரனையன்றி வேறு இரண்டொரு முக்கியஸ்தர்கள் உண்டு. அவர்களுக்கு விருப்பமில்லாத நிலையில் அந்த வீட்டில், வீட்டுக்காரனே சம்மதித்தாலும் கூட ஒரு நொடிப்பொழுதேனும் அங்கு தங்கியிருக்க முடியாது. இது ஒரு கண்டறிந்த அநுபவ ரகசியம்.

சக்தி என்பது முரட்டுத்தனமான பலம் அல்ல; தேகவலிமையுமன்று. ஆத்ம சக்தியில்லாவிடில் சரீரத்திடன் இருந்தும் பயனில்லை. ஆன்ம சக்தி கூடிவராமல் சரீர சக்தி அமையப்பெறுது பெறினும், அது அதர்மத்தில் தான் கை நனைக்கும். தீவிரத்தில் அழிந்து படும். ஆன்ம சக்தியால் அடக்கியாளப்பட்ட சரீர சக்தியைக் கொண்டிருப்பவனே உண்மையில் வலிமைபடைத்தோனுவான்.

தன் சக்தியின் திறத்தையேனும், தன் சக்திக் குறைவையேனும் எவனும் வெளியிட வொண்ணுது. அது தனக்குள் அந்தரங்கமா யிருக்கவேண்டும். தருணம் நேர்ந்துகொள்ளுந்தனையும் தன் சக்தியைக் காட்டக்கூடாது. ஆனல், தனது சக்தியில் மற்றவர்க்கு ஒரு அச்சம் உதிக்கும்படியான ஒரு தன்மையைமட்டும் தான் புலப்படுத்திக் கோள்ளவேண்டும். இவ்விதமே தன் சக்தியிலுள்ள குறைபட்ட அம்ஸங்களைத் தன்மட்டில் உணர்தல் வேண்டும். உணர்ந்து அவற்றைக் களைந்து செம்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். அந்த சக்திக்குறைவைப் பிறர் அறியும் வண்ணம் விடப்படாது. அதை அங்கு மறைத்து விடவேண்டும். வெளியிடப்பட்ட எந்த ரகசியமும் என்ருவது ஒருநாள் அது பகிரங்கமே பெறும்.

திடீரென்று விருந்தினர் வந்து விடுகின்றனர். தங்களை உபசரித்து நடத்த அவனுக்கு சக்தி யுண்டென்று அவர்கள் நம்புகின்றனர். தன்னிடம் அந்த சமயம் அரைக்காசுக்கும் வழியில்லாத பல ஹீனத்தைத் தான் காட்டிக்கொண்டு விடக்கூடாது. அது தனக்கு மட்டும் தெரியட்டும். பிறரது பார்வையில் எதையும் அலக்ஷியமாய் சமாளிக்குந் திறனுள்ளவனுகவே புலப்படுத்திக் கொள்ளவேண்டும். அந்தரங்கத்தில் கடனே 'உடனே' பட்டு வெளிக்குத் தன் கைப் பணத்திலிருந்தே யாவும் நிர்வகிப்பதாய் உணர்த்தி விடவேண்டும். இவ்விதமே, தனக்கு நிர்வாக சக்தி யுண்டென்று தன்னை ஒரு காரியஸ்தலத்தில் நிர்வாகஸ்தனுக—மானேஜராக—பிறர் நியமிக்கும் போது, அக்காரியஸ்தலத்தின் முன்பின் விவரம் ஏதும் உணராத தனது பலஹீனத்தை வெளியிட்டுவிட வொண்ணுது அக்குறைவு தனக்குள்மட்டும் இருக்கவேண்டும். வெளிமுகத்தில் எல்லாம் அறிந்த தன்மையாகப் புலப்படுத்திக்கொண்டு சூட்சுமபுத்தியுடன் தொழில் முறையின் ரகசியங்களைக் கிரகித்துத் தனது குறைவுபட்ட சக்தியைப் பூர்த்தி செய்துகொண்டுவிடவேண்டும். இவ்விதம் அந்தரங்கத்தில் திருத்திக்கொண்டு, தனது நிர்வாகத்தையும் பிறர் வியந்து போற்றும் வண்ணம் நடத்திச் செலுத்தவேண்டும். பிரபல அறிவாளியாக விளங்குமொருவன், தன்னை உயர்தரமான கல்வி கற்ற

"வாட் ஸார்" (What Sir) என்ருல் 'என்ன ஐயா?' சிரிக்காதீர்கள், அர்த்தம் சொல்லுங்கள். மறுபடியும் 'என்ன ஐயா' என வேண்டாம்,

பெரியோராகப் பிறர் மதிப்பதை அவ்வண்ணமே பெருகிவர விடவேண்டும். தான் ஆதியில் திண்ணைப் பள்ளிக்கூடத்திலோ, மூன்றாம் வகுப்பு வரையுமோ பயின்றுள்ள அந்தரங்கத்தை வெளியிட்டுவிடக்கூடாது. அந்தப் புகழ்ச்சிக்கும் ஏற்றத்துக்கும் உரித்தாகும்படியான சக்தியைக் கொண்டுவிடவேண்டும். இதுதான் சக்தியை வளர்ப்பதும், அதை அந்தரங்கமாய்ப் பாதுகாப்பதுமான மர்மமாகும். எதுவும் தன்னால் இயலுமென்றும், ஒரு கை பார்ப்பதென்றும் துணிந்துவிடுகிற ஆரம்பசக்தி தோன்றியவுடன், அதனைத் தொடர்ந்துநிர்வகிக்கும் சக்தியும் தன்னிலேயே உதித்துக்கொள்ளும்.

சக்தி சித்தி பெறுவதற்கு வழி யாது? அன்பும், ஸாந்தமும் உண்மையும், அஹிம்ஸாதர்மமுமே. மூர்க்கத்தனமும், ஹிம்ஸையும் பொய்யும் காரியத்தைக் கெடுத்துவிடும். சக்தியின் வீர்யத்தைக் குலைத்துவிடும். ஒருவன் வர்த்தகம் செய்ய விரும்புகிறான். முதலாவதாக, இவ்விருப்பத்தை உறுதிபடுத்தும் சக்தி வேண்டும். இரண்டாவதாக, அவ்வியாபாரத்தை நிர்வகித்துப் பயிற்சி பெறவேண்டும். மூன்றாவதாக, அவ்வியாபாரத்துறையில் அன்பும், ஸாந்தமும், சத்தியமும் பிரகாசிக்கவேண்டும். நான்காவதாக, வியாபார ரகசியங்களைக் கௌரவமாய்ப் பாதுகாக்கவேண்டும். ஐந்தாவதாக, தனக்கு முன் சென்று அனுபவப்பட்டவர்களின் அறிவைப்பெற்று அவர்கள் தவறி வீழ்ந்த படுகுழிகளில் தான் வீழாவாறு செம்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆறாவதாக, எத்துணை விக்கினங்கள் வரினும் சோர்வுறாது தனது ஆரம்ப லக்ஷ்யத்தை இறுதிவரைக்கும் பற்றிச் சென்று தனது முழு சக்தியையும் பிரயோகித்துச் சித்திபெறவேண்டும். உலக வாழ்வின் சகல பகுதிகளிலும் இந்த ஆறு வகையிலும் சக்தியைப் பிரயோகிக்கவேண்டும். அதுவே வெற்றிக்கு மார்க்கம்.

ஒருவரையொருவர் அடித்துக்கொண்ட இரு குழந்தைகளை சமாதானப்படுத்துவதில் மூர்க்கத்தையும் கொடுமையையும் உணர்த்துவதைவிட, அன்பும் சாந்தமுமான வழியில் தன் சக்தியைப் பிரயோகிப்பது அதிக பலன் தரும். மூர்க்ககுணம் சக்தியின் உயர்வினைச் சிதைக்கும். அன்றியும், அது சக்தியைத் துர்விநியோகப் படுத்துவதாகும். அன்பும் ஸாந்தமுமே சக்திக்கு வலிவுதரும் பெரிய கருவிகள்.

ஒரு குடும்பத்தலைவன் தன் சக்தியைக் கொடுமை, மூர்க்கம், ஹிம்ஸை வழியில் செலுத்தின் குடும்பம் பிளவுபட்டு க்ஷேமம் கெடும். அன்பும் ஸாந்தமும் ஸசிப்புமான சக்திமுறையே குடும்ப கௌரவத்தைக் காத்துப் புனிதப்படுத்தும். ஒரு விவாகத்தை நடத்துவோரும் கொடுமை, எதிர்ப்பு, முறையில் தமது சக்தியைப் புலப்படுத்தின்

நீ மட்டும் படிப்பதற்கென்று உனக்கு இரவல் கொடுத்ததா? நீ ஊராருக் கெல்லாம் மேயவிட்டுப் புஸ்தகத்தைப் பாழாக்குவதற்காக இரவல் தந்ததா?

விவாகபங்கம் ஸம்பவிக்கும். அன்பும், ஸாந்தமும், ஸகிப்புமே விவாகத்தைப் பூர்த்திசெய்விக்கும். அன்பு, பணிவு, அமைதி இவைகளே சக்திக்கு ஆணிவேருகும்.

'ஸத்தியாக்ரஹம்' என்பது என்ன? சக்தியை ஒழுங்கானதும் நேரானதுமான வழியில் செலுத்துவதாகும். பிரதமத்தில் தன் சக்தியிலே ஒரு நிச்சயம் பெறவேண்டும். தனக்கு சக்தி உண்டென்ற அறிவு படைக்கவேண்டும். தனது கோரிக்கைகள், லக்ஷியங்கள் பரிசுத்தமானவையாவென்று கண்டுகொள்ளவேண்டும். பின் அவை சித்திப்பதற்குத் தன் உடல், பொருள், ஆவி மூன்றினையும் அர்ப்பணம் செய்யும் தியாக சிந்தை மேலோங்கவேண்டும். அதற்காக சக்தியைப் பிரயோகிக்கும் துறையிலே அஹிம்ஸாதர்மம் பிரதானமாய் வேண்டும். பிறரைத் துன்புறுத்துகை, மூர்க்ககுணம், எதிர்ப்பு, அடங்காமை, ஜீவ நஷ்டம், பொருள் நஷ்டம் முதலியவற்றைக் கனவிலும் கருத வொண்ணது. ஒரு கன்னத்தில் அடிக்கவரின் மறு கன்னத்திலும் அடித்து ஆத்ம திருப்தி பெறுமாறு வேண்டிக்கொண்டிடுக. தனது அபீஷ்டம் சித்தி பெறுந்தனையும் ஒத்துழைக்காமல் விலகி நிற்பதில் தனது சக்தியைத் திடப்படுத்திக்கொண்டு, பிறர் மனம் உருகிவிடச் செய்யவேண்டும். எல்லாக் கஷ்டங்களையும் சகித்துத் தாங்கவேண்டும். இவ்விதமான ஸத்யாக்ரஹம் எத்துணை அரிய காரியத்தையும் பிறகு வெற்றியுடன் முடிக்கவைக்கும்.

பார்டோலியின் சக்தியாக்ரஹ வெற்றியை நமது நினைவில் கொள்ளக்கடவோம். அரசினர் விதித்த அதிக வரியைச் செலுத்த மறுத்து, தங்கள் நிலங்கள் முதலிய யாவற்றையும் அதிகாரிகள் ஜப்தி செய்துகொள்ள விட்டுவிட்டு, எத்துணையோ துயரங்களுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாகியும், இவ்வளவு சோதனைகளிலும் தங்களை ஹிம்ஸித்தவர்களின்மீது ஒரு துரும்பைக்கூட எடுத்தெறியாமல், எவருக்கும் எத்துன்பமும் விளைக்காமல், எதிர்த்தவரையும் எதிர்க்காமல், மற்றொரு கன்னத்திலும் அடிக்கும்படி வேண்டிகொண்டு, தர்மமே ஜெயமென்று ஸாந்தமும் அமைதியுமாய் நின்றனர். இந்நிலையில் கலகம் என்பது எது? கலகமில்லையாகில் படைகள் வந்து என் செய்ய? இறுதியில் பம்பாய் அரசினரும் மனமிளகி பழய வரியையே செலுத்தும்படி செய்து, பறிமுதலான நிலங்கள் முதலிய யாவற்றையும் திருப்பிக்கொடுத்து, இதன் சார்பாகச் சிறைவாசம் சென்றவர்களையும் விடுத்துவிட்டனர் இதுதான் சக்தியைப் பிரயோகிக்கும் உன்னத விதமாம்.

இதே ஸத்தியாக்கிரகத்தைத் தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளர்கள் தொடங்கி வேலை நிறுத்தம் செய்தனராயினும், கொடுமை,

---

கல்யாணத்திலே மணப்பெண்மீது நோட்டஞ் சொல்வோரெல்லாம் பின் அவள் வீட்டு எஜமானியான பின்பு வாயைப் பொத்திக்கொள்வர்.

எதிர்ப்பு, சேதம், உயிர்நஷ்டம் முதலிய அதர்மத்துறையிலே சென்று ஸத்தியாக்ரஹத்தின் பரிசுத்தத் தன்மையைப் பாழ்படுத்தி விட்டனர். அதன்முடிவு தோல்விக்கிடனுயது. இத்தவறுதலின் விளைவு சக்தியைப் பிரயோகிப்போருக்கு ஒரு நற்பாடமாகும். மனஸ்தாபப்படு—ஆனுல் தீங்கு நினையாதே. சம்பளம் போதாதென்று மறுத்துவிடலாம்—ஆனுல் வேலையை விட்டுவிடாதே. வேலையிலிருந்துகொண்டே, வேலை செய்தபடியே அதிக சம்பளத்துக்கு நான் தகுதி யென்று சொல்லிக் கேள். சக்தியைப் பிரயோகிப்பது அக்கிரமம் செய்யத் துணிவதற்காயில்லாமல் அபிவிர்த்தியின் பொருட்டாக இருக்கவேண்டும். பலதிறப்பட்டுள்ள சக்திகளை ஒன்று சேர்த்து, ஒரு உறுதிப்படுத்தி இணைத்து, முழுவலிமையுடன் அறநெறியில் பிரயோகிக்கவேண்டும். இதிலே அஹிம்ஸா தர்மம், அன்பு, ஸாந்தம், பொறுமை, ஸகிப்பு, அமைதி, பிறர்க்குத் தீங்கு சூழாமை முதலிய உயர்நலங்களும் செம்மையாக நிலவப்பெறவேண்டும். இவ்வித பக்குவத்துடன் புரியும் சக்திப்பிரயோகமே இல்வாழ்விலும், மற்றெந்த நல்வாழ்விலும் சித்தி பயக்குவிக்கும் ஸஞ்சீவியாகும்.

ஸாந்தமும், அன்பும், அமைதியுமே சக்திதேவிக்கு ஜீவ தாது. இந்த அமிர்த குணங்களை நம்முள் வளர்க்கக்கடவோம். நம்மிலே சக்தி படைப்போம். சக்தியின் வன்மையிலே திடநம்பிக்கை கொள்ளுவோம். நமது சக்தியை அமைதியுடன் பிரயோகிக்கும் திடனைப் பெறக்கடவோம். சக்தியுள்ளவர்க ளாவோம். இறைவன் நமக்குப் போதிய சக்தியை அருளுவாராக.

சக்தி தோன்றுக. சக்தி பரவுக. சக்தீ வாழீ நீ.

"சக்தியே நம்மைச் சமைத்தது காண் நூருண்டு
பக்தியுடன் வாழும் படிக்கு."

நோட்டம் பேசும் வீணர்கள்!

இவர்களால் உள்ளவேலை கெடுவதன்றி, வெறுமனே அருகில் வந்து உட்கார்ந்து இவர்கள் அடிக்கடி கேட்கும் கேள்விகளுக்கும் பதில் சொல்லவேண்டி யிருக்கிறது. இந்த வீணர்கள் பொழுதுபோக்க இதுவே நல்ல இடமென்று தெரிந்துகொண்டார்களோ என்னவோ! உன் வேலைகளை மேதுவாக ஆராய்கிற கூரிய கண்ணும் வேறே! ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குற்றம் பேசுவர். பிறரைப்பற்றி உன்னிடம் சொல்வதுபோல், உன்னைப்பற்றிப் பிறரிடம் எவ்வளவு வம்பு முட்டைகள் அளக்கிருர்களோ! யார் கண்டார்?



தமக்கையின் மாண்பு.

(238-ம் பக்கத்தொடர்ச்சி.)

6. தம்பியென் றழைக்கு மமுதாஞ் சொல்லை
தடைப்படா வமுதவா சகத்தை
இம்பரி லினியான் எங்குபோய்க் கேட்பேன்
ஈசனே பாசமா யணைக்கும்
அம்புயக் கரத்தை அருள் சொரி விழியை
யாங்குதான் காண்பதற் கியலும்?
கும்பிதான் தன்னையறிதரா துழக்கும்
கோலமும் சீலமும் வருமோ?

7. தங்கையைப் பெறலாம் தம்பியைப் பெறலாம்
தனக்குமுன் பிறந்துட னிருக்கும்
பங்கயக் கொடியை இனிப்பெற லாமோ?
பாசமா யோடு 'யென் னக்கா
இங்குவா' வென்றே யழைப்பது மெவரை?
இத்துடன் மறக்கவேண் டுவதோ?
பொங்குமந் நன்னால் இனித்திரும் பாதோ?
போனதோ போனதோ புவியே!

8. அடிக்கடி புரியும் மடத்தொழி லாலே,
அருமகப் பெறுவதி னாலே,
குடித்தனத் திளைத்த தாய்க்கொரு துணையாய்
குணவதி பிறக்கிலத் தாய்க்குத்
தொடுத்தகை வேலைக் குதவியு மற்றத்
துணைவரைத் தாக்கியா தரித்தும்
கொடுத்திடு மென்று கூறினார் நமது
குலப்பெருந் தலைப்பதி காரர்.

வேறு.

9. அடிக்கடியென் னக்காவென் றழைத்துப்
பழகிய நான் அதைமறக்கத்
தொடுத்தொருபெண் ணைத்தேடி யக்காவென்
றுறவுகொள்ளத் தொடங்கினாலும்
வடித்தசுவை வாக்கெனக்கு வழங்குவளோ?
தாயன்பு மாற்றுந் தாய்பால்
கிடைக்குமென வெதிர்நோக்கி ஏமாற்ற
மடைவதொக்கும் கேலிக் கூத்தே.

10. இப்பாரி லெந்தமக்கை இன்னடையின்
பொன்னழகுக் கிணையாய் மற்ற
ஒப்பாரி அக்கையிடம் எதிர்பார்த்தல் முறையோ?
அன்புதிக்கு மோதான்;
கைப்பான நெஞ்சகத்தை உள்ளடக்கி
நல்லதெனக் காட்டி னாலும்
அப்பாடி யுண்மையுண்மை பொய்மையென்ப
தென்னாளும் பொய்மை யாமே.

சின்ன விஷயம்.

அது ஒரு சின்ன விஷயம். அதற்கா இவ்வுளவு பிரமாத தம் என்கின்றனர். இந்தச் சின்ன குழந்தைக்கா அந்த டாக்டரிடம் போவது என்று குழந்தையை அல்பமாக நினைக்கிறார்கள். ஒரே விஷயம் சம்பந்தப் படாதவர்களுக்குச் சிறிய விஷயமாயும், சம்பந்தப்பட்டவர்களுக்குப் பெரிய விஷயமாகவும் படுகிறது. வீட்டில் சீக்கு என்றால் அதைக் கேட்பவனுக்கு ஒரு சாமான்ய செய்தி. அதைப் படுகிறவனுக்கோ அது பெரிய பாடு. ஒருவருக்குள்ள கஷ்டம் மற்றவர்களுக்கு அல்பமாகப் படுகிறது. ஒருவர் புண்பட்டுள்ள விஷயத்தை மற்றவர்கள் சின்ன விஷயம் என்று சொல்லும்போது, வெகு கஷ்டப்பட்டு ஆத்திரத்தை அடக்கிக்கொள்ள நேர்கிறது. தலை வலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் பெரிய விஷயம். மற்றவர்களுக்கு வந்தாலோ அது சின்ன விஷயமாகும்.!



பிரபஞ்ச தரிசனம்

இந்தியச் சிற்றாசரில் ஒருவர் தனது மனைவி மீது கடுங்கோபங் கொண்டார். அவளது கைக் குழந்தைமீதும் அக்கோபத்தைக் காண்பித்து 'எவருக்கோ பிறந்தது' என்று தூற்றினர். பிறகு நாட்கள் செல்லக் கோபமும் மாறியது. குழந்தையும் தக்க பருவத்தையடைந்தான். அவனுக்குப் பட்டத்தின் உரிமையைக் கொடுக்க முயன்றதில், எப்போதோ ஒரு காலத்தில் இவ்வரசர் "எவருக்கோ பிறந்தது" என்று கூறிய வாசகத்தை உறுதிபடுத்தி, அவனுக்கு அரசுரிமையை மறுத்துவிட்டனர். அரசரும் திகைத்துப் போய்த் தற்கொலை செய்துகொண்டார். இது அநேக வருஷங்களுக்கு முன்பு நடந்த ஸம்பவம்.

***

மானிடப் பிறப்பிற்கும் மிருகப் பிறப்பிற்கும் இருக்கும் வித்தியாஸத்தை ஆதிகால முதல் ஞானிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மானிடவர்க்கம் கூடிவாழும் தன்மையுடையது. கூடிவாழ்வதும், குடும்பவாழ்க்கையும் விவேகத்தினலுண்டாவது. அவ்வித அறிவடைந்த மனிதருக்குக் கூடிவாழும் சுதந்திரம் இயற்கையில் உள்ளது. அவ்வுரிமையை மறுப்பது மானிடரின் ஆண்மையைக் குன்றச் செய்வதாகும். பிறருடன் கூடவும், யோசனை புரியவும் காரியம் செய்யவும், எந்த நாகரிக தேசத்திலும் பிரஜைகளுக்குச் சுதந்திரமுண்டு. ஆனல், அதிகாரிகளின் தயவு இருக்கும் வரையில்தான் அந்த சுதந்திரமுண் டென்பதை துரைத்தனத்தார் தமது சட்டங்களின் மூலமாய் அடிக்கடி ஜனங்களுக்கு ஞாபகப்படுத்தி விடுகின்றனர்.

***

சிலர் நமக்குள்ளே பிரிவுகள் அதிகமாக இருந்தபடியால் நாம் வீழ்ச்சிபெற்றோமென்கிறார்கள். சிலர் நம்முடைய கல்வியும் நாகரீகமும் ஐரோப்பியரின் கல்வி நாகரீங்களைவிடத் தாழ்ந்தவனக இருந்தமையால் நம்மைக் கீழ்ப்படுத்துதல் அவர்களுக்கு ஸாத்யமாயிற் றென்கிறார்கள். சிலர் நம்மவர்களுக்கு சரீர பலமும் தைரியமும் ஐரோப்பியரைக் காட்டிலும் குறைவென்கின்றனர். இவையெல்லாம் முக்கிய காரணங்களாகா. ஏனென்றல், ஐரோப்பியரின் நவீன ஸைந்யக் கட்டுக்கு முன் இந்தியா தேசத்தவராகிய நாம் மாத்திரமே வீழ்ச்சி பெற்று விட்டதாக நினைப்பது முற்றிலும் தவறு. ஐரோப்பாக் கண்டத்தையும் ஐரோப்பியர் போய்க் குடியேறி யிருக்கும் வெளிநாடுகளையும் தவிர, மற்றப்படி பூமண்டலத்திலுள்ள எந்த தேசத்தாருமே ஐரோப்பிய ஸேனபலத்தை எதிர்க்க மாட்டாதவர்களாயின ரென்பதை அநேகர் முழுதும் மறந்து

பேசுகிறார்கள். ஆப்பிரிக்கா கண்டம் முழுதும் ஐரோப்பியருக்கு முன்னே எதிர்த்து நிற்கமாட்டாதாயிற்று. ஆசியாவில் ஜப்பான் ஒன்றைத் தவிர மற்றெந்த தேசமும் ஐரோப்பிய சேனைகளுக்கு முன் வீழ்ச்சி பெறாத தில்லை. எனவே, இதற்கு முக்கிய மான காரணம் யாதென்று கருதும் போது நவீன "சாஸதிர" பலத்தால் கண்டு பிடிக்கப்பட்ட பீரங்கிகள் முதலிய நூற்றுக்கணக்கான யந்திர தந்திரங்களை அந்த "சாஸ்திர"ப் பயிற்சி யில்லாதவர்களால் வெல்ல முடியாமையே முக்கிய காரண மென்று விளங்குகிறது. ஐரோப்பா தனது தைரிய விசேஷத்தாலேனும், குண விசேஷத்தாலேனும், பல விசேஷத்தாலேனும் பிற நாட்டி னரை வெல்லவில்லை. தனது "சாஸ்திர" பலத்தால் மட்டுமே வென்றது.

***

பிரிட்டிஷ் அரசாட்சி மண்டலத் தில் அடங்கியுள்ள தேசங்கள் ஒன் றுக்கொன்று என்ன ஸம்பந்தமுடை யவைகளாக இருக்கின்றன என்ப தைச் சிறிது ஆராய்வோம். இந்த மண்டலமானது இங்கிலாந்து ஸ்காட் லாந்து, அயர்லாந்து ஆகிய தாய் நாடுகள் எனப்படும் . தேசங்களை யும், கானடா, தென்னுப்பிரிக்கா, ஆஸ்டிரேலியா, நியூஸிலாண்டு ஆகிய சுய ஆட்சி செய்து கொள்ளும் குடி யேற்ற நாடுகளையும், சுய ஆட்சி அதி காரம் பெறாத ஸிலோன் முதலிய பிரதேசங்களையும், இந்தியாவாகிய சார்பு தேசத்தையும் கொண்டதாக இருக்கிறது. இத்தேசங்கள் எல்லா வற்றிற்கும் பொதுவாகவுள்ள பிரிட் டிஷ் பார்லிமெண்டின் மெம்பர்கள் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர் லாந்து ஆகிய மூன்று தேசங்களி லிருந்தும் தெரிந் தெடுக்கப்படுவது வழக்கம். தாய்நாடு என்கிற அபிமா னத்தை இங்கிலாந்தினிடத்தில் குடி யேற்ற நாடுகள் பாராட்டி அதனிடத் திலுள்ள சம்பந்தத்தை அறுத்துக் கொள்ளாம லிருக்கலாமே தவிர, இங்கிலாந்தினிடத்தில் சம்பந்த முடையவைகளா யிருக்கும்படி அவைகளைக் கட்டாயப்படுத்த இங்கி லாந்து சம்மதியாது. தாயை விட் டுப் பிள்ளை பிரிந்து போவதுண்டா? பிரியும் பிள்ளையைத் தாய் சர்வ நாசப்படுத்துவதுண்டா? இரண்டு மில்லை. பிரியும் குடியேற்ற நாட்டின் மீது இங்கிலாந்து ஒரு துப்பாக்கி கூடப் பிரயோகிக்கா தென்றும் முன்பு சொல்லப்பட்டது. ஆனல் ஒன்று; குடியேற்ற நாடுகள், இந் தியா, ஆகிய தேசங்களன்னியில் இங்கிலாந்தானது ஏகாதிபத்திய மென ஏற்படுத்திக் கொண்ட தனது அந்தஸ்தை உலகில் ஒரு நாழியும் காக்க முடியாது. குடியேற்ற நாடுக ளும் தனித்தனியாகப் பிரிந்து தங்க ளது சுவாதீனத்தைக் காப்பாற்ற முடியாதவைகளா யிருக்கும். ஆகை யால், பரஸ்பர உதவியை உத்தே சித்து பிரிட்டிஷ் ஆட்சி முறைக்குள் ளிருந்துவரும் தேசங்கள் ஒரு சேர்க் கையாகக் கட்டுப்பட் டிருக்கின்றன வேயல்லாது, ஒருவர்மேல் மற்றொரு வர் அரசு செலுத்துவதற்காகச் சேர்க்கப் பட்டவையல்ல. ஒன்றுக் கொன்று கீழ்ப்பட்டதுமல்ல. இவ் விவரங்களிலிருந்தும் பிரிட்டிஷ் அரசாட்சி மண்டலத்தின் அமைப்பு ஒருவாறு விளங்கும். இவற்றுள் இந்தியாவின் ராஜீய அந்தஸ்து என்னவென்பது கேள்வி?

***

பிரிட்டிஷ் குடியேற்ற நாடுக ளுக்குக் கிடைத்துள்ள சுய ஆட்சி போல் இந்தியாவுக்கும் கிடைத்தால் போதுமென்பது இந்திய ராஜீயத் தலைவர்களின் அபிப்பிராயம்.





இன்று கூடிய நமது கடையில் ஒரு விசேஷம்; கடையின் கௌரவ காரியதரிசியான பொன்வண்டு செட்டியாருக்கு அவர் செய்து வந்திருக்கும் "விஸ்வாச" வேலைகளுக்காக "பஹதூர்" பட்டம் வழங்கப்பட்டது. இதன் பொருட்டாக தாண்டவக்கோன் ஒரு தர்பார் நடத்தி அவரது "அடிமை ஊழியங்க"ளைச் சிலாகித்தார். இன்னும் அவர் வெகு காலம் "விஸ்வாச" அடிமைத் தனத்துடன் எருமைக்கடா போல் உழைக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்பதாய்க் கூறினார்.

2

"ஆநந்த குணபோதினி" யின் புதிய பெயரான அமிர்த குணபோதினியைக் கடையின் அங்கத்தினர்கள் வெகு பிரியமாய் ஏற்றுக்கொண்டதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது. "ஒரு பத்திரிகையை விரும்புவது வெளிப் பெயருக்காகவல்ல, அதிலுள்ள விஷயங்களுக்காகவே" என்றார் தொந்தித்தேவர். "ஆநந்தத்தைவிட "அமிர்தம்" என்ற பெயர் மிகவும் உயர்ந்தது என்றார் அல்லா பிச்சை.

3

"அமிர்தம் தோன்றிய வரலாற்றை வாசித்திருக்கிறோம். நம தர்ம சாஸ்திரங்கள் எப்படி உற்பத்தியாயின என்கிறவிவரம் தெரியவில்லையே" என்றார் தொங்குந் தாடியார்.

'திடீர் என்று எடுத்ததும் தர்ம சாஸ்திரங்களாக வந்து நிற்கவில்லை. அநேக பழய வழக்கங்கள் ஒவ்வொரு நாட்டிலு மிருந்தன. அவ்வழக்கங்கள்,—எவ்வழக்கங்களை நாம் 'மாமூல்' என்று ஒவ்வொரு சமயத்தில் சொல்லுகிறோமோ அவ்வழக்கங்கள்,—தர்மசாஸ்திரங்கள் ஏற்படுவதற்கு முன்னரும் இருந்திருப்பதாகத் தெரிய வருகிறது. இவ்வித வழக்கங்கள் அதிகப்படவே, இனி ஓர்வித ஏற்பாடில்லா விட்டால் இவ்வழக்கங்கள் எண்ணிலடங்காதென்ற சமுசயம் வந்தது. அவ்விதம் சமுசயம் தோன்றிய போதுதான் "ஸ்மிருதிகள்" ஏற்படும்படி நேரிட்டன. பிற்காலத்தில் இந்த ஸ்மிருதிகள் தர்ம சாஸ்திரங்களாக வழங்கப்பட்டன" என்றார் பழய சோற்றுப் பரமசிவம்.

"அவ்வாறாயின் இந்த ஸ்மிருதிகளுக்குத் தாயாக இருந்தது அதன் முன் இருந்த "வழக்கங்கள்" என்பதாகும். இந்த வழக்கங்கள் வழக்கச் சொற்களாக வழங்கி வந்திருக்கவேண்டும். இந்த வழக்கச் சொற்களுக்குப் 'பழய காலத்துச் சொல்' என்று பெயர் அமையலாம். இதை இன்னும் சுருக்கமாகப் "பழமொழி" என்று அழைத்தும் இருக்கலாம். பழமொழி என்றால் பழமையான சொல் என்பது பொருள். அந்தச் சொல்லை நாம் தற்காலத்தில் பலவித

தந்திரசாலியான மானேஜரைவிட, சத்தியவந்தனை மானேஜர் தன்னை நம்பிய எஜமானனுக்கு அதிகம் உழைப்பான். மற்றவர்க்கும் நல்லவனாவான்

அர்த்தங்களுடன் பிரயோகப்படுத்துகிறோம். அத்தனை அர்த்தத்திற்கும் ஒரு பழமொழி பொருந்திவிடுகிறது. ஒரு நாழிகை செய்யவேண்டிய ஸம்பாஷணையை ஒரு நொடியில் சிறு பழமொழி ஒன்றைச் சொல்லி ஸரியாய்க் காட்டிவிடுகிறோம். ஆதலின், வழக்கங்களிலிருந்து சொற்களும், அவ்வழக்கச் சொற்களிலிருந்து பழமொழிகளும், அவற்றிலிருந்து ஸ்மிருதிகளும், அதன் மூலமாக தர்ம சாஸ்திரங்களும் ஏற்பட்டிருக்கவேண்டும்" என்றார் பழமொழிப் பிள்ளை.

இதை ஆதரித்து அல்லாபிச்சை பேசினர். "ஜனங்களுடைய அந்தர்கதமான எண்ணங்களை ஒருவன் அறிய விரும்பினால் அவர்களுடைய பழமொழிகளை நன்றாய்க் கற்றறியவேண்டும். பழமொழிகள்தாம் அவர்களுடைய சரித்திரம், மதம் முதலிய ரஹஸ்ய சங்கதிகளை ஒருவாறு பஹிரங்கப்படுத்துகிறவைகள். இவைகள் தாம், எந்தப் பாஷையை அவைகள் அனுசரிக்கின்றனவோ, அந்தப் பாஷையின் யதார்த்த ரூபத்தை வெளிப்படுத்தும் ஆதாரங்கள். சில சரித்திர கிரந்த கர்த்தாக்கள், பல ஜனக்களுடைய பழமொழிகளை ஒன்று சேர்த்து ஒப்பிட்டுப் பார்த்தால், ஆசியாக் கண்டத்தின் மத்திய பாகத்திலிருந்து ஜனங்கள் பிரிந்து போய் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு எல்லைகளது பாகங்களில் குடி ஏறின காலமும், அவர்கள் அந்த சமயத்தில் அடைந்திருந்த நாகரீகம் முதலியவைகளும் ஒருவாறு ஒப்பிட ஆதாரங்களுண்டாகும் என்ற அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். அது யதார்த்தமே என்றார்.

தொங்குந்தாடியார் "இந்தப் பழமொழிகளை யுண்டாக்கியது யார்?" என்று வினவினர். அதற்கு அல்லாபிச்சை, "எவா உண்டாக்கியதென்று சொல்ல முடியாது. ஜனங்கள் தான் அதை உண்டாக்கியவர்கள். பல சம்பவங்களிலிருந்தும் பல தோன்றியிருக்கும். நமக்கு நாலு பழமொழிகள் தெரியும், நமது வீடு கூட்டுபவளுக்கு நாலு பழமொழி தெரியும், ஒரு கிராமவாசிக்கு இன்னும் நாலு தெரியும். எல்லாப் பழமொழிகளையும் ஒருவரே தெரிந்துகொள்வதென்பது சாத்தியமில்லை. அச்சுக்கு வாராத பழமொழிகள் எத்தனை எத்தனையோ? பழமொழிகள் தான் ஒவ்வொரு ஜனஸமூகங்களுடைய சரியான பேச்சு, புத்தி, யுக்தி, சக்தி, மதம், தைரியம், கோட்பாடு, கொள்கை முதலியவைகளை வெளியிடக் கூடியவைகளாகும்" என்றார்.

4

இந்தச் சமயத்தில் குள்ளநரிச் செட்டியார் வந்தார். அவர் எங்கள் கடையின் அங்கத்தினராகிய கெட்டிச் செட்டியாரிடம் அவர் பெண்ணைத் தனது குமாரனுக்குத் தருமாறு கேட்டார்.

கெட்டிச் செட்டி :—என்பெண்ணுக்கு அவள் பிறந்த வாரத்திலேயே 6000—ரூபாய்க்கு லைப் இன்சூரன்ஸ் கம்பெனியில் அவளது 15-வது வயதில் கிடைக்கும்படி சீட்டு போட்டிருக்கிறேன். ஒரே பெண் என்று நினைத்து இப்படிச் செய்தபிறகு எனக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். நான் சம்பாதித்ததை யெல்லாம் இந்த சீட்டு கட்டுவதற்கே செலவிட்டிருக்கிறேன். இப்பொழுது முன்

தன் பேச்சுக்கெல்லாம் ஆம் ஆம் என்று தாளம் கொட்டுபவனை நம்புவதைவிட, தன் வார்த்தையை ஆக்ஷேபித்துப் பேசுபவனிடத்தில் நம்பிக்கை வைப்பதில் நன்மையுண்டு.

யோசனையின்றி பெண்ணை உங்களுக்குக் கொடுத்துவிட்டால், பெண்ணின் பேருக்குள்ள அத்தொகையை நீங்களே அடையும்படியாகிவிடும். அத்தொகைக்கு நாங்களே பாத்தியஸ்தர்களென்று வழக்காடுவீர்கள். ஆகவே, மேற்கண்ட தொகையை நான் பெற்றுக்கொண்ட பிறகே என் பெண்ணை ஆயிரம் ரூபா நகைகளுடன் விவாகம் செய்துகொடுப்பேன்.

குள்ளநரிச்செட்டி :— எங்களை அப்படிப் பேதம் நினைக்கலாமா? நீங்கள் கொடுப்பதைப் பெறுவோமேயன்றி உங்கள் சொத்துக்கு ஆசைப்படோம். பெண்ணுக்குப் பதினைந்து பிராயம் வந்ததும் நீங்கள் 6000–ரூபாயையும் பெற்றுக்கொள்ள அப்பெண் கையெழுத்திடுவதற்கு நாங்கள் ஆக்ஷேபிக்க மாட்டோம்.

கெட்டிச்செட்டி :—என் பெண்ணுக்குப் போட்டிருப்பதை நான் பெற மற்றொருவர் தயா விஷயமாய் ஆக்ஷேபிக்கமாட்டோம் என்பதென்ன? அவ்வளவு பாத்தியதை ஏற்படும்படி விடுவதற்கு நான் மூடனல்ல. ஆறாயிரத்தையும் விட்டுக்கொடுத்துவிட அதற்குப் பாத்தியதை இல்லாத இப்பொழுது வெகு தாராளமாய் ஒப்புகிறீர்கள். பாத்தியம் ஏற்பட்ட பிறகு எப்படி மனம் திரும்புமோ? அப்படி நான் ஆறாயிரம் பெற்றாலும், உங்களுக்குச் சேரவேண்டிய பணத்திலிருந்து எனக்குக் கொடுத்ததாக எண்ணுவீர்கள். "என்னசெய்யலாம், விவாகத்துக்கு முன்பே இப்படிப் பேச்சு ஏற்பட்டிருந்ததால் இவ்வளவு பெரிய தொகையை இழக்க நேர்ந்தது" என்றும் மனஞ்சலித்துக்கொள்வீர்கள். அப்படி ஒருவர் மனம் சலிக்கவோ, எனக்குப் பிஷையிட்டதாய் எண்ணிக்கொள்ளவோ நான் ஒரு போதும் இடம் தரமாட்டேன்.

குள்ளநரிச்செட்டி :—சரி, நீங்கள் பணம் பெற்றுக்கொண்ட பிறகு விவாகம் செய்து கொடுங்கள். இப்பொழுது நிச்சயதார்த்தம் மட்டும் செய்துவிடுவோம். 15-வயது நிறைவதற்கு இன்னும் எட்டு மாதங்கள் தானே இருக்கின்றன.

கெட்டிச்செட்டி :—எவ்விதமாவது என்னை விலங்கில் மாட்டிவிட நினைக்கிறீர்களா? நிச்சயதார்த்தம்—விவாகம்—என்பதெல்லாம் என் பெண்ணைப் பிறருக்குப் பாத்தியப்படுத்திவிடுகிற சங்கதிதானே. நிச்சயதார்த்தமான பின் பெண்ணின் 15-வது வயதில் நான் அந்தத் தொகையைப் பெற்றுக்கொண்டு பெண்ணைக் கொடுத்தாலும், அப்போதும் ஒரு சொட்டுச்சொல் பிறக்கும். பெண்ணின் பேருக்கிருந்த அவ்வளவு தொகையையும் எடுத்துக்கொண்டானே பாவியென்று எவர் சொத்தையோ நான் எடுத்துக்கொண்டுவிட்டமாதிரியாக என்னைத் தூற்றுவதோடு, நான் செய்யும் சீர்வரிசைகளையெல்லாம் அரை மனதோடு முகம் சுளித்து நீங்கள் ஏற்றுக்கொள்ளும்படி நேரும். அவ்வளவோடு போகுமா? என் வீட்டுக்கு என் பெண்ணையனுப்புவதற்கும் மறுத்து அக்குழந்தையைக் கொடுமைப்படுத்தி என் மீதுள்ள ஆங்காரத்தைக் காட்டுவீர்கள். என் அய்யா இப்படி வலியப்போய் ஹிம்ஸைப்பட? எதற்காக அய்யா என் பெண்ணை நான் உயிரோடும்

நாற்காலியில் அமர்ந்து உழைப்பது பார்வைக்கு இன்பம். அவ்விதமின்றி அதில் சாய்ந்து இன்னொரு பெஞ்சியில் காலை நீட்டித் தூக்கினாலோ? ஐயோ எத்தனை விகாரம்?

இழக்க? என்பணத்தை நான் எடுத்து கொண்டதற்கு எதற்காக மற்றவரிடம் பேச்சு வாங்குவதோ? ஆதிலிருந்து வீண் மனஸ்தாபங்கள்தான் என்னத்திற்கு? மனஸ்தாபப்படவா பெண்ணைக் கொடுப்பது?

குள்ளநரிச்செட்டி :— உங்கள் பணத்தை நீங்கள் எடுத்துக்கொள்வதில் நாங்கள் எவ்வித மனச்சலிப்பும் வருத்தமும் அடையோம். இந்த ஆவணி மாதத்தில் நிச்சயதார்த்தம் செய்துவிடுவோமா?

கெட்டிச்செட்டி :— பெண்ணின்பேருக்குள்ள பணத்தை நான் வாங்கும் வரையில் எவரெவர் பெண்ணைக் கேட்கிறார்களோ, அவர்களுக்கு நான் பணம் பெற்ற பிறகுங்கூடப் பெண்ணைத் தரமாட்டேன். ஏனெனில், எப்படியாவது அப்பணத்தின் சம்பந்தமாக வார்த்தைகள் பிறந்து வருந்தநேரும். நான் பணம் பெற்ற பிறகு வந்துகேட்கும் புதியவர்களில் உத்தமராய் ஒருவரைப் பார்த்து அந்த இடத்திலேயே ஆயிரம் ரூபா நகை சீர்களுடன் கொடுப்பேன். அப்பொழுது அவர்கள் என் சொந்தப் பணத்திலிருந்து நகை சீர்கள் செய்ததாய் எண்ணி விசுவாச மனத்தினராயிருப்பார்கள்; மனஸ்தாபங்களும் வராது. இப்பொழுது செய்தாலோ மகா பெரிய ஆபத்து! எங்களுக்குச் சொந்தமாகிவிட்ட பெண்ணின் பேருக்கு இருந்த தொகையைப் பெற்றுத் தானே இந்த அல்ப எச்சில் சீர்களைச் செய்தான்; மற்றபடி அவன் தன் சொந்தப் பணத்திலிருந்து என்ன அப்படி வாரிக் கொடுத்து விட்டான் என்று கேவலமாகப் பேசுவார்கள் இதற்கெல்லாம் நான் ஏமாறி ஒரு சொட்டு வார்த்தை ஒருவரிடம் கேட்க எனக்கென்ன தலைவிதியா?

குள்ளநரிச்செட்டி:—நான் தர்ம நியாயமாய் நடக்கிறேனென்று பிரமாணிக்கம் செய்கிறேன். இந்த சம்பந்தத்தால் நமது மூன்று தலைமுறை உறவு விட்டுப் போகாமல் பெருகும்.

கெட்டிச்செட்டி ;—பெண் கொடாததற்கு முன் நாம் இருக்கும் உறவு, பெண் கொடுத்தபின் அப்படிவிருத்தி யாவதில்லை. கலக விருத்திதான் ஆகிறது. நானோ கெட்டிச்செட்டி, தாங்களோ குள்ளநரிச்செட்டி. இரண்டுக்கும் ஒத்துவராது. மெதுவாக என் கஷ்டார்ஜிதமாகிய பணத்தை வசப்படுத்திக் கொள்ளவே இப்போது பெண்ணைக்கேட்பது. பெண் கொடுத்தபிறகு இப்போதுள்ள உறவுகூட இல்லாமல் ஜென்ம விரோதப் படும்படி அந்த 6000-ரூபாய் செய்துவிடும். தங்கள் தித்திப்பு வார்த்தைகளை நம்புவதற்கில்லை. பெண்ணின் கழுத்தில் மாங்கல்யம் ஏறியதும் மாப்பிள்ளைவீட்டார் ஒருபுது தினுசு மனிதர்களாய் மாறிவிடுவது எங்கும் கண்ட சங்கதி. அதற்கு முன்பு தானே பெண் வீட்டாருடன் வெகு உறவாய்க் கெஞ்சுவது, உட்படுவது போலத் தளுக்கு செய்வது?

குள்ளநரிச்செட்டி :—அப்படா! எவ்வளவு பேச்சு! கடைசியில் முடிவு என்னதான் சொல்லுகிறீர்?

கெட்டிச் செட்டி :—என் முடிவை அறிவதற்கு முன்பு ஒரு சங்க

எதிலும் பட்டுக்கொள்ளாமல் சமயத்திற்குத் தக்கபடி இனிக்கப் பேசி எஜமானனது திருப்தியைப்பெற விரும்புவோன், தான் பிழைக்கிற வழியைப் பார்த்துச்செல்லும் மனிதனாகமட்டும் இருப்பான். எஜமானனுக்கு அவ்வளவு பயன்படுபவனல்ல.

னியைக் கேளுக்கள். தனகோடி செட்டி நல்ல பணக்காரரா யிருக்கை யில் தன் பெண்ணின்பேருக்கு நாலாயிரம் ரூபாய் அவளுடைய சிறு வயதிலேயே எழுதிவைத்து அதை வட்டிக்கு விட்டிருந்தார். பெண் ணுக்கு வயதானதும் 2000-ரூபாய் சீருடன் விவாசம் செய்து கொடுத் தார். அதற்கு மறு வருஷம் அவருக் குப் பல நஷ்டங்கள் ஏற்பட்டு ஏழை யானார். பெண்ணுக்குப் போட்டிருந்த தொகையிலும் பாதி வாங்கி விட் டார். இல்லாவிடில் அவர் கடன் ஜெயிலுக்குப் போகவேண்டி யிருந் தது. பெண்ணின் புருஷனது வீட்டுக்காரரோ அத்தொகைக்கு வியாஜ்யம் செய்து தீர்ப்புப்பெற் றுவிடவே, தமது சொத்தை யெல்லாம் விற்று, வீடும் விற்று அத்தொகையைத் தாரநேர்ந்தது. பணத்தைப் பெற்ற மாப்பிள்ளை வீட்டார் அவர்மேல் விரோதம் சாதிக்கத் தங்கள் பையனுக்கு இன்னொரு பெண்ணையும் விவா கம் செய்து வைத்துவிட்டார் கள்! பெண்ணின் வாழ்வும் போ ய், பணமும் போய் விரோதமு மானது. நீங்களும் அப்படிப்ப ட்டவர்களே. ஆனதால் நான் தரமுடியாது. போய்வாருங் கள்.

***

குள்ளநரிச் செட்டி ஏமாறி ப் போய் ஏக்கத்துடன் தலையை த் தொங்கவிட்டார். நமதுகதை யும் இத்துடன் முடிவுபெற்றது.

பகதூர் பொன்வண்டு செட்டியார்.

சாரமும்சக்கையுமா யிருந்தபோது மாதாவின் வயிற் றுக்குள்ளிருக்க முடிந்தது. அவ் விதமே செய்யும் சாரத்தின் சத் தாக யிருந்தபோது விதைக்குள் அடங்கி யிருக்க முடிந்தது. இப் போதோ, கரும்பின் சாற்றுடன் அதன் சக்கையும் சேர்ந்து கொண்டால் மனிதனும் தாயின் வயிற்றுக்குள் சக்கையோடு கூட உள்ளேபோக இயலா. செடியும் விதைக்குள் தன் சக்கையுடன் புக இயலா. ஒன்றுக்குள் ஒன் றைப் புகுத்தி வைத்தது ஈசனின் திறமை !

மூடத்தனமான பழிப்பு.

சக்தி ஒரு தனி வஸ்து. அது ஒரு நெருப்பு போலாம். அதை ஒன்றுடன் இணைத்தால்தான் அதன்வலிமை புலனு கும். நெருப்பு ஊரையே சுட்டுவிடவல்லது. அதை மற்றொன் றின் பக்கத்தில் வைத்தாலல்லவோ அதன் சக்தி அப்போது தெரியும். அவ்விதம் இன்றி நெருப்பைத் தண்ணீர்பானைக்கு அடியில் சிறை வைத்துவிட்டு, அது தனது சக்தியைக் காட்ட வில்லை யென்று பழிப்பது மூடத்தனமான பழிப்பாகும். இந்தப் பழியினால் சக்தியின் வன்மை ஒருபோதும் குன்றிவிடாது.



I

சுயமரியாதைத் திருமணங்கள்.

சுயமரியாதை இயக்கத்தின் சார்பாய் பிராமணர்களை நீக்கி நடத்தும் விவாகங்கள் பல தற்போது நிகழக் காண்கின்றோம். விவாக காலங்களில் இளர்கள் என்ன சொல்லி என்ன செய்து மாங்கல்ய தாரணம் சூட்டுவிக்கின்றன ரென்று தெரியவில்லை. பிராமணரை நீக்கி சாத்தாதார் என்ற வைணவ வகுப்பினரைக் கொண்டு சில விவாகங்கள் நடந்துள்ளன. இவர்களும் பிராமணர்களது சுலோகங்களைச் சொல்லி சடங்கை நிறைவேற்றி விடுகின்றனர். தமிழே தெரியாத ஒரு ஆங்கிலப் பாதிரியார் ஒரு மகா சபையில்,

ஊமடு அறியே ணன்பற்கல்லே
(நமது அரிய நண்பர்களே)

என்று பேசியதுபோல் ஸமஸ்கிருத ஞானம் இல்லாத இவர்கள் ஸமஸ்கிருத சுலோகங்களை மடமடவென்று கொட்டுவதில் எவ்வளவோ தப்பும் தவறுகளும் மலிந்துள்ளன. பிராமணர் சொல்லுவதிலேயே எத்தனையோ பிழைகள் உள்ளன. சிலர் ஏதும் சொல்லாமலே என்னென்னவோ உளறிக் கொட்டுத் தாலியைக் கட்டச்செய்து விடுகின்றனர். எவ்விதமேனும் விவாகம் நடந்தால் சரி. பிராமணர் வாராதிருக்க வேண்டியதொன்றே முக்கியம் என்பது இவர்களின் கருத்து போலும். இவை அர்த்தமில்லாத சடங்குகளே யாகும்.

விவாக காலத்தில் மணமகளும், மணமகனும், இருவரது பெற்றோர்களும் சொல்லவேண்டிய அருங்கருத்துகள் அடங்கிய சுலோகங்கள் அநேகம் உள்ளன. அவற்றை யெல்லாம் கிரமமாகத்தமிழில் மொழிபெயர்த்து நூல் வடிவமாக வெளியிட்டு, அந்நூலைக் கொண்டு விவாகங்கள் நடத்தப்படுமாகில் அது பயனுள்ளதாகும். இவ்விதமே திதி முதலியவைகளில் சொல்லும் மந்திரங்களையும் தக்கோரால் தமிழ்ப்படுத்தி அதிற் கண்டவாறு உபயோகிப்பின் அந்தத் திதி திசவங்களும் கிரமமாய் அநுஷ்டிக்கப்பட்டு நிறைவேறும். எதையும் அததற்குள்ள ஒழுங்கின்படி செய்யவேண்டும். வெறுமனே பிராமண நிந்தனையை மட்டும் வழங்குவதில் பயனில்லை. பேச்சுடன் ஒழுங்கான காரியமும் பக்கத்தில் இருக்கவேண்டும். நமது சாதாரணப் புசிப்பில் கூட பருப்பு நெய்யை முதலிலும், தயிர் ஊற்றிக் கொள்வதைக் கடைசியிலுமாக வைத்து ஒரு ஒழுங்கு செய்து கொண்டிருக்கிறோம். எல்லாம் பசி தீர்வதற்காக ஒரு வயிற்றுக்குள்ளே போகிறது தானே யென்று முதலில் தயிர் ஊற்றிக் கொண்டு கடைசியில் நெய்யும் பருப்பும் போட்டுப் பிசைந்து ஏன் உண்ணக்கூடாது?

X. Y. Z.

II

'அமிர்த குணபோதினி'

பக்ஷபாதமற்ற வவேகிகளின் மனதை மிகக் களிப்படையச் செய்து கொண்டுவரும் 'ஆநந்த குணபோதினி' என்ற பத்திரிகைக்கு 'அமிர்த குணபோதினி' 'என்ற பெயர் மிகப் பொருத்தமுள்ளது.

'அமிர்த குணபோதினி' என்பது யாவராலும் கொண்டாடக்கூடிய நற்குணங்களை உபதேசிக்கும் பத்திரிகை என்றும், மிர்த குணங்களை விலக்கும் பத்திரிகை என்றும், கடவுளின் சொரூபத்தைத் தெரிவிக்கும் பத்திரிகை என்றும், அற்பநடையை அறவே நீக்கி நன்னடையையே விளக்கிக் காட்டும் பத்திரிகை என்றும், தளர்ந்த சரீரங்களுக்கு சிந்தல்க் கொடி ரஸாயனம்போல் பல பத்திரிகைகளைக் கண்டு மனம் சோர்ந்திருக்கும் பத்திரிகா வாசகர்கட்குப் புஷ்டியையும் குதூகலத்தையும் அளிக்கும் பத்திரிகை என்றும், காமம் குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம் என்ற கெட்ட குணங்கள் நிறைந்த மானிடர்களிக்கு தேவரின் குணங்களாகிய சத்தியம், தயை முதலிய நற்குணங்களைப் போதிக்கும் பத்திரிகை என்றும் பொருள்படும். இதுகாறும் 'ஆநந்த குணபோதினி' என்ற பெயருடன் உலவி வந்த பத்திரிகையில் மேலே கண்டுள்ள குணங்கள் யாவும் நிறைந்திருப்பதால் இப்பத்திரிகைக்கு 'அமிர்த குணபோதினி' என்ற இப்புதுப் பெயர் மிகப் பொருத்தமானதே. 'அமிர்த குணபோதினி' என்ற இப்புதுப்பெயரை ஏற்படுத்திய நமது பத்திராசிரியர் ஸ்ரீமான் S. G. இராமாநுஜலு நாயுடு அவர்களின் புத்தி சக்தியை யாவரும் மிக மெச்சுவார்களென்பதே எனது கொள்கை. 'அமிர்த குணபோதினி' என்ற பெயரின் பெருமையால் இப்பத்திரிகையானது அமிர்தமாய் விளங்கும்படி கடவுள் அனுக்ரஹிப்பாராக.

முத்துஸாமி, B. A. M. S. D. S.

கல்லிடைக்குரிச்சி.

தன் மனைவியின் கற்பை விவாகத்திற்கு முன்னரே கெடுத்தவனென்று அறியாமலே எவ்விதமோ அந்த மனிதன்மீது துவேஷம் வைக்கிறான். தன் மனைவியையும் அவனுடன் அதிகம் பேசவோ நெருங்கவோ விடாதபடி தடுக்கிறான். அவன் தன் வீட்டுக்கு வருவதையே விரும்பாதவனாகிறான். எவ்விதமோ முன்னரே தோன்றுகிற உணர்ச்சியின் சுபாவ விசித்திரம் இதுபோலும்.

உழைக்கும் மனிதனுக்கு ஓய்வு ஏகாந்தம். ஸம்சாரிக்கு ஓய்வு மனைவி மக்களை மாமி வீட்டிற்கு அனுப்புதல். இவ்விரண்டும் கவலையற்ற தன்மையில் ஒரு சாந்தி நிலை. எல்லா வாழ்வும் சந்தடியுமே தன் மனைவி மக்களால் தான் என்பதை அவர்களைப் பிரிந்திருக்கும் பொழுதுதான் அவன் தன் நெஞ்சிலே நன்குணர்கிறான். பிரிந்து பிறகு சேருவதில் தான் அதிக இன்பம்.

"அமிர்த குணபோதினி"

இன்பத்தை விரும்பாத உயிர்கள் எதுவுமில்லை. கனியிருப்பக் காய் பறித்து உண்ணவும், நல்வழியிருக்க முள்வழிச் செல்லவும் யாரே விரும்புவர்? எல்லா உயிர்களினுடைய வாழ்வின் முடிவான நோக்கம் இன்பம் அடைதலாகும். எறும்பு முதல் இமையவர்கோன் ஈறாக அவரவரைப் பொறுத்தமட்டில் சுகம்பெறவே முயல்கின்றனர். தேவர்கள் அசுரரோடு போர்செய்து வெல்லமாட்டாது. எம்பெருமானிடத்துக் குறையிரந்து நின்றதுவும்; பாண்டவர்கள் தமது சகோதரர்களாகிய நூற்றுவரை வெல்வதற்குக் கண்ணபிரானைத் துணைவேண்டியதும் இன்பம் அநுபவித்தற்கன்றோ? தேவர்கள் புரிந்த புண்ணிய மிகுதியால்இறைவன் அவர்கட்கு வெற்றி தேடிக் கொடுத்ததோடமையாது, அவர்கள் என்றும் சாவாதிருக்க மூவா மருந்தும் (அமிர்தம்) கொடுத்துதவினார். "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யு மழை" என்னும் மூதுரைக்கியைப் பாண்டவர்கள் செய்த நல்வினைப்பேற்றால் கண்ணபிரான் அவர்கட்குத் துணையாய் நின்றதோடும், அனைவரும் என்றும் அழியா வாழ்க்கை பெறுதற்கேதுவாக "கீதை" யெனும் ஒப்பற்ற அமுதினையும் தந்தருளினார். தேவர்கள் பெற்ற அமிர்தம் நரை, திரை, மூப்பு சாக்காடு இவைகளை ஒழிப்பது என நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அத்தகைய அமிர்தம் நமக்குத் தேவையில்லை. ஒருவனுக்கு நரை, திரை, முதலியவற்றால் மட்டுந்தான் துன்பம் நேரிடுமென நினைக்க இயலுமா? ஒருவனுக்கு அவனுடைய வாழ்நாளில் எத்தனை சோதனைகள் நிகழுமோ யாரறிவார்? அவ்வளவிற்கும் அவன் தப்பிப்பிழைத்து மேல் நிலை யடைய வேண்டாமா? இதற்குத் தகுந்த மருந்தாயமைந்தது 'கீதை' யெனும் அமிர்தம். அவ்வமிர்தம் தோன்றிப் பன்னெடுங்காலமாயினும் அதை எளிதில் சுவைக்க இடமில்லாதிருக்கிறது. அதுவுமன்றி காலமோ மிக விரைவாக மாறிவருகிறது. நேற்று இருந்ததுபோல் இன்று இருப்பதில்லை. ஒவ்வொருநாளும் புதுப் புது முறையில் புதிய புதிய தோற்றத்தோடு விளங்கி வருகிறது. இந்த நிலைமையில் அக்கீதாமிர்தத்தின் முறைக்கு மாறாது, மக்களின், வாழ்க்கையநுபவங்களைத் திரட்டி அவர்கட்குப் போதித்து நல்ல நிலைமைக்குக் கொண்டுவர ஓர் "அமிர்தம் தோன்றியுளது.

அஃது தோன்று இரண்டு ஆண்டுகளாயினும் முதலில் அது தன்னை அமிர்தம் எனச் சொல்லிக்கொள்ளவில்லை. ஐயத்திற்கும், அவநம்பிக்கைக்கும் பேர்போன இந்தக் காலத்தில், தனது தன்மையை மக்கள் சிறிதும் அறியாதிருக்கும்பொழுது, எடுத்ததும் முதலில் தன்னை "அமிர்தம்" எனச் சொல்லிக்கொண்டால் எங்கே

ஆழ்ந்த புத்தியும், தேர்ந்த படிப்பும், யுக்தா யுக்த விசாரணைகளும் விவித ஸாமர்த்தியங்களு முண்டாவதற்கு "அமிர்த குணபோதினி"ப் பத்திரிகை ஒன்று தருவித்தால் போதுமானது.

அவர்கள் "இதுவும் தேவர்கள் பெற்ற அமிர்தம்போல் மிகச் சிறு இன்பந் தரவல்லதோ" எனக் கருதிப் புறக்கணித்துவிடுவரோ என்றஞ்சி, தனக்கேற்பட்ட உண்மைப் பெயராகிய "அமிர்தம்" என்பதை மறைத்து, தன்னை மேற்கொண்டவர் அடையும் நிலைமையினையே தனக்கும் பெயராக ஏற்று வெளிவந்தது. அது தான் "ஆநந்த குணபோதினி" என்க. என்றும் ஆநந்தத்தையே தரவல்லதாய இவ் அமிர்தம் தேவாமிர்தத்தினும் சிறந்தது என்பதை இப்பொழுது யாவரும் நன்கு அறிந்திருப்பர். இனிமேல் தனது உண்மைப் பெயரைச் சொல்லிக்கொள்ள அதற்கென்ன பயம்? ஆகவே அது சென்ற ஆடிமாதமுதல் "அமிர்த குணபோதினி" என்னும் பெயரோடு வெளிவரத் தொடங்கியுளது. பேச்சுக் காலம் மலையேறி செய்கைக்காலம் செல்வாக்கு பெற்றுவரும் இந்நாளில், அதற்கேற்ப முதலில் தனது செய்கையைக்காட்டி, பின்னர் தனது "அமிர்த குணபோதினி" என்னுங் காரணப்பெயரைத் தாங்கிவரல் மிகப் பொருத்தமானதே. அமிர்தமில்லா விடத்து ஆநந்தமும், ஆநந்தமில்லா விடத்து அமிர்தமும் இருக்க நியாயமில்லை. ஒருக்கால் தேவாமிர்தத்தைப்போல் ஒரு சிறு இன்பம் பயப்பன வேறு இருக்கலாம். அவற்றால் யாது பயன்? இவ்வமிர்தமோ "அநுபவ அமிர்தம்". இவ் வுண்மையை மறுக்க எவராலும் இயலாது. அநுபவத்திற் கண்டதை இல்லையென எப்படிச் சொல்ல முடியும்? கடைசியாக "ஆநந்த குணபோதினி" எனினும், "அமிர்த குணபோதினி" எனினும் இரண்டும் ஒன்றே. வேறு வேறு அல்ல. "அநுபவ குணபோதினி" எனினும் தவறாகாது. காவிரியாற்றின் நீரோட்டத்தைப் போல என்றும் இடையறாது ஆநந்த மூட்டிவரும் இவ் "அமிர்த குணபோதினி" அவ்யாற்றின் எக்கரிட்ட மணலினும் பல்லாண்டு சிறந்து வாழ்க.

நேரிசைவெண்பா.

வஞ்சனையும் பொய்யும் மலிந்துள்ள இந்நாளில்
அஞ்சா தவைகடிந்து அன்புடனே—உய்ஞ்சவழி
காட்டும் "அமிர்தகுண போதினி"யைக் காட்டிலுமிந்
நாட்டில்வே றுண்டோ நவில்.

பே. இராமாநுஜ ரெட்டியார்.

கடவுளை நம்பியதும் உடனே புது சக்தி!

ஒரு காரியத்திற்கு ஒரு மனுஷ்யன் நம்பியிருக்கையில், அவன் பொறாமையுடன் திடீரென்று கைவிட்டுவிட, ஆ! என்னசெய்வதென்று கலங்கி, கடவுளே என்கிறான். அன்றிரவே பகவான் அவனுக்குப் புது சக்தியையும் நூதன நினைவுகளையும் ஊட்டி விடுகிறார். அவனும் இது கடவுளின் கருணையென்று தன் புது சக்தியின் உதவியால் தானே முயன்று உழைத்து வெற்றி பெற்று விடுகிறான். எவர் கைவிடினும் கடவுள் கைவிடார். அவரைப் பூர்ணமாய் நம்புவதைப் பொறுத்து அது உளது.



(248-ம் பக்கத் தொடர்ச்சி.)

293. How poor are they that have not patience!

SHAKESPEARE.

பொறுமை இல்லாத மனிதர்கள் எவ்வளவு எளியவர்கள்!

ஷேக்ஸ்பியர்.

294. Blow, blow, thou Winter wind, Thou art not so unkind, As man's ingratitude.

AS YOU LIKE IT, II. 7.

மாரிகாலக்காற்றே அடி! அடி! நீ மனிதனுடைய நன்றி மறதியைப் போல் அவ்வளவு குரூரமுள்ளதல்ல.

295. We may always know what is right; but not alway, what is possible. RUSKIN.

நாம் எப்பொழுதும் எதெது சரியானது என்று அறியக்கூடும். ஆனால் எதெது சாத்தியம் என்று எல்லாக் காலங்களிலும் அறிய முடியாது.

ரஸ்கின்.

296. What stronger breastplate than a breast untainted,
Thrice is he armed that hath his quarrel just. SHAKESPEARE.

களங்கமில்லாத நெஞ்சைவிடவேறு அதிக பலமான மார்புக் கவசம் எது? எவனொருவன் நியாயமான சண்டை தொடுக்கிறானோ அவன் மூன்று மடங்கு பலமாக ஆயுதம் தரித்தவனாகிறான். ஷேக்ஸ்பியர்.

297. Our affections are our life. We live by these. They supply our wamth. CHANNING.

நம்முடைய வாஞ்சைகள் தான் நம்முடைய உயிர். நாம் இவைகளால் தான் ஜீவிக்கிறோம். அவைகள் தான் நமக்கு கதகதப்பை அதாவது உத்ஸாகத்தைக் கொடுக்கின்றன. சானிங்.

298. Things done well,
And with a care, exempt
themselves from fear.

SHAKESPEARE.

ஜாக்கிரதையுடனும் செவ்வையாகவும் செய்யப்படுகிற விஷயங்களுக்குப் பயம் என்பது கிடையாது.

ஷேக்ஸ்பியர்.

299. Great thoughts, reduced to practice become great acts. HAZLITT.

பெரிய எண்ணங்கள் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்பட்டால் பெரிய காரியங்களாகின்றன.

ஹேஸ்லிட்.

303 The birds sang in the thickets, And the streamlets laughed and glistened, And the air was full of fragrance.

LONGFELLOW.

பறவைகள் காடுகளில் பாடிக் கொண்டும், அருவிகள் சிரித்துக்

அதிக சுலபமென்று நினைத்திருந்தவேலை செய்துபார்க்கையில் தான் தனது சக்திக்கு அது முடியாதென்று தெரிகிறது.

கொண்டும், பிரகாசித்துக்கொண்டும், ஆகாயம் வாசனை நிரம்பியும் இருந்தது. லாங்பெல்லோ.

301. Now the fair goddess, Fortune, Fall deep in love with thee . . . Prosperity be thy page!

SHAKESPEARE.

அதிர்ஷ்டம் என்கிற அழகிய தேவதையானவள் உன்னைக்கண்டு ஆசைப்படட்டும். ஐசுவரியம் உன்னுடைய வேலையாளாக ஆகும்.

ஷேக்ஸ்பியர்.

302. Where shall be tired and harassed feet,
Their consolation find.

SOUTHEY.

களைத்துத் துன்பமடைந்தவர்கள் எங்கே தேறுதல் அடைவர்? ஸதே.

303. He who believes every heart is unreal, Has something unsound at the core of his own.

ELIZA COOK.

எவனொருவன் வேறு ஒவ்வொரு ஹிருதயமும் உண்மையில்லாதது என்று நம்புகிறானோ அவன் தன்னுடைய மனதிலேயே தோஷமுள்ளவனாயிருக்கிறான். எலியாகுக்.

304. Good, once put in action or in thought, Like a strong oak, doth from its boughs shed down.

The ripe germs of a forest.

J. RUSSELL LOWELL.

நல்ல காரியம் ஒன்றை நினைத்தாலும் சரி, செய்தாலும் சரி, ஒரு பெரிய 'ஓக்' என்னும் மரம் அதனுடைய கிளைகளிலிருந்து எப்படி ஒரு பெரிய காடு உண்டாவதற்குக் காரணமாயிருக்கிறதோ, பழுத்தவிதைகளை உதிர்க்கிறதோ, அந்த மாதிரி அநேக நல்ல காரியங்களுக்கும் காரணமாக ஆகிறது. ஜே. ரஸ்ஸல். லவல்.

P. E. பாஷ்யம் நாயுடு.

எழுதுவதில் இரண்டுவிதம்.

அமைதியாய் ஒவ்வொரு எழுத்தாய் எழுத, எழுத்துக்குப் பின்னே எழுத்தாக யோசனையும் தொடர்ந்துவர, முடிபெறும் வியாசம் ஒரு தினுசு மகா வேகத்துடன் எழுத, மனமும் உடனுக்குடன் விஷயங்களைத் தந்துகொண்டே செல்ல, எழுதுவதற்கு முன்னே மனோவேகம் ஓட, அதற்குமுன் தான் ஓடப்பார்க்க, இவ்வாறு விரைவினில் எழுதி முடிவுபெறும் வியாசம் மற்றொரு வகை. இவ்விரண்டில் எது உயர்ந்ததென்றும், எது தாழ்ந்ததென்றும் ஒரு முடிவாக சொல்லிவிடுவதற்கில்லை. அட்படி அதனை அமையவைப்பது ஈசனருள்!

வெகுவெகு நேசம், அடிக்கடி சந்திப்பு, அன்பான வார்த்தைகள்! ஆனால் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வதும் ஒத்தாசையாக நிற்பதும் மட்டுமில்லை!



1. சீமையில் ஸ்திரீகளுக்கு நகைப்பைத்திய நாகரீகம் வரவா மாறுதலடைவது ஆச்சரியமே. முதலில் வைரவமாலைகளிலிருந்து வரவர கெம்புமாலைக்கு வந்து, பிறகு முத்துமாலைக்குச் சென்று, பிறகு பவழமாலைக்கு வந்து, இப்பொழுது முட்டை மாலைக்குத் திரும்பி யிருக்கிறதாம். அதாவது காட்டுப் பக்ஷிகளின் முட்டைகளைக் கொண்டுதந்து அவைகளை ஜாதைகளாகப் பிரித்து ரஸாயன முறைகளால் உள்ளிருக்கும் ஸத்துகளை நீக்கித் தங்கச் சங்கிலியில் கோர்த்து கழுத்தில் அணிகிறார்களாம். இம்முட்டை மாலைகள் நூறு பவுன் முதல் ஆயிரம் பவுன் வரையில் விலையாகிறதாம். இவர்களின் நாகரீகத்தை என்னென்றுரைப்பது!

2. இங்கிலாந்து தேசத்து மீன் ஜாதிகளுக்குள் மிகவும் விநோதமானது "சிவப்பு கர்னூர்ட்" என்ற ஒரு வகை மீனும். அவைகள் காக்கை மாதிரி கத்துமாம்

3. நீல கிரணங்களைக் கொண்டு "போட்டோ மைக்ரோகிராம்" என்னும் ஒரு கருவியை ஒரு ரஸாயன நிபுணர் கண்டு பிடித்திருக்கிறார். அக்கருவியைக்கொண்டு எந்த வஸ்துவையாவது புகைப்படம் பிடித்தால் இருபத்தைந்தாயிரம் பங்கு பெரியதாய்க் காண்பிக்குமாம். ஒரு சாதாரண ரப்பர் பந்தை ஒன்றரை மைல் குறுக்களவு உள்ள பந்தாகவும், ஒரு குண்டூசியின் தலையை நாற்பது கஜம் குறுக்களவு உள்ளதாயும் காண்பிக்குமாம்.

4. அயிரத்து நூறு கஜம் தூரத்திலிருந்தே ஒரு யானை மனிதன் அருகில் வருகிறதை மோப்பத்தினால் கண்டு பிடித்துவிடுமாம்.

5. வட அமெரிக்காவில் பஸிபிக் மஹா ஸமுத்திரத்தின் கரையோரங்களில் நதிகளின் முகத்துவாரங்களில் மெழுகுவத்திமீன் என்ற ஒரு ஜாதி மீன் அகப்படுகிறதாம். அதன் தேகம் மெழுகுவத்திமாதிரி இளகியிருப்பதால் அப்பெயரிட்டிருக்கிறார்களாம். இம்மீனைப் பிடித்து அதன் தலையிலிருந்து வால் வரையிலும் ஒரு துவாரம் செய்து அதனுள் ஒரு துணி திரியைச் சொருகிக் கொளுத்தி வைத்தால் மெழுகுவர்த்தி மாதிரி விடாமல் எரிந்துகொண் டிருக்குமாம். [ஜீவ ஹிம்ஸையை இந்த சந்தர்ப்பத்தில் எவர் நினைக்கிறார்கள்?—ப-ர்.]

6. வீடுகள் கட்டுவதற்காக செங்கல்களை உபயோகப்படுத்தும் முறை ஆறாயிரம் வருஷங்களுக்குமுன் பேபிலோனியா தேசத்தவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அதுமுதற்கொண்டு நாகரீகமுள்ள இடங்களில் எங்கும் கையாளப்பட்டு வருகிறதாம்.

7. நார்வேதேசத்துத் முறைமுகங்களில் ஸமுத்திர ஜலம் மிகவும் தெளிவாய் இருப்பதினால் இரண்டங்குல அகலமுள்ள எந்த ஸாமானும் நாற்றைம்பது அடி ஆழம் வரையில் கண்ணுக்குநன்றாய் ஜலத்தில் தெரியுமாம்.

8. ஓர் அபூர்வ மாதம்:—சென்ற 1886ம் வருஷ பிப்ரவரிமீ ஒரு விஷயத்

பிறர் இறந்து போகவேண்டுமென்று கோரிக்கொள்ளும் ஒவ்வொருவரும் தாம் மட்டும் வெகுகாலம் வரையில் சிரஞ்சீவியா யிருக்கப் போவதாய் மனப்பால் குடிக்கின்றனர்! காரணம் மண்-பெண்-பொன் ஆசையே

தில் மிகவும் அபூர்வமானது. அந்த மாதத்தில் பௌர்ணமி கிடையாது. முந்திய ஜனவரி மாதத்தில் இரண்டு பௌர்ணமியும், பிந்திய மார்ச்சு மாதத்தில் பௌர்ணமியும் வந்தன. உலகம் எற்பட்டது முதற்கொண்டு இந்த மாதிரி ஸம்பவித்ததில்லை யென்றும், இன்னொரு இருபத்தைந்து லக்ஷம் வருஷங்கள் வரையிலும் இந்த மாதிரி எற்படப்போகிறதில்லை என்றும் ஆங்கிலேய வானசாஸ்திரிகள் கணக்கு எடுத்திருக்கிருர்கள்.

9. பல தேசத்து க்ஷேம விசாரிப்பு:—நாம் ஒருவரை யொருவர் கண்டால் “நமஸ்காரம், ஸௌக்கியமா” என்கிறோம். வங்காளத்தில் “ராம், ராம்” என்கிருர்கள். ஆங்கிலேயர்கள் “காலை வந்தனம், உங்கள் தேஹஸ்திதி எப்படி?” என்கிருர்கள். “நீங்கள் எப்படி நிற்கிறீர்கள்” என்கிருர்கள் இத்தாலியர்கள். “நீங்கள் எவ்வளவு வியர்வை விடுகிறீர்கள்” என்கிருர்கள் எகிப்து தேசத்தவர்கள். “உங்கள் வயிறு எப்படியிருக்கிறது ஆகாரங்கள் உட்கொண்டீர்களா?” என்கிருர்கள் சீனர்கள். “நீங்கள் எப்படி உயிருடன் இருக்கிறீர்கள்” என்கிருர்கள் ருஷியர்கள். “உங்கள் நிழல் என்றும் குறையாமலிருக்க வேண்டும்” என்கிருர்கள் பெர்ஷியர்கள். “உங்களைப்பற்றி உங்களுக்கு என்ன தோன்றுகிறது” என்கிருர்கள் ஜர்மனியர்கள். “உங்களை எப்படித் தூக்கிச்செல்கிறீர்கள்” என்கிருர்கள் பிரேஞ்சுக்காரர்கள். ஆனல், இவை யெல்லாம் சாதாரண க்ஷேம விசாரிப்புகள்தான்.

ஒரே இரவில் பல காரண விழிப்பு. அவன் எப்போது கண்ணுறங்குவான், எப்போது அவன் மனைவியுடன் சுகிப்பது என்று ஒரு விழிப்பு. பணம் தேடும் யோசனையில் வெகுநேர விழிப்பு. வஞ்சகம் செய்யும் யோசனையில் விழிப்பு. புஸ்தகம் வாசிப்பதில் படித்தவனின் விழிப்பு. நாளை சேஷத்துக்கு வேண்டிய வேலைகளில் விழிப்பு. தூங்குகிறவளின் நகைகளைக் கழற்றுவதில் திருட்டு விழிப்பு. இன்னும் எத்தனைக்கோ விழிப்பு!

10. நாம் உயிருடன் இருப்பதற்கு நம்முடைய ஹிருதயம் வேலை செய்துகொண்டிருப்பதை அப்படியே புகைப்படம் பிடித்து பையாஸ்கோப்பில்காட்டக்கூடிய ஒரு நூதன புகைப்படமெடுக்கும் கருவியை இரண்டு பிரஞ்சு சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டுபிடித்து இருக்கிருர்களாம்.

S. A. ஸ்ரீநிவாஸ சர்மா.

தானே தன் வீட்டுக்குக் கூரை போட்டுக் கொள்ளத் தெரிந்தவன் இன்னொருவனைக் கூலிக்குத் திட்டம் செய்யமாட்டான்.

பொறுப்பை ஏற்காதவனைக்காட்டிலும், பொறுப்பு ஏற்றுக் குடும்ப நிர்வாகம் செய்பவன் தான் அதிகமாய்த் தூற்றப்படுவோன்.

விருப்பமில்லா வேலையில்!

விருப்பமில்லா வேலையில் மனம் படும் பாட்டை அநுபவித்தவரே உணரவேண்டும். வேறு திக்கின்றி அந்த வேலையே தலைவிதியாகி விடுகின்றது. அதை நினைக்குந்தோறும் கண்களில் நீர் ஊற்றெடுத்துப்பெருகும். பலபல சிந்திக்கவைக்கும். சுயேச்சையான ஒரு தொழிலுக்குக் காலமும் வழியும் காணாது நெஞ்சம் வேகும். இருக்கும் வேலையைக் கைவிடவோ அவனது எளிய வாழ்க்கை இடம் தாராது. விதியை நொந்து வேலைக்கேகுவான். சுயேச்சையின் ஆவல் எதிர்காலத்தை நோக்கிக் கொண்டு ஒரு பக்கம் கிடக்கும்!

***

விருப்பமில்லா வேலையில் உற்சாகமேது? சுறுசுறுப்பேது? தீவிர புத்தி யுக்தி தோன்றுவதுதானேது? தன்னுடலைச் சுமப்பதே ஒரு பாரமாய் அவனுக்குப்படுகிறது. வேலையில் அவ்வளவுக்கு கவனமும் செல்வதில்லை. சோம்பலாய் ஒரு மாதிரியில் நிற்கின்றான். உலக வெறுப்பு பொங்குகிறது. வேலை முடிந்து வீட்டிற்கு வரும் வேளையில் ஒரு பெரும் விடுதலை கண்டவன்போல் உல்லாச முறுகின்றான். எவ்விதத்தேனும் மேலானதொரு நிலையினை அடையவேண்டுமென்று நெடுக ஆலோசிக்கின்றான்.

***

விருப்பமில்லாத வேலையில் புத்தி நிலை குலைந்து பேதப்படுகின்றது. ஞாபகசக்தி தேய்வுறுகின்றது. செய்தொழிலில் கிரமம் தவறுகின்றது. ஒன்றிருக்க, ஒன்று புரிந்து எஜமானனின் மனத்தாங்கலுக்கும் வீண் அலுப்புக்கும் ஆளாகின்றான். விறகைத் தள்ளுவதற்குப் பதில் நெருப்பைத் தள்ளிக் கையைச் சுட்டுக்கொள்கிறான். ஒரு சாமானை வைக்க வேண்டிய இடத்தில் வைக்காமல் பிறகு அதைத் தேடித் தவிக்கிறான். வேலை செய்துகொண்டிருக்கும் பொழுதே அவன் சித்தம் எங்கோ வெளியிற்சென்று அலையும். அதனால் வேலை தவறுபாட்டில் பல பல பிழை காண்கின்றது. அதுநோக்கி எஜமானன் தனது சிடு சிடு, கடு கடு, முகக்கோணல், உக்கிரகவசனம்—முதலியவற்றைப் பொழிகின்றான். அவை நெஞ்சைப் பெரிதுங் குத்தித் தைப்பன. அச்சமயம் அவன் மனம் எய்தும் வேதனையை யாரே அறிவார்? வேதநாயகனே உணரல் வேண்டும். அவன் எண்ணும் எண்ணங்கள் அநந்தம். எண்ணி யெண்ணி ஏக்கமே மிச்சமாய்க் காண்கின்றான். சுதந்திரமடைவதற்கு அவன் மனம் தாவத் தாவ, அது எட்டாக் கொம்பாய், கிட்டிவந்து எட்டிச்செல்லும் மாயமானாகவுள்ளது! தாவிய மனம் தயங்கித் தவியாமல் பூரித்திடுவது எந்நாளோ?

***

விருப்பமில்லா வேலையில் மிகமிக வெறுப்புடனே வேறுநாடு சென்றிடவும் ஒரு பக்கம் உள்ளத்தைத் தூண்டுதல். மறுபக்கம் எவ்விதம் பிரிகிற

திருப்தி யடையாதவனிடமும், எல்லைக்கு மீறி அதிக ஆசை கொள்ளுபவனிடமும், தன் நடவடிக்கையில் (ஸ்திரீ) ஸம்சயம் கொள்பவனிடமும் எவ்வளவு பிரியமாயிருந்து அந்நியோந்நியப் பட்டாலும் பயனில்லை.

தென்ற பாசத்தின் தோண்டுதல். இதனை நினைக்கவே தன் உறுதியை விட்டுத் தாண்டுதல். என் செய்வதோ ஈசா! என இறைவனை வேண்டுதல். மெல்லவும் முடியாத விழுங்கவும்கூடாத தத்தளிப்பு! தன்னையே மறந்து கண்ணீர் வடிக்கின்றான். இவ்விதமேதான் இறுதிவரை இவன் முடிவோ? இன்ப பூரிதனுவதென்றோ? காலம் இவ்வண்ணமே சென்றுவிடுமா? கடவுளை நம்பிக் கெட்டவருண்டோ? நல்ல காலம் பின்னுக்கு இருக்கிறது. இன்னும் அது கூடும் நாள் நெருங்கவில்லை. அவ்வளவே சங்கதி.

***

விருப்பமில்லா வேலையில் இன்னும் அவன் கிடந்துழலக் கடவுளுக்கும் சம்மதியில்லை. நாலு மனிதர்களின் துணையைக் காட்டுகின்றார். ஒரு சங்கம் கூடுகின்றது. சங்கத்திற்கு ஒரு அச்சுக்கூடம் தேவையாகிறது. தொழில் தெரிந்த இவனை அதற்குத் தலைமை யாக்குகின்றார்கள். நிர்வாக அதிகாரியாகின்றான். வேலை தெரிந்தவனை வேறொரு வேலையாள் ஏமாற்ற இயலாது. வெகு நன்றாய் உழைக்கின்றான். நிர்வாகமும் செய்கின்றான், கூட இருந்து துணையாய் வேலை விவரமும் தெரிவித்து அச்சுக்கோர்த்தலும் செய்கின்றான். இதன் இடையில் கூடிய சங்கமும் பிரிந்துவிடவே, அன்னோர் ஸ்தாபித்த அச்சுக்கூடத்தை இவன் வசம் விட்டு, சிறுகச்சிறுக அதன் முதலைச் செலுத்திவிடும்படி வேண்டுகின்றனர். இவனும் அதற்கு இசைகிறான். சில வருடங்களில் தன் உழைப்பால் அச்சுக்கூடத்துக் கிரயம் முழுவதையும் செலுத்திவிட்டு இவனே அதன்சொந்தக்காரனாகிவிடுகிறான். தெய்வமும் கண் திறக்கின்றது. இவனும் சுதந்திரனாய் உயர்நிலை காண்கிறான். எவ்வளவு வேண்டுமாயினும் உழைக்கத் தயாராய்விடுகின்றான். ஹா! இறைவா! உன்னையே நம்பிய இந்த மனிதப் பூண்டுக்கு ஏதேனும் வழி வகை மீட்சியில்லையாவென்று அவன் அலறியது கடவுள் வரைக்கும் எட்டி விட்டது. அவன் மனம்போல் அவனுக்கொரு உத்தம தொழிலை ஆண்டவன் காட்டிவிட்டார். அடிமை நாற்றம் தொலைந்தது. சுதந்திரதேவி அவன் வாயிற்படியில் கம்பீரமாய் நிற்கின்றாள். விவாகமும் சித்திக்கின்றது. நன்மணி யொருத்தி அவன்கண்மணியாய் வாய்க்கின்றாள். காதல் உயர உயர மக்களும் உதிக்கின்றனர். ஓ! அவன் இந்நாள் பெரிய மனிதர்களில் ஒருவனாகிவிடுகின்றான். இது இறைவனை நம்பிவிட்டதின் இனிமை. இது அடிமை வாழ்க்கையை வெறுத்ததின் விளைவு. இது சுதந்தரச் சிந்தனையில் ஊறிய உள்ளத்தின் வெற்றி. இது தெய்வத் திருவருள்.

இத்திருவருளினை நீயும் ஒருகால் பெற்றிடுவாய். சித்தம் சலியாதே. சிந்தை கலங்காதே. ஒரு உறுதி நெஞ்சத்துடன் உயர்வினை நோக்கிச் செல். அது என்றாவது ஒரு போழ்தில் கைகூடும். கூட்டுவிப்பது ஆண்டவன் அருள். நீ மட்டும் ஓயாது தொழில் புரிந்துகொண்டேயிரு. முயலுகமேன்மேல். முயலுக மேன்மேல்.

T. S. குழந்தைவேல் முதலியார்.

தானே உழைத்து வேலை செய்யக்கூடியவன் இன்னொருவனின் உதவிக்காகக் காத்திருக்கமாட்டான். அந்த அன்னியன் உதவியும் அவனுக்குத் தேவையில்லை. அந்த உதவியும் அவன் வேலையைப்போல் அழகு தராது.



எனது குருநாதர் :—

இது விவேகானந்த ஸ்வாமிகள் அமெரிக்கா நியூயார்க் நகரில் செய்த அரியதோர் உபன்யாஸம். இதனை ஸ்ரீமான் ஆர். நாராயண ஸ்வாமி ஐயரவர்கள் மொழிபெயர்த்துள்ளார். ஸ்வாமிகளின் உபன்யாஸங்கள் நம்மவர்க்குப் புத்துயிர் அளிப்பனவாகும். அதன் ருசிகரமே ஒரு தனி விதம். தனி பாகம். யாவரும் வாசித்துப் பயன்பெறுவாராக.

ஒரு பெண்ணரசியின் பிரஹ்ம ஞானோபதேசம் :—

திருவாளர்- ஆசிரியர் ஸ்ரீ சாது- கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் இயற்றியது. சூடாலை யென்னும் பாரத வருஷத்திய ரமணீரத்தினம் தன் பிராணகாந்தனை தனது ஞானோபதேசத்தினால் திருத்தி உய்விக்கச் செய்ததோர் அற்புத சரித்திரம். இது முற்றிலும் வேதாந்த சாரம். எளிய நடையில் கற்றாரும் கல்லாரும் ஒருங் குணருமாறு நன்கு வரையப்பட்டுள்ளது. வாசித்தவர்க்கே அதன் அருமை பெருமை புலனாகும். ஆசிரியரின் படத்துடன் உள்ளது. விலை அணா 8.

தர்ம வாசகம் :—

திருவாளர் ஆசிரியர்-கோ. வடிவேலு செட்டியாரவர்களின் வாக்கு. கைக்கு அடக்கமான அழகிய சிறு நூல். நூல் சிறிதே எனினும் கருத்துகள் மிகமிக உயரியனவாம். 32- தலைப்புகளின் கீழ் பல அரிய விஷயங்களைத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக 'பகை' என்பதைக் குறித்துப் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது :— "விரோதம் செய்வது பகையாம்; அஃது உள் வெளியன இருவகைத்தாம். உட்பகை காமக்குரோத முதலியனவாம்; வெளிப்பக—தீங்கு செய்யும் பங்காளிகள், உறவினர் முதலியோராவர்; வெளிப்பகையை வெல்வதெளிதாம். உட்பகையை வெல்வது எளிதன்றாம். உட்பகையை வென்றவர்க்கு வெளிப்பகை யெவ்வாற்றானு மில்லையாம்."

இதன்றி 'சச்சிதானந்த சிவம் தானே' என்பதைக் குறித்தும் விளக்கமாய் எழுதப்பட்டுள்ளது. நிர்வாண சதகம், விவேகஷட்கம் இவைகளும் அடங்கியுள்ளன. இது எவர்க்கும் ஒரு ஹஸ்தபூஷணமாகும். அணா 3.

திருத்தணி முருகன் சாவடிப் பதிகம் :—

ஸ்ரீமான் இராமநாத பிள்ளையவர்களால் இயற்றப்பெற்ற சிறு நூல். பாக்கள் மிக்க இனிமையுடனுள்ளன. விலை அணா 1.

மற்ற நூல்களின் விமரிசனம் மறுமுறை வரும்.

☞ **இப்புஸ்தகங்கள் நமது அமிர்த குணபோதினி ஆபீஸில் விலைக்குக் கிடைக்கும்.**

எவ்வளவுக்குக் களங்கமற்ற வெள்ளைமனமோ அவ்வளவுக்குக் கடிதங்கள் அதிகம் எழுதுகிறான். அவனே கபடனாகும்போது கடிதமும் சுருங்கிவிடுகிறது.

முன்னே—பின்னே.

1
தோம் முன்னே.
பிளவு பின்னே.

2
நேசம் முன்னே.
குற்றம் பின்னே.

3
காதல் முன்னே.
காமம் பின்னே.

4
சமாதானம் முன்னே.
சச்சாவு பின்னே.

5
புருஷன் முன்னே.
தன் சுகம் பின்னே.

6
நிற்பது முன்னே.
நடப்பது பின்னே.

7
நல்ல நினைவு முன்னே.
சுடுகோபம் பின்னே.

8
வாழ்க்கை முன்னே.
வேற்றுமை பின்னே.

9
அன்பு முன்னே.
கண்டிப்பு பின்னே.

10
சுகம் முன்னே.
ருசிப்பு பின்னே.

11
மனைவி மகவு முன்னே.
தன் சுகம் பின்னே.

12
கற்பு மானம் முன்னே.
பிராணன் பின்னே.

13
குணம் முன்னே.
அழகு பின்னே.

14
விவாகம் முன்னே.
சாந்தி பின்னே.

15
சந்தா முன்னே.
பத்திரிகை பின்னே.

16
உறவு முன்னே.
பகை பின்னே.

17
இாக்கம் முன்னே.
சம்பளம் பின்னே.

18
"மஞ்சள்" முன்னே.
"உப்பு" பின்னே.

☞ முன்னுள்ளதையே பிரதானமாகக் கருதிப் பின்னுள்ளதை பிறகு கொள்ளப் பழகினால் ஜீவியத்தில் சாந்தமும் சமாதானமும் காணலாம்.

நாளைக்குக் கடவுளுக்குக் கணக்கு சொல்லவேண்டுமே? அதை யோசித்து நட. உன்னை மேலிருந்து கேட்பவர் இல்லையென்று எண்ணாதே. கடவுள் உன்னைக் கவனிக்கிறார். அக்ரமத்திற்கு அஞ்சு. பாவத்திற்கு விலகு. பிறருக்கு உதவ சக்தி யிருந்தும் வஞ்சனையோடு தூரப் போகாதே. கடவுளும் உனக்கு நன்மை செய்வதில் அப்படியே தூரப்போய்விடுவார். இதை நீ மனதில் வை.



எல்லாம் அவரைக் கேட்டுச் செய் என்று விவாகத்திற்கு முன்னே ஒருவனை உயரத் தூக்கி வைத்துக் கௌரவிக்கிறது. தாங்கள் செய்கிற செட்டு, சிக்கனம், தாறுமாறுகட்கெல்லாம் அவர் திட்டம் அப்படி யென்று உயர்த்தியவனை முன்னே காட்டிவிடுகிறது. விவாகமானதும் அந்த உயர்த்தியவனை விலக்கி, மனஸ்தாபத்துடன் அவனை நிந்தித்துக் கேவலப்படுத்துகிறார்கள்!

வந்த விருந்தினர் மற்றவர்களுக்கு வேண்டுமே யென்று நினையாமல் பாத்திரத்திலுள்ளவற்றை எல்லாம் தங்கள் இலையிலே ஊற்றிக்கொண்டு விடுகிறார்கள்,



முருகனின் சத்தியாக்கிரகம்.

(261-ம் பக்கத் தொடர்ச்சி.)

அன்றைய பகல் கழிந்தது. இரவும்மணி எழு ஆயிற்று. முருகன் படுக்கையினின்றும் எழவில்லை. அவன் தாயார் அவனிடத்துச் சென்று பலவாறு வேண்டினாள். தான் இனிப் புலால் உண்பதில்லை யெனச் சத்தியமுஞ் செய்தான். அவன் சிறிதும் அசையவில்லை. தன்னை யீன்ற அன்பு வடிவாகிய தாயாரின் வாடிய முகத்தைக்கண்டும் அவன் மனம் இளகவில்லை. பின்னர் அவள் கணவனிடஞ் சென்றாள். "உங்களுக்கு என் இவ்வளவு பிடிவாதம்? அவனோ ஒன்றும் அறியாத சிறு பிள்ளை; நீங்களும் அப்படித்தானோ? ஒரு நாளைக்கு உங்களால் ஒழித்து விட்டிருக்க முடியாதா?" என்று ராம பாணம்போல் துளைக்க ஆரம்பித்தாள் கணவனை. "ஒரு நாளைக்கா? அவன்தான் என்றுமே கூடாது என்கிறானே. இந்தச் சிறு பயலுக்கு இவ்வளவு அகங்காரமா?" என்றார் கவுண்டர்.

"அவன் முதலில் ஒரு நாளைக்கு, அதுவும் தீபாவளியன்று மட்டுந் தானே கேட்டுக்கொண்டான். நீங்கள் ஒரே பிடிவாதமாய் முடியாது என்கிறீர்கள்; இப்பொழுது அவன் உங்களுக்குமேல் முரண்டு செய்கிறான். எப்படியாவது சமாதானஞ் செய்து அவனைச் சாப்பிடச் செய்வது தங்கள் கடமை."

"சரி, என் கடமைதான்; முதலில் எனக்குச்சாதம் போடு, பின்பு என் கடமையைச் செய்கிறேன்."

எனக்கூறித் தான்மட்டும் உண்ட பிறகு தன் படுக்கையறைக்கு நித்திரை செய்யப் போய்விட்டார் நல்லப்ப கவுண்டர். பேதை மனைவி யாது செய்வள்? கணவன் உண்ட எச்சில் பாத்திரம், சோறு முதலிய சமைத்த கலயங்கள், எரியும் விளக்கு இவற்றையெல்லாம் அப்படியப்படியே விட்டுவிட்டுத் தன் குமாரன் படுத்திருக்கும் அறைக்குச் சென்றாள். நீரின்றித் துவளும் நெற்பயிர்போலச் சோறின்றித் துவளும் தன் அருமருந்தன்ன மகனைக்கண்டு மனம் நொந்தாள். எத்தகைய சமாதானஞ் சொல்லி அவனை எழுப்புவது என அறியாமல் அவன் கட்டிலின் சமீபத்திலேயே வெறுந் தரையில் தன் சேலையின் ஓர் முனையை விரித்துத் தானும் பட்டினியாய்ப் படுத்துக்கொண்டாள். ஆ! என்னே பெண்களின் பெருந்தகைமை! "பெண் தெய்வம்" எனப்போற்றுவது என்றும் தகும். ஈசா! பெண்

துணிவு என்பது சுதந்தரத்திற்கும், தான் முன்னுக்கு வருவதற்கும் வேண்டற்பாலதான ஒரு தனி உணர்ச்சி. ஆனால் 'துணிவு' துன்மார்க்கத்தில் கூடாது. ஒரு குடும்பத்தைக் கலைப்பதில் கூடாது.

களுக்கு அருளும், அன்பும் பழுத்த மைந்தனைப் படைத்தாய். ஆடவர்களுக்கு மட்டும் ஏன் கல்லிலும் கடிய மனதைப் படைத்தாய்?

மறுநாள் பொழுது புலர்ந்தது. "முருகா! உன் தந்தையும் உன் விருப்பத்திற்குக் கட்டுப்பட்டுவிட்டார். காலையிற் சிறிது "கிராகார" மாவது சாப்பிடு. ஐயோ! உன் கண்களிரண்டும் குழிந்து விட்டனவே; கன்னமும் வற்றிவிட்டது. உதட்டில் ஈரப் பசையே யில்லை; தம்பி! எழுந்திரு!" என அவன் வாடிய மேனியைத் தழுவிநின்றெ ழுப்பினள் முருகனின் தாயார்.

"அம்மா! நீங்கள் என் வருந்துகின்றீர்கள்? நான் பட்டினி கிடப்பதால் நமக்கு நன்மையே தவிர வேறில்லை. இதுவரை நாம் செய்த பாவச்செயல்களையாவது கடவுள் மன்னிப்பாரென்பது எனதெண்ணம்" என்றான் அவ்வுருவினிற் சிறியன்.

"தம்பி! ஒருநாள் முழுவதும் பட்டினி கிடந்ததுபோதும்; கடவுளும் உன் தந்தையைப்போல் கல் மனம் உள்ளவரல்ல."

"நான் அதை நன்குயறிவேன். இதுவரை நடந்த பாவச் செயல்களுக்கு இந்த ஒருநாள் பட்டினி. இனி என்றும் அத்தீச்செயல் நம் வீட்டில் நடக்காதிருப்பதற்கு ஆண்டவனருளை வேண்டி நிற்கின்றேன். தந்தையின்மீதோ மற்று யார்மீதோ எனக்கு எள்ளளவும் வருத்தமில்லை. இந்த விஷயத்தைக் குறித்து எனக்கும் இறைவனுக்கும் சம்பந்தமே தவிர வேறு யாருக்குமில்லை. நீங்கள் கவலைப்படாது வீட்டுக் காரியங்களைச் சென்று கவனியுங்கள்."

கல்லாற் செய்த உருவமென அசைவற்று நின்றாள் தேவம்மை. மலையினின்றும் அருவி விழுவது போல் அவள் கண்களினின்றும் நீர் பெருகி வழிந்தது. தன் வீட்டின் ஓர் மூலையிற்சென்று படுத்துக்கொண்டாள்.

கவுண்டர் காலை 8-மணிக்கு வீட்டிற்கு வந்தார். அங்குள்ள நிலைமையைக் கண்டதும் அவர் மனம் "துணுக்" கென்றது. தலைவிரிகோலமாய்க் கிடந்த மனைவியை யெழுப்பினார். "நீயும் உன் மகனோடு சேர்ந்து கொண்டாயா? இம், உனக்கும் அவ்வளவு ஆணவமா?" என மயிரைப் பிடித்திழுத்து, "இனி என் வீட்டில் இருக்காதே, ஓடிப்போ வெளியே" என்று இரண்டு உதை உதைத்தார்.

"நான் வெளியே எங்கே போவது? இந்த வீட்டில் இருக்க எனக்குச் சொந்தமில்லையா?"

"சொந்தமா? உனக்கா சொந்தம்? உங்க அப்பன் சம்பாதித்த வீடா?

என உறுமிக்கொண்டே மேலும் மேலும் கைசலிக்க அடித்து வெளியே சென்று விட்டார். முருகன் தன் அறையினின்றும் வெளியே வந்தான். தாயின் நிலையைக் கண்டான். கதறி யழுதான். "ஐயோ! என்னாலல்லவா உங்களுக்கிந்த கஷ்டம் வந்தது; தந்தையின் கோபம் இன்னும் அதிகரிப்பதற்குள் வீட்டுக் காரியங்களைச் சென்று கவனியுங்கள். கடவுள்

தன் வீட்டில் சாதத்தில் நெய் ஊற்றும்போது 'போதும்' என்கிறது. பிறர் வீட்டிலோ எவ்வளவு நெய்யூற்றினாலும் மௌனமாய் இருந்துவிடுகிறது. போதும் என்று சொல்வதேயில்லை. இப்படியும் சிலர் உண்டு.

இன்னும் என்ன என்ன சோதனைக்கு ஏழையேனை ஆளாக்கி யிருக்கின்றனரோ'' என விம்மி விம்மி அழத் தொடங்கினன்.

"செல்வமே! நான் இன்னும் அதிக கஷ்டங்களை யநுபவிக்க ஆண்டவனுக்கு விருப்பமில்லை. அவர் ஏழைபங்காளனல்லவா? எங்காவது குளம் குட்டையில் விழுந்து மடிவோம் வா'' எனத் தன் மகனைத் தழுவிப் புலம்பினாள் தேவம்மை.

"தாயே! அது மட்டும் வேண்டாம். ஏதோ தந்தை கோபத்தால் இவ்வாறு செய்துவிட்டால், நாம் அவரை என்றுமே துன்பத்தால் வருந்தும்படி செய்வது தருமமல்ல. அவருடைய செய்கைக்கு அவரே இனி வருந்துவார். அவ்வாறின்றி இன்னும் நம்மைத் துன்பப்படுத்த அவர் மனம் இசையினும், அதை நாம் சகித்துக்கொள்வதே முறை. அதனால் நமக்கு யாதொரு குறைவும் நேரிடாது. தாங்கள் சென்று வீட்டுக் காரியங்களைப் பாருங்கள். தந்தையின் நடை முறையால் கொஞ்சமும் அவர்மீது கோபமிருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டாம்'' எனத் தன் தாயைத் தேற்றி, பசி மயக்கத்தால் கட்டிலிற் சென்று அயர்ந்து படுத்துக்கொண்டான்.

(தொடரும்.)

பெ. இராமாநுஜ ரெட்டியார்.

ஒவ்வொரு மனுஷ்யனும் தன்னால் மற்றவர்க்கு ஏதேனும் பிரயோஜனமுண்டாகும்படி நடந்தாலன்றி பிரீதிக்குப் பாத்திரனாகான். ஆதியிற் செய்த உதவியை இப்போதும் நினைவில் வைத்துக்கொண்டு பிரீதி பாராட்டுவரென்றெண்ணுவது தவறு. உலகமிருக்கும்வரை நல்லது செய்துகொண்டே யிருக்க வேண்டும். இல்லையேல் பந்துக்களும் அலக்ஷியம் செய்து அருவருப்படைவர்.

சந்தோஷப்பட மனுஷாளில்லை.

நாலு காசு சேர்த்துவைத்திருந்து அதைச்சொன்னால், கேட்பவர்கள் "சரிதான்" என்கிறார்கள். அதில் ஒரு பிரீதி காண்பித்து அவ்வளவுக்குத் தொகை சேர்த்த ஒரு பிரயாசையின் அருமையைச் சிலாகிப்பதில்லை. ஜாடையாக ஒரு மாதிரியாய் இருந்துகொள்கிறார்கள். மனைவியோ தான் கேட்ட நகை வாங்கித் தரவில்லையென்று சம்பளம் வந்த தினத்தில் முணுமுணுக்குகிறாள். மற்றவர்களோ அவ்வளவுக்குச் சேர்த்துவிட்டானா என்கிறார்கள். உலகம் இப்படி விலகிப்போகிறதே தவிர, சந்தோஷப்படுகிற மனத்தினரைக் காணோம். அப்படி சந்தோஷப்படக்கூடியவர்கள் வெகுநாளைக்குமுன்பே கண் மூடிக்கொண்டு போய்விட்டார்களாக்கும்!

பழமொழிக் குறிப்புகள்

2. அற்ப குணம்.

(245-ம் பக்கத் தொடர்ச்சி.)

108. அற்பன் பணம் படைத்தால் வைக்க வகையறியான்.

அற்பனுக்கு பெரிய குணங்கள் எங்கிருந்து வரும் என்றபடி. ஒருவருக்கு எதெது ஸ்வபாவமோ அததற்குத் தகுந்தபடி பயிற்சியும் குணமும் அமைந்திருக்கும். எவ்வளவு வாரிக் கொட்டியிருந்தாலும் தரித்திர புத்தியுள்ளவர்களுக்குத் தாராளமாய் எடுத்துக் கொடுக்க மனம் வராது. திருப்தி படப் புசிக்கும்படி வைக்கவும் தெரியாது. அவர்கள் பழகிப்போன அற்ப நிலைமை பெரிய ஸ்தானத்துக்கு வந்த காலத்திலும் அந்த அற்பத் தன்மையையே காட்டிச் செல்லும். திருட்டுப் புத்திபுள்ளவன் பிறகு எவ்வளவு தனவந்தனுகிவிடினும், கண்ணுக்கெதிர்ப்பட்ட ஒன்றைத் தான் விரும்புமிடத்துப் பக்குவமாய் எடுத்து மறைத்துவிடவே முயலுவான். அதிகப் பணம் வைத்துச் செலவிட்டறியாத ஒரு அற்பனுக்கு அவன் தந்தையின் சொத்து கிடைத்ததும், அதைச் சேர்த்த உழைப்பின் அருமையை உணராமல் துர்விஷயங்களில் புகுந்து அதற்குத் தகுந்தவர்களுடன் கூடிக்கொண்டு எல்லாவற்றையும் செலவிட்டுத் திண்டாடுகிறான். மனைவிக்கு அணிவித்த தங்க ஒட்டியாணம் தாசி கண்ணுமணியின் இடுப்புக்கு அலங்காரமாகிவிடுகிறது. இவ்வளவு துர்விநியோகப்படுத்தியதற்குக் கணக்குசெய்யாமல் ஒரு உத்தமனுக்கு அவன் அவசரத்துக்கென்று தந்த மூன்று இரண்டு ரூபாயின்மீது மட்டும் கண் வைத்துக்கொண்டு அதைத் தன் தாய் அல்லது மாமியிடம் சொல்லி வாங்கச் சொல்லுகிறான். இது அவன் தந்து நாலைந்து வருஷமாகிறது. அதை வாங்கியவனும் அதை மறந்திருக்கும் வேளையில் அந்த அற்பனைச் சேர்ந்த மாமியோ எவரோ இவனிடம் வந்து ஐந்து வருஷத்திற்கு முன்பு தந்த மூன்று ரூபாயைக் கொடு என்று கேட்கிறார்கள். இது அவனுக்கு 'சுருக்' என்று தைக்கிறது. இந்த அற்பனுக்கும் அவன் வீட்டாருக்கும் இவன் எவ்வளவோ விருந்துகளும் செலவுகளும் செய்திருக்கிறான். பல நாள் இவன் வீட்டில் தங்கியும் போய் இருக்கிறார்கள். இதன் இடையே எண்ணுயிரம் ரூபாய் துர்விநியோகமாய்த் தொலைந்துமிருக்கிறது. இதற்கெல்லாம் எண்ணிப் பாராமல் அந்தப் பழய மூன்று இரண்டு ரூபாயைக் கேட்கவும், இவனும் அவர்களின் அற்பத் தன்மையை நினைத்துக்கொண்டு உடனே கொடுத்துவிடுகிறான். அதன் பிறகு இவன் வீட்டிலேயே மூன்று நாள் தங்கியிருந்து விட்டுச் செல்கிறார்கள். இது எப்படிப்பட்ட வேடிக்கை என்பது! இன்னும் சிலருக்கு எவ்வளவு சொத்துக்கள் சேரினும் அதை ரகசியப்படுத்திக்கொண்டு எதும் இல்லாதவர்கள் போலவே மத்தளம் கொட்டுகிறார்கள். அவ்வளவு பணத்துக்கு

பணக்காரன் தன் வீட்டுக்கு வந்த ஏழைக்கு கூழும் தண்ணீரும் இட்டுவிட்டு, தான் அந்த ஏழையின் வீட்டிற்குப் போகையில்மட்டும் தனக்கு தடபுடல் விருந்து நடக்கவேண்டுமென்று நினைக்கிறான்.

நான் எங்கே போவது, நானே ஏழை என்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல, அவர்களின் குஞ்சு குட்டிகள் எல்லாம் ஒரே அற்பத்தனமான சாயலில் உரு வாய்விடுவது இன்னும் அதிசயமே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குணம் அவர்களின் ஜன்மப் புத்தியாய் அமைகிறது. அதிலே இந்த அற்பத்தனமும் ஒன்று. இதில் பழகிவிட்டவர்கள் திருந்துவது மிகவும் கஷ்டம். அன்றியும் பணமே வெகுநாள் வரையில் ஒருமிக்கக் கண்டறியாத அற்பனுக்குத் திடீரென்று பணம் சேரின், அதைப் பத்திரப்படுத்தும் விதம், பெருக்குவிக்கும் வகை இவற்றை யுணராதவனாய்ப் பிறரிடம் நம்பிக் கொடுத்து மோசம் போகும் படியோ, அல்லது தாறுமாறாய்ச் செலவிட்டுத் தடுமாறும்படியோ நேருமென் பதும் இந்தப் பழமொழியின் கருத்து. கிடைத்த பணத்துக்குத் தகுந்தபடி பெரிய புத்தி படைக்கமாட்டானென்பது மற்றொரு கருத்து.

109. நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்கு புல்லு சுமை நீங்குமா?

தோட்டிக்கு வேலை புல் சுமை எடுப்பது? நல்ல துரை வந்தாலும் அந்தப் புல்லைச் சுமக்கும் வேலையில் அவன் இருக்கும் வரையும் அந்தத் தொழிலைத்தான் அவன் செய்து மிதிபடும்படி இருக்கும். கெட்ட துரை இருந்த காலத்தில் அவரின் கீழ் இவன் புல்லு சுமை எடுத்ததும், அவரும் இவன் அந்த ஈனத் தொழிலை விடாதபடி அதிலேயே இவனைப் போட்டு முடக்கிவைத்திருந் ததும் சரிதான். இப்போது நல்ல துரை வந்திருக்கிறார். அதற்குத் தக்கபடி இவனும் புல்லு சுமப்பதை விட்டொழித்து நல்ல புத்தியும் கல்வியும் பெற்று சற்று உயர்ந்த அந்தஸ்துக்கு வரப் பிரியப்பட்டு அதற்கான முயற்சி கொள்வா னாகில், நல்ல துரையும் சந்தோஷத்துடன் இவன் அபிவிர்த்திக்கு வேண்டிய உதவியைச் செய்து வைப்பார். இவனும் அவரது உதவி பெற்று உயர்ந்த நிலைக்கு எட்டிவிடலாம். இவ்விதம் தன்னைத்தானே திருத்திக்கொண்டு மேலோங்கப் பார்க்காமல், பழய புல்லு சுமையை எடுத்தெறியாது நாட்டுக்கு நல்ல துரை வந்தும் தோட்டிக்கும் புல்லு சுமை போகவில்லை யென்றால், அதற்குத் துரைதான் என்ன செய்வார்? அவர் எவ்வளவு நல்லவரா யிருந்தும் இவன் புத்தி திருந்தாதவரையில் அவர் இவனுக்கு என்ன உதவி செய்ய முடியும்? பழய பழகிய அற்பத்தனத்திலேயே இருந்துகொண்டிருப்பின் என்ன வாழ்வு வந்தாலும் அவன் அதற்குத் தக்கபடி உயர்ந்து பெருமைப்பட மாட்டானென்பது இந்தப் பழமொழியின் கருத்து. முக்கியமாய் இந்தப் பழமொழியைத் தீண்டாத வகுப்பினர் நினைத்துப் பார்த்து, தங்களின் உயர்வு தங்கள் கையிலேயே இருக்கிறதென்றுணர்ந்து, தங்களின் ஈன, அற்ப கிருத்தியங்களை விட்டொழித்து, அசங்கிதப் பழக்கங்களைத் தவிர்த்து நல்ல புத்தியும் கல்வியும் சுசீலமும் சுத்தமும் படைத்துத் திருந்துவார்களாகில் அவர்களின் அபிவிருத்தி வெகு துரிதத்தில் ஏற்படும். அவ்விதமின்றி சலவை செய்த பளபளப்பான துணிகள் கோட்டுகள் மட்டும் அணிந்து உள்ளுக்கு அந்தப் பழய குணங்களையே கொண்டிருப்பதில் விருத்திக்கு வந்துவிட முடியாது. அசங்கிதத் துறைகளிலேயே இருந்துகொண்டு தாங்கள் உயர வில்லை, உயரவில்லை என்பதிலும் காரியமில்லை. எவனும் தனது அற்ப

தேசசரித்திரம் என்பது அவ்வப்போது நடந்த ஜனங்களின் கிளர்ச்சி, அதிலே அரசாங்கத்தின் போர் இவற்றின் செய்திகள் அடங்கிய ஒரு திரட்டாகும்.

குணங்களை விட்டொழித்தால்தான் மேலான ஸ்திதிக்கு வரலாமென்பதை இப்பழமொழி உணர்த்துகிறது.

110. எச்சிலைக் குடித்துத் தாகம் தீருமா?

எச்சில் ஒரு அற்ப வஸ்து. மிகுந்த தாகம் ஏற்பட்டபோது உடனே ஜலம் கிடைக்காத சமயம் தன் வாயில் ஊறும் எச்சிலைகொண்டு கொஞ்சம் ஈரப்பட நனைத்துக்கொள்வது இயல்பு. இந்த அற்பத்தில் என்ன திருப்தி ஏற்படப் போகிறது? இவ்விதமே அற்ப சந்தோஷத்தால் என்ன சுகம் உண்டாகப்போகிறது? இந்த எச்சிலைக் குடித்துத் தாகம் தீருமா? தாக நிவர்த்திக்கு வேண்டியவரை ஜலம் பருகினாலன்றோ அது அடங்கும்? அந்த ஜலத்துக்கு முன்பு இந்த எச்சில் எம்மாத்திரம்? அதுபோல் தான் உயரவேண்டுமானாலும், தனக்கு ஒரு பின் ஆதரவால் ஒருவரை நம்பவேண்டியிருந்தாலும், அவர்கள் பெரிய குணமும் தாராள புத்தியும் உள்ளவர்களா யிருக்கப் பார்த்து அத்தகையோருடன் சேர்ந்து நலம் பெறவேண்டுமே யன்றி, எச்சிலுக்குச் சமமான அற்ப புத்தியும், தன்னவரின் க்ஷேமத்தில் மட்டும் சிரத்தையுமுள்ள சுயநலச்சிந்தை மிகுந்தவர்களை அண்டி நிற்பதில் என்ன பயனுண்டாகப்போகிறதென்பதை இந்தப் பழமொழி எடுத்துக்காட்டுகிறது. தங்களைத் தஞ்சமென்று அடுத்தவர்களை ஆதரித்துத் தங்களால் இயன்றவரை உதவி செய்து ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டுவரக்கூடிய பெருந்தன்மையாளர்கள் சிலர் இருக்கவே இருக்கிறார்கள். அவர்களை அண்டினால் க்ஷேமம் அடைவது கூடும். எச்சிலுக்குச் சமமான அற்பர்களை யடுத்தால் என்ன க்ஷேமம் ஏற்படப்போகிறது. தனக்குப் பிராணாதாரமாய் இருந்தவர்கள் மாண்டுபோக, அந்த ஆசையை விடமுடியாமல் மற்றவர்களை அந்த உறவு கொண்டு பிரீதி பாராட்டி நெருங்கப் பார்க்கிற சிலர் உண்டு. இவர்கள் புதிதாய் ஏற்படுத்திக் கொண்ட அந்த உறவுகள் எச்சில் உறவாய் அற்பமாய் முடியுமே யன்றி முன்பு இருந்த தன்னைத் தாங்கிய அந்த இறந்துவிட்டவர்களைப்போல் இந்த எச்சிற்காரர்கள் உதவார்கள், அத்தகைய அன்பு பாராட்டவு மாட்டார்கள் கடைசியில் ஏமாறித்தான் போகவரும். இவ்விதமே அற்ப சகவாசத்தையும் எச்சில் சகவாசம் என்று கூறிவிடலாம். இதிலிருந்து உண்டாகும் சந்தோஷம் என்ன நிலைக்கப் போகிறதா? அற்பம் எங்கும் அற்பம்தான். முடிவும் அற்பமாகவே பின்னுக்கு ஆகிவிடும்.

> சந்தோஷம் பணக்காரர்களுக்கு மட்டும்தானா? ஏழைகளுக்கு இல்லையா? பணக்காரன் பணம் செலவிட்டு சந்தோஷத்தை வி. பி. யில் தருவிக்கிறான். ஏழைக்கோ இலவசமாய் சந்தோஷத்தைக் கடவுள் கொடுக்கிறார். பணக்காரனின் காபி பலகார சந்தோஷத்தைவிட, ஏழையின் கூழ், மிளகாய் அதிக சந்தோஷம் தருகிறது. வீட்டுத் தலைவனிலும் பெண்ணுக்கே அதிக சந்தோஷமாம்.

(தொடரும்.)

சிறுமணித்திரள்

(257-ம் பக்கந் தொடர்ச்சி)

449. சில மனிதர்கள் பலன் கொடுப்பதைவிட, மாத்துண்டுகள் நல்ல பலனை அளிக்கின்றன.

450. சில வக்கீல்கள் சாக்ஷிக ளைக் குறுக்கு விசாரணை செய்கையில் உபயோகமற்ற கேள்விகளைக் கேட் டுத் தங்களுக்குப் பிரதிகூலமான மறு மொழியை வரவழைத்துக் கொள்ளு கிறார்கள். செக்கு கத்துவதுபோல் இவர்கள் தொண்டையிலிருந்து புறப் படும் விகாரத்வனி கர்ணகடூரமா யிருக்கிறது. இவ்வாறு செய்யாமல் பயனுள்ள பிரசினங்களைக் கேட்டுப் பதில் பெறுவாரோ புத்திசாலிகள் பேசும்போது மதுரமான குரலை உப யோகிப்பது சகோதரர்களுக்கு ஆநந்தத்தை தருமன்றோ?

451. பலவித பக்ஷிகள் பிரபஞ் சத்தில் ஜீவிக்கின்றன. கிருமிகளை எண்ணி முடியாது. ஜீவப்பிராணிக ளைக் கணக்கிட ஸாத்தியமில்லை. துஷ்ட மிருகங்களை அடியோடு நாசம் செய்து பிரக்யாதியடைந்தவர் களில்லை. கடவுள் சிருஷ்டியில் மனித ஜன்மமே ஸர்வோத்தம மென்று கொண்டாடப்படுகின்றது. இத்தகைய மனித ஜன்மத்தை யடைந்தும், அவனுக்குச் சில விஷயங்களில் புத்திக்குறைவுண்டா கிறது. துஷ்காரியங்களைச் செய்வ தில் ஸமர்த்தனாகிறான். துஷ்ட மிரு கங்களுக்குள்ள செய்கைகள் இவனி டம் அநேகமுள. மனிதனாய்ப் பிறந் தும் இத்தகைய மிருக ஸ்வபாவங் களை என் கைக்கொள்ளுகிறான்.' இது அறியாமையேயன்றி வேறில்லை.

452. கிராமங்களில் வஸிக்கும் சிறுவர் சிறுமிகள் இரவிலும் பகலி லும் அச்சமின்றிச் செல்வர். நிர்ப்பந்த மாய்த் தெருவில் ஸஞ்சரித்து பல வீடுகளுக்குச் சென்று தைரியமாய் வார்த்தையாடுவார்கள். ஆடுமாடுக ளின் ஸம்ரக்ஷணை, விவசாய விஷ யங்கள் முதலியவற்றை நன்றாய்க் கற்றிருப்பார். ஆறு குளங்களுக்குத் தனியே சென்று நீந்தி ஆரோக்கிய ஸதானம் பெறுவர். நகரத்திலுள்ள பாலக பாலகிகள் வீட்டு வாசற்படி கடந்து போக அஞ்சுவர். தேகம் பலஹீனம். தைரியம் குறைவு. இருட்டைக் கண்டால் அச்சம். குளத்தில் தவறி வந்தால் நீந்திவரத் தெரியாது. ஆனால் நாகரீக சோபித மாய் மினுக்கிக் காட்டுவர்.

453. நேத்திர திருஷ்டியற்றவர் கட்குப் புத்தி அதிகம். செவி மந்த முள்ளவர்கட்கு ஸூக்ஷ்ம சக்தியும் கிரகிப்பு முண்டு. ஊமைகள் சுறு சுறுப்பாயிருப்பர். நோயாளிகளுக்கு ஸதா கடுகடுத்த முகம். நொண்டிக ளுக்குப் பொறுமை அதிகம். குரூபி களுக்கு சேஷ்டையே பிரதானம். மூடனுக்குக் கோபமே உற்ற நேசன். மிக்க சுந்தர முள்ளவர்கள் வஞ்சகர்க ளாவது முண்டு.

(தொடரும்.)

தான் எவனுக்கு ஒரு பொருளைத் தரக்கூடாதென்றும், எவனைக் சேர்க் கக்கூடாதென்றும் நினைத்திருந்தானே அவனுக்கே அப்பொருளைக் கொடுத்து விட்டும், சேர்ந்தும் ஏமாறிப் பிறகு கையைக் கடிக்கிறான்.



பாரத ரமணிகளின் வித்வத்துவம்.

(203-ம் பக்கத் தொடர்ச்சி.)

உபலவர்ணா, சகுலா, பத்திரகபிலனீ அனுலா கௌதமீ தர்மதின்னா மல்லிநாதை, குவலயா, சரீ, காசி ஸுந்தரி, க்ஷேமா, மாலினீ முதலியவர்கள் மகா வித்யாவதிகளாய் இருந்தனரென்று பௌதக் கிரந்தங்களால் தெரிகிறது.

காசி ஸுந்தரி காசிராஜனுடைய மகள். யோகாப்யாஸ பலத்தால் அநேக அற்புதங்களைக் காட்டியிருக்கினான்.

க்ஷேமா என்பவள் ஒரு அரசன் மகள், அவளுக்கு மணம்புரிய நினைக்கையில் அவள் யோகினியானாள்.

மாலினி இன்னொரு காசி ராஜனின் மகள்.

ஸுப்ரியா, ருக்மாவதி இவ்விருவர்களும் மகா ஞானிகளாயும், தர்ம பாராயணைகளாயும், பரோபகாரிகளாயும், தயாபாவசர்களாயும் இருந்தனர். அவதான கல்பலதையின் 51-வது பல்லவத்தில் ருக்மாவதியின் உபாக்கியானம் உதஹரிக்கப்பட்டிருக்கிறது. பாளீ பாஷையிலுள்ள தர்ம கிரந்தங்களின் க்ஷேமா என்பவளின் சரித்திரம் படிக்கலாம். சரீ மகா பண்டிதை. அவளது குமாரனான புத்த தேவனுடைய சிஷ்யன் உபதிஷ்யன் என்பவன் மகா வித்வாம்ஸன். சரீயின் போதனையால் அவனுடைய மகோன்னத வித்வைத உலகத்தில் பிரகாசித்தது. மல்லிநாதை தன் பண்டியத்தால் ஆசார்ய பதவியை யடைந்தாள்.

அனுலை அசோகன் காலத்திலிருந்தவள். மகா நாசனென்னும் அரசனுடைய மனைவி. இவள் ஸிம்ஹள தீவில் தர்மத்தை நிலைநிறுத்தி ஆச்சர்ய பதவியடைந்தாள்.

சீனா தேசத்து ஹொயாங்ஷாங் என்ற பிரஸித்த பிரயாணிகள் இந்தியாவுக்கு யாத்திரை வந்தபோது ஸம்ராஜஹர்ஸ தேவனுடைய ஸோதரியான ராஜேசுவரி என்பவள் பிரம்மசரியாச்ரமத்தை யடைந்து ராஜ

மனத்திடம் உள்ளவர்களிடத்துக்கூடக் கரைத்துக் கரைத்துக் கலக்கி சந்தேகத்தை உண்டாக்கி விடலாம். இவ்விதம் உண்டாக்குபவர் எத்தனைக் கொடியர்? உண்டான சந்தேகம் தீருவது சுலபத்திலில்லை,

ஸபையில் உட்கார்ந்து ஞானஸம்பந்தமாயும், தர்மஸம்பந்தமாயும் பண்டிதர்களுடன் சர்ச்சித்து வந்தாள். இவள் விதந்து.

பாவதேவி, கண்டாலசடோபா, சிலா, பட்டாரிகா, வித்யா, விஜயா, விகடநிதம்பா, வியாஸபாதா முதலிய பெண்கள் கவிகளா யிருந்தார்கள்.

காந்தாரி கௌரவர்களின் தாய். இவள் தூரதர்சினியாயும், திடபக்தியுள்ளவளாயும், மனஸ்வினியாயு மிருந்தாள். ஆசார வியவஹார விதிகளை நன்று யறிந்தவள். பர்த்தா அந்தகனு யிருந்தாலும் பதிசேவையில் பரம உத்தமியா யிருந்தாள்.


ஸத்யபாமை ஸ்ரீ கிருஷ்ணனுடைய மனைவி. குபேரனுடன் யுத்தம் செய்தவள். ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவளது போரின் வன்மையைக் கொண்டாடி யிருக்கிறார்.

திமயந்தி மகா பதிவிரதை. ராஜ்யத்தை துறந்த பதியுடன் வனவாஸம் செய்தவள். தனது காயகரைக்கண்டு பிடிக்கச் செய்த உபாயங்கள் கொண்டாடத் தக்கவை. இப்பொழுதும் ஹிந்து ரமணிகள் அவள் உபாக்கியானம் படித்து ஆநந்தமடைகிறார்கள்.

சபரி, இவள் மாதங்க முனியின் சிஷ்யை. மகா ராம பக்தை. யோக நிஷ்டையில் தேர்ந்தவள். ஸ்ரீ ராமச்சந்திரனுக்கும் சபரிக்கும் நடந்த ஸம்பாஷணையைப் படித்தால் பாஷாண ஹிருதயமும் மாறுபடும். ஸம்பாஷணை அநேக தத்வார்த்தங்களுடன் அடங்கியிருக்கும். அரண்யத்தில் பொறுக்கி வைத்த பழங்களை ஸ்ரீராமனுக்குக் கொடுத்தாள்.

இரண்டு கடைக்காரனுக்கும் போட்டியானல் சரக்கு மலிவுக்கு வந்து விடுகிறது. புருஷன் மனைவிக்குச் சச்சரவானல் சமாதானப் படுத்துகிறவர்கள் குந்தித்தின்ன முடிகிறது! இரண்டு வீட்டுக் கலகத்து நடுவிலே மூன்ரும் மனுஷ்யனுக்கும் 'லாபம் பெருகுகிறது. இருவரும் வேலைக்கு அழைக்கும் இடத்திலே சம்பளம் உயருகிறது'. இருவரும் ஒரே சாமானை விலை கேட்கப்போக கிராக்கி உண்டாய் விடுகிறது.

காளிதாஸன் மனைவி வித்யாவிஷயத்தில் பண்டிதையா யிருந்தாள். விவாகம் செய்து கொள்ள வரும் ராஜகுமாரர்களையெல்லாம் பரீக்ஷிப்பாள். ஒருவராவது அவளுடன் ஜெயிக்கவில்லை. அவள் கர்வத்தை முறிக்கவேண்டி ல்க்ஷணமான ஒருவனைக் கொண்டுவந்து மகா பண்டிதனென்று மந்திரிகள் கூறி, அவள் பரீக்ஷை செய்த கேள்விகளுக்கு விபரீத அர்த்தங்களைச் சொல்லி விவாகத்தை நடத்தி வைத்து விட்டனர். கடைசியில் அவன் நிரக்ஷரகுக்ஷி யென்று கோபங் கொண்டாள். புருஷன் காளியை ஸ்தோத்திரம் செய்து தேவியின் திருவருளால் ஸகல வித்தையிலும் தேர்ச்சியடைந்து காளிதாஸனென்ற பெரிய கவியானன், (தொடரும்.)



ரகர றகர பேதங்கள்.

"மனிதருக்கு"என்னும் இவ்வித வார்த்தைகளின் சப்தமும் கருத்தும் குழம்பிக்கொண்டு மடமையாயிருப்பது பங்கக்கேடு. தீரப்படித் துணராத சிலர் எழுதும் ஒரு சாதாரண கடிதமும் அசம்ம தமாய் ஈனப்படும்"—Franklin.

பதங்களின் உச்சரிப்பு சற்றேறக்குறைய ஒத்திருப்பினும் அவைகள் வரிவடிவாலும், பொருள்களிலும் வேறுபட்டிருக்கும்.

1. **அரம், ஓர் கருவி. அறம், தருமம்.**
அறம் பாவத்தையும், அரம் தங்கம் முதலிய உலோகத்தையும் வெல்லும்.

2. **அரவு, பாம்பு. அறவு, அறுபட்ட இடம்.**
இந்த அரவு நேற்றிரவு வெட்டுப்பட்ட தென்றால், அறவைக் காட்டுப் பார்ப்போம்.

3. **அரிதல், கோய்தல். அறிதல், தெரிதல்.**
ஒருவன் தலையை அரிதல் பாவமென்று அறிதல் வேண்டும்.

4. **அருகு, சமீபம். அறகு, ஓர் புல்.**
அந்தக் கிணற்றோரம் முளைத்திருக்கும் அறகு நமக்கு அருகு.

5. **அருத்தல், உண்பித்தல், அறுத்தல், ஈர்தல்.**
வாள்கொண்டு மரம் அறுத்தான். விருந்தினருக்கு அருத்தல் வேண்டும்.

6. **அரும்பு, பூவரும்பு. அறம்பு, பஞ்சகாலம்,**
முல்லை அரும்பு ஒரு கூடை ஒரு காசானாலும், அறம்பு காலத்தில் விரும்புவாரெவர்?

7. **அரை, இடை. அறை, அடி.**
அரையில் கட்டிய கொடியில் அறை விழுந்தது. (தொடரும்)

குழந்தைகளை அதிகமாகப் பெறுபவள் எவளோ அவளை நான் வணங்குகிறேன்,—(நெப்போலியன்.)

சாஸ்திர நுட்பங்கள்

(264-ம் பக்கத் தொடர்ச்சி.)

93. ஊற்று நீர்களில் இரும்பு, கெந்தகம் முதலியவைகள் சுவைக்கத் தக்கதாய் சேர்ந்திருந்தால் அவைகள் 'க்ஷாரீகலூற்று' எனப்படும். இவைகள் தங்களில் கரைந்திருக்கும் பொருளுக்கு ஏற்றதாய் மருந்தாகும். எழுத்து மைபோல் ருசிக்கத்தக்கதாய் இரும்பு கலந்திருக்கும் நீர்கள் அயஸூற்றுகள் எனப்படும். ஒரு இருத்தல் தண்ணீரில் ஒரு கிரேன் அளவுக்கு மிஞ்சுவதரிது.

94. ஊற்று நீரிலும் ஆற்றுநீரில் உப்புவகை குறைவாயினும் பருகுவதற்கு ஊற்று நீரிலும் ஆற்று நீர் இனிப்பு. ஆற்று நீரில் ஆங்காங்கு கலக்கும் அசுத்தங்களைப் பிராண வாயு அதை ஓர் வகையாய்க் கொதிக்கப்பண்ண, அதனால் தண்ணீரிலிருக்கும் அசுத்தங்களெல்லாம் எடுபட்டுப் போய், நிறம் மணம் அற்று சுத்த ஜலமாய்விடும்.

95. கடற்றண்ணீரில் அதிகமாய் சேர்ந்திருப்பது கறியுப்பு. கடற்றண்ணீரின் விசேஷ பாரம் அந்தந்த இடத்துக்குத் தக்கதாய் சொற்ப வித்தியாசம் காட்டும். பால்த்திக் கடல், கருங்கடல்களின் தண்ணீர் உப்புக் குறைவானது. மதித்திராணி, மெச்சிக்கோக்குடா என்ற கடல்களின் தண்ணீர் உப்பு கூடினது. உப்புவகை பெருஞ் சமுத்திரத்தில் 100-க்கு $3\frac{1}{4}$ முதல் 4-வீதமாய் சேர்ந்திருக்கும்.

96. சமுத்திரத்தின் தண்ணீர் ஓயாமல் ஆவியாக எழும்பிக்கொண்டிருக்கும். மழையால் நிலத்திலிருந்து கழுவப்பட்டு ஆறுகள் வழியாய் சமுத்திரத்துக்குப் போகும் மண், கல் முதலியவைகள் சமுத்திரத்தின் அடியில் கிடக்கும். ஆகையால் அதன் நீரிலுள்ள உப்பு வர வர அதிகரிக்கும். சமுத்திரம் உவர்ப்பா யிருப்பது அதின் அடியில் உப்புப் பார் இருப்பதினாலென்று எண்ணுவது தப்பு. மண், கற்களின் உப்புகள் நிலத்திலிருந்து கழுவுண்டு கடலுக்குப் போவதினாலேயே அது உப்பாகிறது. யுகங்களாகக் கழுவுண்டுபோன ஆறுகளால் அது வர வர உப்பாகிறது.

97. உப்புவகை ஒரு கலனுக்கு பதினைந்து கிறேனில் குறைவாயுள்ள எந்தத் தண்ணீரும் நல்ல தண்ணீர் என்று எண்ணப்படும். ஒரு கலனுக்கு அறுபது கிறேனுக்கு அதிகமான உப்புவகையை உடைய தண்ணீர் குடிக்க நல்லதானாலும், காய் கிழங்கு அவிக்கிறதற்கு உதவாது. கரித்தூளுக்கூடாக தண்ணீரை வடித்தால் அதிலுள்ள அசுத்தம் ஏறக்குறைய முழுதும் நீங்கும்.

98. சுவை கொடுக்கும் கூறுகள் கரைந்து பிரியாதபடி உப்புபேனும்.

99. மீன் முதலிய நீர்வாழும் செந்துக்களின் சுவாசத்துக்குத் தண்ணீரிலுள்ள வாயுவே ஆதாரவு. அந்த வாய்வு கொஞ்சமும் இல்லாத தண்ணீ

சுய அறிவுடன் ஒருவன் செய்கிற வேலையில் எப்பொழுதும் புதுமையும் சீர்திருத்தங்களும் இருக்கும். அதைப்பார்த்துச் செய்கிறவனே என்றைக்கும் அதே தொழிலில் தான் கிடப்பான்.

ருக்குள்ளே மீனைப்போட அது சுறுக்காய் சாகும். இதை ஜலத்திலுள்ள வாயுவை நீக்கிவிடும் கருவியைக் கொண்டு காட்டலாம். 4000, 5000 முழம் உயரத்தில் வாயுவின் அமுக்கம் குறைவாதலால் அங்கு தண்ணீரிலுள்ள வாயு கடல்மட்டத்திலும் மூன்றில் இரண்டு பங்கு குறையும். ஆகையால் உயர்ந்த மலைகளிலுள்ள ஜலத்தில் இருக்கும் வாயு சுவாசத்துக்குப் போதாது. அவைகளில் மீன் இல்லை.

100. தண்ணீரிலுள்ள பிராண வாயுவை வாங்கி ஜீவிக்கிற நீர்வாழுஞ் செந்துக்களுக்காகக் கடவுள் தண்ணீரில் அதிக வீதமாய் வாயுப் பொருள்களைச் சேர்த்திருக்கிறார். நிலத்திலுள்ள வாயுவில் பிராணவாயு நூற்றுக்கு 21-என்ற வீதமாயும், தண்ணீரில் இருக்கிற வாயுவிலோ நூற்றுக்கு 30-33-வீதமாயும் சேர்ந்திருக்கும். ஆகையால் நீர்வாழும் ஜெந்துக்கள் பிராண வாயுவை லேசாய்க் கிரகிக்கும்.

101. கடல் ஜலத்தில் பிராண வாயு நூறுமுழ ஆழத்தில் பார்க்க மேற்பகுதியில்தான் அதிகமாம். ஆகவே, கடலின் அதிக ஆழத்திலே ஜீவ ஜெந்துக்கள் அரிதென்பதற்கு இதுவே நியாயம்.

102. மற்றெந்த நீரிலும் தண்ணீருக்கே கரைக்கும் தன்மை அதிகமாயுண்டு.

103. மிகுதியான பொருள்கள் தண்ணீரிலும் வெந்நீரிலேயே அதிகமாய் கரையும். காங்கை அதிகப்பட கரையுந் தன்மையு அதிகப்படும். இவ்விதிக்கு சில விலக்குகளுமுண்டு. உதாரணமாக, கறியுப்பு தண்ணீரில் எந்தக் காங்கையிலும் ஒரே சரியாய்க் கரையும்; சுண்ணம்பு வெந்நீரிலும் தண்ணீரில் அதிகமாய்க் கரையும்.

(தொடரும்)

அவர்களை ஏமாற வைத்துவிடு.

முகத்தை "உம்" மென்று வைத்திருப்போரிடத்தில் நீ எதுவும் போய்க் கிளராதே. அவர்கள் தாம் கோணியிருப்பதை நீ உணரவேண்டுமென்று விரும்புகின்றனர். நீ உணராதவன் போலவே உன் பாட்டில், உன் வேலையில் கவனமாய் இருந்து விட்டால் அவர்கள் ஏமாறிப்போவார்கள். நீ ஏதாவது பேச வருவாயென்றும், அப்போது கடுகடுத்துச் சொல்லி ஒரு கலகத்தை எழுப்பிவிடலாமென்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதற்கு இடம் தராமலே நீ பேச்சுவார்த்தை கொள்ளாமல் இருந்துவிடு. அல்லது வெளியில் சென்றுவிடுவது மேலான காரியம். இவ்விதம் அவர்களை ஏமாற வைத்துவிடு. ஏதேனும் கேட்கப்போனாயோ—வந்தது கலகம்! உஷார்!!

எல்லாம் சமைத்தவன் புசித்தானா என்பது கேள்வி. அவன் உண்ண எதுவும் மிச்சப்படவில்லை. அவ்வளவு செலவிட்ட வீட்டுக்காரனுக்கும் அன்று அரை வயிறுதான். அப்படி உபசரித்தும் பிறகு விரோதமே!

காதலின் இன்ப மொழிகள்.

[இவை "விசித்திரத் துப்பறியும் கண்" என்ற நாவலிலுள்ள காதற்கடிதங்களிலிருந்தும் திரட்டப்பட்டவை.]

(1) மனைவியைப் பிரிந்து நெடுந் தூரத்தில் தன்னந்தனியேயுள்ள ஒருவருக்குத் தன் இல்லாளிடமிருந்து கடிதம் வராவிடில் எண்ணாத எண்ணம் எண்ணி இதயம் நோவர். (பக்கம்—4)

(2) நெடுந்தூரத்தில் உள்ள ஒருவர் தம் மனைவியோடிருந்து களிப்பதற்கில்லை யெனினும், தம் மனைவியின் கடிதம் கிடைத்தால் அதைப் பலகால் படித்துப் பரவசப்படுவர். (5)

(3) தாய் தந்தை சகோதரர்களை விட்டு, மணந்த காதலியைப் பிரிந்து உயிரனைய மக்களை நீங்கித் தனியேயுள்ள ஒருவன் கவலையைப் போக்கிக் களிப்பைத் தருவது அவனுடைய ஆரணங்கின் கடிதங்களேயாகும். (5)

(4) தாய் தந்தையர் மனைவி மக்களன்றியவன் வாழ்வும் ஓர் வாழ்வா?(7)

(5) மனிதர் உயிரென மதிக்கும் பொன்னும் பூமியும் நேசத்தின் முன்பு அற்பமாகத் தோன்றுகின்றன. (8)

(6) துன்பம் என்பது இரவிற் காணும் கனவைப்போலும் கொஞ்ச நேரமே நிற்கும். ஒருகால் நீடிப்பதாயினும் கத்தியின் கூர்முனை நாளாக நாளாக மழுங்குவதுபோல் துன்பத்தின் கொடுமையும் பழக்கமிகுதியால் மனதிற்படாது தொலைவதாகும். (10)

(7) குழந்தைகளுடைய கஷ்டத்திற்கு, அவர்கள் தளர் நடையும், மழலைச் சொல்லும், நகைமுகமும் இனிய பார்வையும் கைம்மாறு மன்றோ? (10)

(8) அன்பு பல ஜன்மங்களின் பயனுவதல்லால், ஒருவர் வாசிப்பினாலும், கூட்டுறவாலும் வருவதன்று. (11)

(9) அன்பு செலுத்துதல் வேண்டியவரிடமேயன்றி வேண்டாதாரிடம் இல்லை. (11)

(10) நெந்தூரத்தில் உத்தியோகார்த்தமாக இருப்பவனுக்கு அவன் மனைவி சுகமாயிருப்பதாக வரும் செய்தி யொன்றே சந்தோஷத்தைத் தருவதாகும். (13)

(11) குழந்தைகளிடத்து அன்பு செய்வது அழகாகும். (16)

(12) மணந்த மனைவியை வஞ்சிக்கும் எவனும், வன்னெஞ்சுள்ள மாபாவி என்பதும், வனத்தில் வாழும் விலங்கை யொப்பானென்பதும் என தெண்ணம். (22)

(13) குழந்தைகளைத் திட்டவேண்டாம். திட்டுவது சிறுவரைத் தீயாராக்குவதன்றி நல்லவராக்குவதில்லை. இன்சொல்லோ அவர்கள் இதயத்தைக் கரைத்து நம் இஷ்டப்பட நடக்கச்செய்யும். (24)

(14) அன்பு என்ற நுண்ணிழையால் ஆயிரவரை அடக்கலாம். வன்சொல் என்னும் விஷத்தால் ஒருவரையும் வசப்படுத்தலாகாது. (24)

(15) ஒருவர் காட்டிய அன்பைப் போல் பிறரொருவர் உணர்த்த எத்தனை ஆயிரம் வகையில் முயன்றாலும் முடியாது. (25)

(16) தாரமானது காதலர் இதயத்தைக் கரைக்கும்—இது ஓர் ஆங்கிலப் பழமொழி. (39) (தொடரும்)

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

கூடியவரையில் விருதாவாய்ப் பேசும் கூட்டத்தை ஒழிமின். வீண் பேச்சில் என் அவ்வளவு சந்தோஷமோ?

150 நீதி வாக்கியங்கள்.

(ஸ்ரீமான் தி. ஐ பழனிச்செட்டியாரவர்களின் வாக்கு.)

அகமது மகிழ்.
ஆதரவு செய்.
இடுக்கண் களை.
ஈகை மறவேல்.
உற்ற துரை.
ஊதியர் தேடு.
எவரையு மிகழேல்.
எங்கித் திரியேல்.
ஐய மறக்கல்.
ஒற்றுமையுடன் வாழ்.
ஓதுவ துண்மை.
ஔவை சொற்கேள்.
அஃக விழிவு.
கடன்பட் டுழலேல்.
கப்போ லிரு.
சண்டை விரும்பேல்.
ஞமலியி னன்குணர்.
அடல்வினை செய்யேல்.
அணங்கினை யஞ்சேல்.
தனத்தைத் தேடு.
நடுவு தவறேல்.
பரனை நினை.
மக்களைப் பயிற்று.
அயல்மனைக் கேகேல்.
இரவ விடேல்.
இலக்கண மறி.
வம்புக் கேகேல்.
அழல்விளையாடேல்.
அளகந் திருத்து.
அறநெறி பிறழேல்.
அனந்த மெண்ணேல்.
கல்விபல கல்.
காண்பதறிவு.
கிளையைத் தழுவு.
கீர்த்திபெற நில்.
குடும்பம் பேண்.
கூட்ட வின்பம்.
கெடுவு தவறேல்.
கேண்மை நலம்.
கைத்தொழில் பழகு.
கொழுநனைப் பேண்.
கோளெடுத்துரையேல்.
கௌரவப் படுத்து.
சக்தியறி.
சாதனை செய்.
சிக்கெனத் தேடு.
சீமை திரிந்தறி.
சுவநயம் விரும்பேல்.
சூத்திர மறி.
செற்ற மகற்று.
சேதித் துண்ணேல்.
சைகை செய்யேல்.
சொத்தினைக் கா.
சோதித் தறி.
சௌசஞ் செய்.
ஞமனுக் கஞ்சு.
ஞாபகந் திருத்து.
ஞிமிறெனப் பாடு.
நீட்டி யுரையேல்.
நுதல்விழி நோக்கு.
நூற்பது நூன்முறை.
ஞெகிழச் செய்யேல்.
ஞேயருரை கேள்.
ஞைபவர் முகமறி.
நோற்பது நோன்பு.
தன்னைத் தானறி.
தார மிரண்டொழி.
திறனறிந்து செய்.
தீப மேற்று.
துதிக்கை மறவேல்.
தூதரைக் கொல்லேல்.
தெள்ளியனு யிரு.
தைரியமது விடேல்.
தொழில் பலகல்.
தோரைப் பிரியேல்.
நம்பி யிருந்தடை.
நானெனத் திரியேல்.
நித்தியம் விரும்பு.
நீதி நெறிநில்.
நுட்ப மறி.
நூதனம் புகேல்.
நெடுக விடேல்.
நேம நிகழ்த்து.
நைஇந் துருகேல்.
நொடிப்ப தொழி.
நோக்க மறி.
நௌவென வலையேல்.
பாதகஞ் செய்யேல்.
பித்தரைச் சேரேல்.
பீடை யகற்று.
புனவிடைப் புகேல்.
பூரணஞ் செய்.
பெற்றோருரை கொள்
பேதித் தறி.
பையப் பகர்.
பொய்ம்மை புகலேல்.
போதித் துணர்ந்திநில்.
பௌரணை மதிநிகர்.
மதம்பல கொளேல்.
மாதரை மற.
மிக்கன செய்.
மீட்பது மகிழ்ச்சி.
முகநலம் பேசேல்.
மூன்றைவிட்டிரு.
மெய்ம்மை நிலைகொள்.
மேகத்தை நிகர்.
மைய லகற்று.
மோட்சம் புகநில்.
மௌன முத்தமம்
யந்திர மியக்கு.
யாது முய்த்துணர்.

(தொடரும்

சிறிய சீர்திருத்தங்கள் பெரிய சீர்திருத்தங்களுக்கு விரோதியாகும். பழுதுபட்ட வீட்டில் சிறிய பழுதை மாத்திரமே செப்பனிட்டால், வீடு முழுதும் பழுது பார்ப்பது பிறகு ஆகட்டுமென்று தாமதப்பட்டுவிடும்.



1. **பிறரை மயக்கவா?** உன் இயற்கை நடை ஒன்றிருக்க, வெளியிலோ மற்றவரைக் கண்டதும் எவ்வளவு கௌரவமும் சாந்தமுமான நடை போடுகிறாய்! அப்போது ஒரு கம்பீரப் பார்வையில் நிற்கிறாய் அந்த சமயம் எத்தனை ஒய்யாரத்தில் உன்னைக் காட்டிக்கொள்ளுகிறாய். இந்த நடிப்பு மாயங்கள் எதற்காக? உன்னை அயலார் ஒரு பெரிய மனித தோரணையில் கருதுவாரென்றா? அல்லது உன் கபட வேஷத்தில் மயங்குவாரென்றா? உன் கிருக்கு நடையில் ஏமாறிய வனிதைகள், மனிதர்கள் இவர்களின் தொகைக்கு எண்ணிக்கையுண்டா?

2. **அளவறிந்து சொல்:**—ஆபத்துக் காலங்களில் நீ பிறருக்கு உதவி செய்ய விரும்பினால், உன்னால் ஆகக்கூடிய உதவிக்குமட்டும் சொல். பிரமாதமாய்—நான் அப்படிச் செய்கிறேன், இப்படிச் செய்கிறேன். எனக்கு அவன் தெரியும், இவன் தெரியும்—என்று பேசிக் கடைசியில் உன்னை நம்பியவர்களுக்கு உன் வெறுங்கையை விரிப்பதில் காரியமில்லை. ஏமாறவைப்பது பெரிய பாதகம். சங்கடசமயத்தில் ஜாடையாக ஒதுங்கிக் கொள்வதும் சண்டாளத்தனம். உன்னால் ஆகக்கூடியதுக்கு மட்டும் தைரியம் கொடுத்துப் பேசித் தேற்று. அந்தப்படியே நடந்து காட்டியும் விடு.

3. **காலத்தின் தலையில் கல்லைப் போடாதே:**—சிலர் பெரியதனத்திற்கு ஆசைப்பட்டுத்தானே வலிய ஒரு காரியத்தில் சென்று அகப்பட்டுக் கொள்ளுகிறார்கள். பிறகு அதினின்றும் மீள வழி தெரியாமல்—'பொல்லாத காலம் இப்படி அகப்பட்டுக் கொள்ளும்படி செய்துவிட்டது' என்று காலத்தின் தலையில் கல்லைப் போடுகிறார்கள்!

4. **பகலில் பார்த்து வாங்கு:**—வியாபாரிகள் தங்கள் (பயனற்ற) சாக்குகளின் விற்பனைக்காக மிகவும் பகட்டாய் மின்சார விளக்குகளும் விசிறிகளும் போட்டுக் காண்பிப்பார்கள். பகலில்கூட நன்றாக வெளிச்சமிருந்தும் விளக்கு எரிந்துகொண்டேயிருக்கும். எந்தத் துணி எடுத்தாலும் பளபளப்பாகத் தெரியும். இது வியாபார தந்திரம். இரவில் வாங்குவதைவிட பகலில் வெளியில் வெளிச்சத்தில் பார்த்து வாங்குவதே மேல்.

5. **நடக்கை நடப்பாக முடிகிறது:**—அயலாராயிருந்தும் உண்மை அன்பினால் ஒருவரிடத்தில் உடன் பிறந்தோர் போல் நடக்க ஆரம்பிக்கின்றனர். அப்படியே உள்ளநாள் பரியந்தம் இருக்கவும் ஆவல். ஆனால் இதில் ஒருவர் வெளிநடிப்பாகப் பிரீதி காட்டுவதில் மாறினாலோ மற்றவரும் மனங்கசந்து பிரிய நேர்கிறது. பிறகு இருவர் நடக்கையும் நடிப்பில் முடிகிறது.

பொல்லேன்! ஊணே, யுடைய. யுறக்கமே வேண்டி அல்லும் பகலும் தொல்லையிலாழ்ந்து நல்லதென்றஃதையே நினைத்துப் புலைதொழில் பயிற்றும் புல்லியேன் யான்?"—(ஒரு பக்தர்.)

6. **மெத்தப் படித்தவர்களின் சங்கதி:**—மூக்குக் கண்ணாடியை மூக்கில் அணிந்து கொண்டே அதைக் காணோமென்று தேடுகிறது. பேனாவைத் தலையில் சொருகிக் கொண்டே அதற்காக அலைகிறது. இப்படி ஞாபகம் தவற நேர்ந்தாலும், தாங்கள் எழுதுவதில் மட்டும் ஞாபகப் பிசகின்றி வேலையைச் செவ்வனே புரிகின்றனர்.

7. **குள்ளநரி வேஷம்:**—மிக்க அன்புடையவர்கள் போல் நடித்து, உங்களுக்கு அது வேண்டுமா, இது வேண்டுமா என்று இப்படி அப்படி ஆடி வெகு உபசாரம் செய்கிறார்கள். காரணம் என்ன தெரியுமா? அவர்களிடம் உனக்கு ஆகவேண்டிய சங்கதி யொன்று இருப்பதால்தான்.

8. **கூட்டு வியாபாரம்:**—இதில் ஒருவரை மற்றவர் என்ன திருப்தி படுத்தப் பார்த்தாலும் முடியாது. ஒவ்வொன்றிலும் ஒரு சொட்டு வார்த்தையே வெளிவரும். சந்தோஷமாய் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. கூட்டு வியாபாரம் குடுமித் தலையை மொட்டைத் தலையாக்கி விடுகிறது.

9. **பொருத்தம் எப்படி?** கணவனோ ஊர் சுத்தி, நிராகுக்ஷி, முன் கோப மனிதன். மனைவியோ அடங்காப் பிடாரி, டமாரம், ஆர்ப்பாட்டக் கள்ளி. கூட நிற்பவரோ கலகத்துக்கு முடிபோடுபவர்கள். வீட்டுக்கோ ஒரு நிச்சய வரும்படி கிடையாது. இந்தக் குடும்ப க்ஷேமம் எப்படி யிருக்கும்? பொருந்துவது எப்படி ஐயனே?

விளக்கு அணைந்தாலும் அணையட்டு மென்னும் போது அது அவிகிற தில்லை. அந்த மனுஷன் போனால் நமக்கென்ன எனும் போது எப்படியோ அவன் பிழைத்துக் கொள்கிறான். அணையாது காக்க முயன்ற விளக்கே அவிகிறது. சிரத்தையுடன் வைத்தியம் செய்த இடத்தில் தான் ஏமாற்றமாகிப் பிராணன் பிரிகிறது. சிரத்தைப்படாதார் உயிருடனிருக்க சிரத்தைப்படும் முக்கியஸ்தர் முடிவுறுகின்றனர்.

10. **பணத்தின் சக்தி:**—சக்தியில்லாதவன் என்று பிறர் சொல்லும்படி வாழுகையில் சாந்தமான தன்மைதான். சக்தியற்ற மனிதன் போன்று நடக்கிறதுதான் ஆனால், கொஞ்சம் பணம் ஏறிவிட்டாலோ புதுத் திமிர் தோன்றி தலையை நிமிரச்செய்து, மனிதனின் தொனியே மாறி தன் சுதந்திரம், தன் கௌரவம் இதில் கண்ணாகி விடுகிறான்.

P. G. குலசேகரன்.

வீட்டில் வெறுமனே குந்தி தின்னும் வீணர்கள் வீட்டுக் கலகத்தில் வக்கில்களாகவும் ஹைகோர்ட் ஜட்ஜிகளாகவும் மாறித் தங்கட்கு நல்ல வேலையும் வருமானமும் அகப்பட்டதெனப் பூரிக்கின்றனர்.

இந்திய நாகரிகத்தின் மேலுள்ள மலினங்களைச் சீர்திருத்திப் புதுப்பிக்கலாம், ஆனால், அந்த நாகரிகத்தின் அடிவேர்களில் கை வைக்கக்கூடாது,

ஆச்சு ! போச்சு !! இன்னும் இருக்கு !!!



என்ன நம்ம விகடன் 'ஆச்சு—போச்சு' என்கிறுனே ; என்ன ஆச்சு ? —எது போச்சு ?—எங்கே இன்னும் இருக்கு ? இதென்ன குத்தலான வார்த்தையா ? அல்லது நொந்து பட்டு நோவெடுத்துச் சொல்லும் சங்கதியா—என்பீர்களோ? எப்படியாவ்து அருத்தம் திருத்தம் கற்பித்துப் பொருத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். மொத்தத்துக்கு இந்த மூன்று தொங்க லாட்டங்களில் ஏதாவதொன்று காணப்படாம விருப்பதில்லை. உலகமே இந்த மூன்றில் எதிலேனும் ஒன்றில் ஊசலாடியோ, உறுமியோ, உதைத்துக் கொண்டோ, உப்பிப்போயோ, உதவாக்கட்டையாகியோ, உள்ளுக்குப் புழு நெளித்துக்கொண்டோ—எப்படியோ ஒரு தாளம் கொட்டிக்கொண்டேதான் கிடக்கிறது ! விகடன் இந்த வேடிக்கையைக் கொஞ்சம் காட்டட்டுமா? நீங்களும் பாராக்கில்லாமல் பார்க்கிறீர்ளா ?

முதலிலே ஒரு தெருக்குப்பை, அது ஒரு பொத்தல் கந்தை ! இந்தக் கந்தைப் பொத்தல் பின்னே ஜவ்வாதுப் பொட்டிட்டுக்கொள்ளும் நூதன வாழ்விலே துள்ளுகிறதப்பா ! இதற்குத்தான் விகடன் "ஆச்சு"—அரசாளலாச்சு என்று சொன்னது. என்ன அப்பா ஆச்சு? யோசனை செய்யலாச்சு. என்ன யோசனை ? உடுக்க உடையும் குடிக்கக் கூழுமில்லாத நித்திய தரித்திர சிரஞ்சீவியிலே நாலு பருக்கைக்கு வழி வகை எப்படி என்றுதான். கடைசியில் பில்லைச் சேவகன் வேலைக்குப்போகிறுன். சம்பளம் ரூபா அஞ்சு ! அரிசி ரூபாய்க்குப் பதினறு படி. மூன்று ரூபாயில் குடும்பச் செலவு நடந்துவிடும். இரண்டு ரூபா ஓட்டைச் சட்டிக்கு அடியில் பத்திரமாயிருக்கும். இந்த சேவக வாழ்விலே ஆறு, காறு நன்ருகத்தெரியும். மற்ற எழுத்துக்கள் இனிமேல் தான் படிக்க

ஒரு விவாகத்துக்குச் செல்பவன் அங்கு தன்மேல் எவரும் மனஸ்தாபப் படாதிருப்பதற்கான முன்னேற்பாடுகளைப் புறப்படுகையிலே முடித்துக் கொண்டு விட்டாலும்கூட எப்படியோ கலகம் வந்துவிடுகிறது !

வேணும். இந்த வைபோக வாசிப் புடனே எஜமான் துரையவர்களோடு கோச்சு வண்டியிலே பின்னுக்குத் தொங்கிக் கொண்டு போகிற போது ஒரு புதிய பாலத்தில் ஏறுகையில் பாலம் இடிந்து ஆங்கிலத் துரையும் நதியில் விழுந்து திக்குமுக்காட, இந்த சமயத்தில் கூழு குடிக்கும் சேவகக் குப்பை உயிருக்குத் துணிந்து துரையை அந்த ஆபத்திலிருந்து கரையேற்றிக் காப்பாற்றிவிடவே, சீமைத்துரைக்கு சந்தோஷம் பொங்கி சேவகன் மேலே மெத்தப் பிரியமாகி அவனை ஒரு சிரஸ்தாதார் ஆக்கிவிடுகிறர்! கையெழுத்துப் போட தெரியாத புலிக்கு இந்தப்பதவி கிடைத்து விடுகிறது! சிரஸ்தாதார் பல்லக்கில் புறப்படுகிறர். முன்னே எச்சரிக்கையும், குமஸ்தா கூட்டமும் மேளதாள ஆரவாரமும் கூடி கச்சேரிக்குப் போகிறது. உத்தியோகம் கூடியதும் அதைத் தாங்கும் புத்தியும் வருகிறது. கையெழுத்து போடத் தெரியாவிட்டாலும் லஞ்சம் பலமாய் வாங்கத் தெரிகிறது. வாழ்வுக்குத் தகுந்தபடி குட்டி குழந்தைகளும் மருமக்கள் மாரும் பெருத்துக் குடும்பம் பலப் பட்டுக்கொள்கிறது. விகடனுக்கு அண்ணன்மாராகிய குந்தித் தின்னும் ஆண்டிகளும் கூடிக்கொள்கிறர்கள். கூரைவீடு மாடிவீடாகி அது "சிரஸ்தாதார் வீடு" என்ற பிரக்யாதியைப் பெறுகிறது. அநேக வீடுகளும் வீதிகளும் நில பலங்களும் தோட்டங்களும் சொந்தமாய் விடுகிறது! இது ஒரு ஆச்சு!

***

ரயிலில் மூட்டைத் தூக்கும் பிச்சாண்டி கொஞ்சம் படிப்பு கற்று ஒரு புதிய கிராமத்துக்கு இங்கிலீஷ் அத்தனை வேண்டியிராத நாளில், 'லயின் கிளியர் டிக்கட்டு' என்று தமிழிலேயே அச்சிட்டுப் பாதி வேலைகள் தமிழிலேயே நடைபெற்ற பழய நாளில் ஒரு குமாஸ்தா ஆகிறன். அதிலிருந்து ஸ்டேஷன் மாஸ்டர் பதவியை உயருகிறன். ரயிலில் வந்துகிடக்கும் மூட்டைகளுக்குள்ளெல்லாம் இரவில் கைவிடுகிறன். நாற்பது ரூபா சம்பளத்திலிருந்து கொண்டே நாற்பதாயிரம் சம்பாதித்து விடுகிறன். பெரிய வாழ்வில் கும்மாளம் போடுகிறன். ஸ்டேஷன் மாஸ்டர் குடும்பம் என்று போகிறது. இது ஒரு ஆச்சு!

***

பழய நாளிலே நாவிதப் பண்டிதன் செய்யும் க்ஷவரம் காலணு அரையணுவே! கிராப்பு பிரபுக்கள் அப்போதில்லை. குடுமிப் பிச்சையும் மொட்டை முத்துவுமே வாழ்ந்த காலம்! அந்த நாளிலேயே தன் மகனுக்குக் காலணு க்ஷவரத்துக்கு வழியின்றி, பெருகி வளர்ந்திருந்த ரோமங்களைக் கத்திரிக்கோலால் கத்தரித்து விட்டுச் சுத்தம் செய்து பள்ளிக்கூடம் அனுப்பினுள் தாயார்! பள்ளிக்கூடத்தில் பையன் தலை க்ஷவரத்தைப்பார்த்து மற்றப் பயல்களெல்லாம் சிரிக்க, உபாத்தியாயர் ஐயோ! பாவமென்று தன் வீட்டு வேலைகளை அவனைக்கொண்டு செய்து தன்னிடமே வைத்துக் கல்வி ஞானம் புகட்டுகிறர். பின்னளிலே இவன் படிப்படியாய் உயர்ந்து பிரபல உத்தியோக ஆண்டியாகிப் பணம் பணமாய் வாருகிறன். இது ஒரு ஆச்சு!

***

எளிய நிலையில் தந்தை விட்டுப்போக, தாய் ஒரு சங்கீத வித்வான் வீட்டில் வேலைக்காரியாக, அவள்

ஒரு நூலை வாசிக்கையில் உன்னுள்ளத்தில் உதிக்கும் நினைவுகளையெல்லாம் ஆங்காங்கு அப்புஸ்தகத்திலேயே எழுதிக்கொண்டுபோ. அதுதான் படிப்பதற்குப் பயன். இப்படிக் 'கிருக்கிய' நூல் விலைக்கு அகப்படாது.

குழந்தையும் வித்வானின் ச-ரி-க-ம-ப-த-நி-களை உருப் போட்டு சங்கீத பண்டித ரத்நமாகிப் பணக்கார மனுஷனாகி விடுகிறது! இது தன் முயற்சியிலே அதிர்ஷ்டத்திலே ஆகிற ஒரு ஆச்சு! கிராமத்திலே பிறந்து பட்டணத்துக்குப் புறப்பட்டு இங்கிலீஷூ தெரிந்து, இருக்க இருக்க உயர்ந்து இரண்டு லக்ஷரூபா சொத்துக்கு இராமனாய் விடுகிறது! இது ஒரு ஆச்சு! பத்திரிகை வெளியிடத் தொடங்கி, முதல் பத்திரிகை யனுப்ப காகிதம் அச்சுச் செலவுக்கின்றி கடன்பட்டு அனுப்புகிறது. அந்தப் பத்திரிகை பிற்காலத்தில் பிரக்யாதியான பத்திரிகையாய் பல மாடி வீடுகளில் அச்சாகிப் பிரபலப்படுகிறது! இது ஒரு ஆச்சு! பல ஊர்களிலிருந்து வந்து பட்டணத்துப் பருப்புகளாகிப் பதவியும் செல்வமும் கர்வமும் பெற்றுவிடுகிறது!

***

வெற்றிலைப்பாக்குக் கடையிலேயிருந்து கத்தரிக்காய் கடைக்குவந்து பிறகு காட்லாக் கடை வைத்து ஊர் முழுதுக்கும் காட்லாக் அனுப்பி வி. பி. வியாபாரத்தில் பழகி வீடு வீடாகக்கட்டிச் சீமானாய் விடுகிறது! தொண்டு செய்யும் வேலையிலிருந்து பணக்காரனாய் உயருகிறது! விளம்பர மகிமையிலேயே தேர்ந்து அந்த வியாபாரத்திலேயே விருத்தியாய் விடுகிறது! பிறர் தயாரித்து வைத்த கடைகளிலே சட்டாம்பிள்ளையாய் உட்கார்ந்து கடைப் போக்குகள் கண்டு, நடுவில் கொஞ்சம் சுளையம் போட்டு எடுத்துச்சேர்த்துப் பிறகு தானும் ஒரு கடை வைதுத் முதலாளியாய்விடுகிறது! தனது சட்டைத் தொப்பி இங்கிலீஷிலே மயக்கி எல்லாம் தெரிந்தவனாய் வாயடியடித்து வாயால் பிழைப்பவனாகி, பல பெரிய மனிதர்களின் அறிமுகத்தில் பெரிய செல்வனாகி விடுகிறது! இவைகளெல்லாம் ஒருவகை ஆச்சுகள்!

***

கூலிக்கு இருக்கிற இடத்தில் எஜமான் திடீரென்று கண்மூட, இந்தக் கூலியை நம்பி அவன் வசத்தில் யாவற்றையும் விட, அதிலே தன் குடும்பத்தை உயர்த்திக்கொண்டு ஒரு உருப்படியுள்ள மனிதனாகி ஏறிவிடுகிறது! வரும் சம்பளத்திலே ஒரு மிச்சம் பிடித்து, சேர்த்துச் சேர்த்து சிறு கடை வைத்து, பெரிய கடைக்கு எட்டிப் பேரும்பெற்று விடுகிறது! இழிந்த குலத்திலேபிறந்து அந்த இழிதொழில் சின்னாள் செய்து பின் மற்றொரு தொழில் கற்று மகாராசனாய் பிள்ளை செட்டியார் ஆகிவிடுகிறது! மூட்டைக்கு இத்தனை காசு என்று தாகு சம்பாதிக்கும் வேலையில் கிடந்து நாலிரண்டு பேச எழுதத் தெரிந்து பல வேலையில் புகுந்து பணக்காரனாகி விடுகிறது! ஜனத்தலைவர்களிலே சிலரது வால்பிடித்து, அவர்களோடு சுற்றித் திரிந்து காங்கிரஸில் சம்பந்தப்பட்டு, நாலைந்து பிரசங்கங்கள் உளறிக்கொட்டித் தானும் ஒரு உருவான பெரிய சித்தாண்டியாய்விடுகிறது! தேசாபிமானி, தலைவர் ஆகிவிடுகிறது! இந்தப்படி சில ஆச்சுகள்!

***

மனைவியும் போக, இருந்த உத்தியோகமும் ஒரு லஞ்சக் கேஸில்

பலவான் என்பது சிலாக்கினைச் சொல். தடியன் என்பது இகழ்ச்சிச் சொல். இரண்டும் உடல் வலிமையை விளக்குமாயினும், பேசுபவரின் மனத்தோற்றத்தினது சொற் பேதத்தால் தாழ்த்திய தன்மை வெளியாகி விடுகிறது.

தொலைந்துவிட, பந்துக்களும் பழிக்க, ஒருவேளைப் பொழுது ஒரு யுகமாக, கடைசியில் குழந்தை குட்டியுமாய்க் கப்பலேறி விடுகிறான். அந்தப் புதுச் சீமையில் இவன் பழய கதை யுணராது உத்தியோகம் தர, அங்கேயே நெடுங்கால மிருந்து பெருஞ் சொத்தாளியாய்ப் பெண்டு பிள்ளைகளுடன் தன்னூர் வர, முன்பு வெறுத்தவர்கள் எல்லாம் அவன்கனத்தைத் தாங்க பெரிய பெருமாளாய் விடுகிறான்! இப்படியே சின்னஞ் சிறிய வேலையிலிருந்து இன்ஸ்பெக்டர், சுப்பிரண்டு, இன்னும் அதற்கு மேலுள்ள பதவிகளுக்கெல்லாம் அதிர்ஷ்டத்தால் உயர்கிறார்கள். அச்சுக் கோக்கும் வேலையிலிருந்து, பிறகு தானே ஒரு மரப்'பிரஸ்வைத்து பத்திரிகை ஒன்று தொடங்கி, உயர்ந்த மிஷின்களும் வாங்கி, பல நூல்களும் வெளியிட்டு பிரபல பண மூட்டையாகிறார்கள்! இப்படியும் சில ஆச்சுகள்!

***

பணக்காரன் வீட்டுப் பெண் ஏழைக்குக் கிடைத்து வாழ்வு உயருவதும் உண்டு. உயருகிற வாழ்விலே மனைவி கண்மூட, மறுபடியும் திக்கற்று நிற்க, அவன் மக்களைப் பெண் வீட்டார் வளர்த்து உத்தியோகஸ்தர்களாக்கிவிட, அவர்களின் நிழலிலேஇவனும் மறுபடியும் உயர்ந்து உருவுள்ள குடும்பக்காரனாகி விடுகிறதும் உண்டு. அண்ணன் உயர்ந்த பதவியில் விளங்கி, ஆபத்தில் உத்தியோகம் இழந்து சிறையும் போய்த் திரும்பி, பின் தன் தம்பியைத் தனது பழய துரையிடம்விட்டு எனக்கு உத்தியோகம் தவறினும் என் தம்பிக்காவது ஒரு வேலையைச்செய்து வையுங்களென்று வேண்ட, அவரும் இரங்கி ஒரு வேலையில் அமர்த்த, அண்ணன் உதவியால் தம்பி உயர்ந்து விடுகிறதும் உண்டு. இவ்வாறு "ஆச்சு" என்கிற வகையிலே ஒரு உருவாய் மனிதனாய் ஆன சித்தாண்டிகளெல்லாம், நெற்றி வியர்வை நிலத்தில் வீழ உழைத்துக் களைத்த உழைப்பாண்டிகள்தான். தங்கள் முயற்சியிலே அத்தனை வாழ்வையும் தேடிக்கொண்ட பெரிய சமர்த்துக்கார ஆண்டிகள்தான். அத்துடன் பெரிய பெரிய அதிர்ஷ்டக் குட்டிப் பிறபுக்களாகவும் இருந்தார்களென்பதையும் விகடன் ஒரு முக்கியப்பொருளாய்முந்திச்சொல்லவேண்டி யிருக்கிறது.

***

இவ்விதம் பதவியிலுயர்ந்து, பல வீடுகள் படைத்து, பெட்டிகளிலும் பணத்தை நிறைத்து, பாவைமார் உடலெங்கும் பொன் காய்க்கும் மரங்களாய் நிறுத்தி, பாக்கியத்தில் மேன்பட்டுக்கொண்ட சீமான்கள்—அவர்களின் காலம் முடிந்து, எழுத்து கிழிந்து, எமன் ஓலை மெய்யாகிப் பச்சைப் பல்லாக்கில் ஏறித் திரும்பி வாராமலே சாம்பலாகிவிட, இவர்களுக்குப் பின்னாலே இருக்கிறதப்பா பெரிய பெரிய கதைகள்! பெரிய பெரிய தடபுடல்கள்! குப்பை உயர்ந்து கோபுரமான வாழ்வெல்லாம் கீழே விழுந்து தூள் தூளாகிச் சிதறுகிற சின்னபின்னங்கள்! இது காலத்தின் கற்பனையோ, வேளையின் பேதமோ, விதிவசக் கொடுமையோ —யாதோ! இதற்கே விகடன் "போச்சு" பொங்கியது போச்சு என்று குறிப்பிட வந்தது! அந்த விபரீதங்களையும் சற்றே அளக்கிறேன் கேட்கிறீர்களா?

***

சிரஸ்தாதார் வாழ்ந்த வைபவ மேன்மை அவரோடு பொசுங்குகிறது! அவரது மக்கள் ஆளுக்கொரு 'அம்மா' வீடு அமர்த்திக்கொண்டு அந்த ஆயுளிலேயே அகதி அனாதைகளாகிறார்கள்! அல்லது வியாஜ்யத்தில்

செலவிட்டு விருதாவாகிறார்கள்! இது ஒரு போச்சு! இனி வேறிடத்திலே ஐந்து சகோதரர்களும் மூத்தவனுக்குட்பட்டு ஒற்றுமையிலிருக்க, மூத்தவன் இவர்களை அணைத்துவாழ, அது ஒரு மதிப்பும் பலமுமாய்ப் பெருமைப்பட வைக்க, இந்தப் பெருமை மூத்தவன் மறைந்ததும் கெட்டு, ஸகோதரர்களுக்குள் கலகமாகித் தனித்தனியாய்ப் பிரிந்து கேவலப்பட்டு விடுகிறார்கள். இவர்களின் குடும்ப கௌரவம் மூத்தவனோடு தொலைகிறது! இது ஒரு போச்சு!

***

அறுந்த விரலுக்கும் சுண்ணும்பு கொடாமல், தானும் உண்ணாமல் அத்தனை அக்கரையோடு உத்தியோக வழியிலே ஒருமிக்கச் சேர்த்து வெகு மேன்மையோடும் வாழ, அந்த மனுஷ்யனுக்குப் பின்னே அவன் பெண்ணைக்கொண்ட மருமகன் அவ்வளவுக்கும் அதிகாரியாகி செல்வமே வேறு கை மாறிவிடுகிறது! பத்து ரூபாயுடன் வெளியூர் வந்த இடத்தில் விவாகமும் ஆகி, மக்களும் குட்டிகளுமாகி, தொட்டவியாபாரமும் விருத்தியாகி விளங்கி முடிய, அவனுக்குப் பின்னே அவன் மகன் பெரிய வியாபாரங்கள் நடத்தப் போய் நஷ்டப்பட்டுப் பக்கிரியாகிவிடுகிறான்! நல்ல வாழ்விலிருந்த இடத்தில் மகப்பேறு இல்லாமல் எல்லாமுமே பாழாகிறது! மகளும் மகனும் இருக்க, அவர்களுக்கு விவாகமும் செய்து ஆநந்தமாயிருக்கும் நாளில், அவன் கண் முன்பாக இவர்கள் காலமாய்விட, அந்த மாடி வீட்டின் வாழ்வும் சின்னாபின்னப் படுகிறது!

***

500-ரூபா சம்பள உத்தியோக அந்தஸ்தில் நல்ல வாழ்வு கூடியிருக்கையில் ஏதோ பிணி தோன்றிய மாய, சவம் வெளிப்போகா முன்னம் ஒரு தபால் வருகிறது. அதிலே 700-ரூபாய்க்கு சம்பளம் உயர்த்தி யிருப்பதான உத்தரவு காணப்படுகிறது. ஐயோ! வயிற்றெரிச்சலே! இது ஒரு போச்சு! பெரிய பெரிய வித்வானாக வாழ்ந்து ஊரெங்கும் பரவிய கீர்த்தி தாங்கியவன் கண் மூடினால் அவனோடு தொலைகிறது வாழ்வு. வீட்டில் உப்பு புளிக்குக்கூட கதி காணோம்! ஹா! போச்சு! ஏராளமான சொத்து, அதி பால்யமான மனைவி, சின்னஞ் சிறு குழந்தைகள், ஐயோ! ஆண்ட மனிதன் ஆண்டவன் அடிசேர, சொத்துக்களை மேல்பார்க்க ஒப்புக்கொண்டவனே அப்படியப்படியே முழுசாக விழுங்கிவிடுகிறான்! ஆ ஆ! ராகவா, இப்படியும் ஆகவா!

***

வீடுகட்டி வாழப் பார்க்கிறதில் தன் கையிலிருந்த மிச்சமெல்லாவற்றையும் செங்கல்லிலும் சுண்ணாம்பிலும் போட்டுக் கடனும்பட்டு வீட்டைக்கட்டிப் பூரிக்க, முன்பு பட்ட கடன் வட்டி பெருகி வீட்டையே விழுங்கிவிடுகிறது! அல்லது கிரகப் பிரவேசத்துக்கு முன்னே வீட்டுக்காரன் பச்சைப் பல்லாக்கு ஏறிவிடுகிறான். வாழ்வும் தடுமாறுகிறது! தர்மங்கள் எவ்வளவோ செய்கிறவர்கள் அவர்களுக்குப் பின்னே அதைச் செய்வாரின்றிப் போகிறது! வெகு பாடுபட்டுத் தொழிற்சாலை வைத்துச் சீமானாக, ஆ! அவனது குடிவெறி எல்லா சொத்தையும் தொலைத்து விடுகிறது! பிறகு வாழ்வு கூடுவதேயில்லை! தந்தை செய்த வர்த்தகம் பிள்ளைக்கு விளங்காமல் தெரியாமல் தந்தைக்குப்பின் வர்த்தகமும் பாழாகிறது! அப்பன் வைத்த சொத்தும் வாழ்வும் கூட்டு வியாபாரத்திலே குலைந்து போகிறது! புதுக்கோட்டை ராஜா வேறு ஜாதிப் பெண்ணைக்

கொள்ளப் போய், தன் மகனுக்கு அாசுரிமை அந்தரத்தில் தொங்கும் படியாய்ப் போச்சுது! ஒரு ஆண் மகவு இல்லாமல் தஞ்சாவூர் அரசும் வாழ்வும் போச்சுது! அளவுகடந்த பேராசையின் அக்கிரமத்திலே நெப்போலியன் சக்ரவர்த்தி, ஜெர்மன் சக்ரவர்த்தி இவர்களின் வாழ்வும் போக்சுது! மந்திரக்காரர்களை நம்பப் போய் அதனாலும் நல்ல வாழ்வு போச்சுது! மனைவியின் கற்பில் சந்தேகிக்கப்போக, சமாதான வாழ்வு போச்சுது! மோட்டார் பஸ் வரப் போக, அடுத்த ஊர், பக்கத்து ஊர்களுக்குப் போய்க்கொண்டிருந்த ஜட்கா வண்டிகளின் ஆரவார வாழ்வு போச்சுது! மேலேவிகடன் "ஆச்சு" என்று கூறியவற்றிலே முக்கால் பங்கு அதை ஆக்கியவர்களுக்குப் பிறகு "போச்சு" என்று சொல்லும் படியே யாகிறது! மனைவி போனால் ஆடவன் வாழ்வும், அவன் போனால் பெண்வாழ்வும், உடற்பிறப்புபோனால் தோள்வலிவாழ்வும் போச்சு போச்சு என்று அங்கலாய்த்துப் பதறும் வாறாகவே விதி கிழிந்துவிடுகிறது! ஆக்கல், அழித்தல் என்ற இயற்கை பொருந்திய உலக அமைப்பிலே தோன்றுகிற வாழ்வு வைபவங்களுங் கூட முதலில் "ஆச்சு" என்று ஆகி, பிறகு "போச்சு" என்பதில் முடிந்துவிடுகின்றதுகளாக்கும்! ஹா! இதுவும் ஆண்டவன் கூத்துதான்!

***

"ஆச்சு"—"போச்சு" என்பதை விகடன் பிட்டுப்பிட்டு விளக்கி விட்டேன். இனி அடுத்த மாதம் பின்னும் விவரித்து "இன்னும் இருக்கு" என்பதையும் கொட்டி அளந்துவிடுகிறேன். என் நஞ்சான் குஞ்சான்களும் அதற்காக அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கட்டும்! ராம்! ராம்! சபம்! கு! சுவாஹா!!

அகட விகடம்.

தீபாவளி! தீபாவளி! புது ஜவுளி! விதவித ஜவுளி! எலிகள் கடித்த வேலைபாடமைந்த உயர்தரச் சேலைகள், துணிகள், வண்ணான் நாலுமுறை சலவை செய்தவை, வெகு அழுத்தம், சாயம் போகாதுகாரர் விலை. வேண்டியவர்கள் விகடேசனுக்கு எழுதிக்கொள்ளலாம்!

***

சுபாசுபங்களுக்குப்போய்வருவதிலுள்ள செலவுகளுக்காக ஒருவர்விகடனிடம் நொந்துகொள்ள, அதற்கு விகடன் அந்தச் செலவுகள் சரி கட்டும் வரையில் போன இடத்தில் தங்கித் தின்று தீர்த்துவிட்டுப் புறப்பட்டால், வீட்டுச்செலவு மிச்சம் ரயில் வண்டி செலவுகளுக்காயிற்றென்று திருப்திபட்டுக் கொள்ளலாமென்று தேறுதல் கூறி அனுப்பினானாம்!

***

உன் புருஷன் என்ன கொடுத்தார்?—குந்தித் தின்னும்படி உலக்கையைக் கொடுத்தார்; என் புருஷன் என்ன கொடுத்தார்?—கண்டவரை நம்பி ஏமாறி இருக்கிற சொத்தை யழிக்கும்படி பெட்டிச் சாவியைக் கொடுத்தார்—என்று இரு பெண்களும் பேசிக்கொண்டார்களாம்!

***

"நீங்கள் வரமுடியாவிட்டால் விவாக முகூர்த்தத்தை மாற்றிவைத்துக்கொள்ளலாம்" என்று சொல்வதெல்லாம் ஏய்க்கிற ஒரு வித்தை! நீ போனாலும், போகாவிடினும் கல்யாணம் எப்படியும் நடந்துவிடும். அவர்கள் உன்னை உயர்த்துகிற கௌரவத்துக்கென்று போகாமல், நீ கூட இருந்து செய்யவேண்டிய கடமைக்காகவ்

டம் போய்வா என்று விகடன் ஒருவருக்கு யோசனை கூறினனும்!

***

இன்னின்ன திட்டப்படி யமைந்த சுவராஜ்யமே எங்களுக்குத் தேவை யென்று இந்தியர்கள் "சுவராஜ்ய யதாஸ்து" ஒன்று வெளியிட்டிருக்கிறார்களே, ஐயோ! இந்தியப் பிள்ளைகள் இப்படிக் கெட்டுப் போக உரிமை கேட்கிறார்களே இன்னும் நல்ல பக்குவம் வருமுன்னே இப்படி அவசரப்படலாமா யென்று இங்கிலாந்து விகடனிடம் வந்து விசாரப்பட்டு நொந்துகொண்டதாம்!

***

புரட்டாசி மாதமப்பா. ஐந்து சனிக்கிழமைகளப்பா. ஏழுமலையான் பூஜைகளப்பா. வெகுசான தளிகைகள் அன்னதானங்களப்பா. பஜனை கோஷ்டிகளப்பா, தாசிரிகளுக்கு நல்ல வரும்படியப்பா, பேய் ஓட்டும் மாதமப்பா, நவராத்திரி கொலுவப்பா, ஆயுதபூஜை, சரஸ்வதி பூஜை, தசரா அமக்களமப்பா என்று விகடசித்தாண்டி விவரிக்கிறார்.

‘ஆத்திசூடியும்’ கொன்றை வேந்தனும்

☞ ‘ஆத்திசூடி’யிற் கூறப்பட்டுள்ள கட்டுரைகள் பல ‘கொன்றைவேந்த’னிற் காரணத்தோடும் விளக்கப் பட்டிருக்கின்றன. உதாரணமாக:—

ஆத்திசூடி.		கொன்றை வேந்தன்.	
3.	இயல்வது கரவேல்	4.	ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
6.	ஊக்கமது கைவிடேல்	86.	ஊக்கமுடைமை யாக்கத் திற்கழகு.
7.	எண்ணெழுத்திகழேல்	7.	எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்.
12.	ஔவியம் பேசேல்	12.	ஔவியம் பேசுத லாக்கத் திற் கழிவு.
19.	இணக்கமறிந்திணங்கு	48.	நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்.
29.	இளமையிற்கல்.	22.	கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள்கல்வி.
48.	சூது விரும்பேல்	31.	சூதும் வாதும் வேதனை செய்யும்.
53.	சோம்பித்திரியேல்	36.	சோம்பரென்பவர் தேம்பித் திரிவர்.
60.	தெய்வமிகழேல்	43.	தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்.
103.	ஊருடன் கூடிவாழ்.	6.	ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.